28°c
32°c
26°c
தெளிவான காலநிலை காணப்படும்

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

28 MAY 2014
பக்கம் 32

விலை: யாழ். – 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 கதிர்: 183 வள்ளுவர் ஆண்டு: 2045
வைகாசி 14, புதன் 28.05.2014

# '13' ஐ நடைமுறைப்படுத்தி அப்பாலும் செல்லுங்கள்

## ராஜபக்ஷவிடம் மோடி வலியுறுத்து; இலங்கையின் அறிக்கையில் அது பற்றி எதுவுமில்லை

கொழும்பு, மே. 28

13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதுடன் அதற்கு அப்பாலும் சென்று தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிரும்படி இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார். இருவரது சந்திப்புக்குப் பின்னர் அது பற்றிக் கருத்துத் தெரிவித்த இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சுஜாதா சிங் இதனைத் தெரிவித்தார். அத்துடன் இலங்கைக்கு வருமாறு ஜனாதிபதி மஹிந்த விடுத்த அழைப்பை பிரதமர் மோடி ஏற்றுக் கொண்டுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் இந்தச் சந்திப்புக் குறித்து இலங்கை ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இது தொடர்பில் எதுவுமே தெரிவிக்கப்படவில்லை. இலங்கை இனப்பிரச்சினை குறித்து இரு தலைவர்களும் பேசினார்கள் என்பதற்கான எந்தக் குறிப்பும் அதில் காணப்படவில்லை.

சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இரு தலைவர்களுக்கும் இடையில் பரஸ்பரம் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், புனரமைப்பு மற்றும் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பாகவும் தெரியப்படுத்தினார்.

இதன் பின்னர் மீனவர் பிரச்

21ஆம் பக்கம் பார்க்க



கைலாகு கொடுக்கும் இலங்கை ஜனாதிபதியும் இந்தியப் பிரதமரும்

## மின்னல் தாக்கி சிறுமி சாவு

### தாய், தந்தை காயம்

கிளிநொச்சி, மே 28

புதுக்குடியிருப்பு 7ஆம் வட்டாரம் சிவநகர்பகுதியில் மின்னல் தாக்கியதில் சிறுமி ஒருத்தி உயிரிழந்தார். தாயும் தந்தையும் காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த தமிழரசன் உதயகுமாரி (வயது- 6) என்ற சிறுமி உயிரிழந்தார். சிறுமி

21ஆம் பக்கம் பார்க்க

## மோடியுடைய அழைப்புக்காக காத்திருக்கிறது கூட்டமைப்பு

### தலைவர் இரா. சம்பந்தன் தெரிவிப்பு



கொழும்பு, மே 28

"வடக்கு, கிழக்கில் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடியை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவுள்ளது. இதற்காக அவரின் அழைப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்." இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

இந்தியாவின் 15ஆவது பிரதமராக நரேந்திர மோடி நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாகப் பதவியேற்றுள்ளார். இந்தப் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்கச் சென்ற ஜனாதிபதி

21ஆம் பக்கம் பார்க்க

## முடிவேதுமின்றி முடிந்தது ஒருங்கிணைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம், நேற்று மூன்றாவது நாளாகவும் நடைபெற்றது. ஆயினும் இறுதியில் எந்த முடிவும் எட்டப்படாமலேயே கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் முதலாம் நாள் அமர்வு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரண்டாம் நாள் அமர்வும், நேற்றையதினம் மூன்றாம் நாள் அமர்வும் நடந்து முடிந்

21ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்தின் ஆள்சேர்ப்பால் கூட்டத்தில் நேற்றுச் சலசலப்பு

யாழ்ப்பாணம், மே 28

பிரதேச செயலர்கள் ஊடாக இராணுவத்துக்கு ஆள்சேர்ப்பு செய்யப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் மழுப்பலாகப் பதிலளிக்க முற்பட்டனர். அதனால் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

இதுதொடர்பில் வடக்கு மாகாண விவசாயத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கேள்வியெ

21ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாவட்ட ஆசிரியர்களுள் எண்பது பேருக்கு மனநோய்

### சந்திரகுமார் எம்.பி. கூறுகின்றார்

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுள் எண்பது வரையானோர் மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்று கூறியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார்.

நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எழுந்த கல்வி தொடர்பான விவாதங்களின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுள் எண்பது பேர் வரையானோர் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தொடர்ந்தும் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் மாணவர்களுடைய எதிர்காலம் பாதிப்படையும். இந்தப் பிரச்சினைக்கு உரிய

21ஆம் பக்கம் பார்க்க

## மலக்கழிவுகள் சேர்ந்த குடிதண்ணீரே யாழில்

யாழ்ப்பாணம், மே 28

யாழ். நகரில் தற்போது மலக்கழிவுகள் சேர்ந்த குடிதண்ணீரையே மக்கள் உபயோகிக்கின்றனர் என்று ஒரு அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார் பேராசிரியர் சிவச்சந்திரன்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர் கொண்டு வருவது தொடர்பாகப் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

21ஆம் பக்கம் பார்க்க

மஹிந்தவின் வலையில் சிக்குவாரா நரேந்திர மோடி? பக். 12

## இராஜதந்திரிகள் இருவர் இன்று யாழ்ப்பாணம் வருவர்

யாழ்ப்பாணம், மே. 28

இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் மற்றும் உகண்டா வெளிவிவகார அமைச்சர் ஆகிய இருவரும் யாழ்.மாவட்டத்துக்கு இன்று வரவுள்ளனர்.

இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்டத்துக்கு வரும் உகண்டா வெளிவிவகார அமைச்சர், நல்லூர் கோயிலுக்குச் சென்ற பின்னர், யாழ். பொது நூலகம் மற்றும் கோட்டை ஆகியவற்றைச்

21ஆம் பக்கம் பார்க்க

பொம்மை என்ற பெயரில் சடலம்
பக்கம் 15

## நவிப்பிள்ளையின் அலுவலகம் இலங்கைமீது தீவிர அவதானம்

கொழும்பு, மே 28

இலங்கையின் கடந்தகால, தற்கால மனித உரிமை மீறல்கள், நீதிக்குப் புறம்பான தண்டனை, பொறுப்புக்கூறல், மீள் நல்லிணக்கப்பாடு ஆகியவை குறித்து தொடர்ந்தும் கண்காணிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது ஐ.நா. மனித உரிமைகள் சபை.

கடந்த ஏழு வருடங்களாக இலங்கையின் போர் விவகாரம் தொடர்பான விடயங்களை ஆய்வுக்கு உட்படுத்தி வரும் ஐ.நா. செயலகம், சர்வதேச சமூகத்தோடும் ஐ.நா. மனித உரிமைகள் சபையோடும் இணைந்து தொடர்ந்தும் இக்கண்காணிப்பை மேற்கொள்ளும் என்றும் இது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் ஐ.நா.சபை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது ஐ.நா. உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை தலைமையில் இயங்கும் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகராலய செயலகம், ஜெனிவாவிலுள்ள ஐ.நா. செயலகத்தில் திங்கட்கிழமை 2013

21ஆம் பக்கம் பார்க்க

# முடிவுக்கு வந்தது போராட்டம்

## பணிக்குத் திரும்புகின்றனர் சுகாதார பரிசோதகர்கள்

யாழ்ப்பாணம், மே 28

கடந்த இரு மாதங்களாக பணிக்குச் செல்லாது போராட்டம் நடத்தி வந்த பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பிரதேச சபைகளிலேயே அவர்களை நிரந்தரமாக இணைப்பதற்குரிய ஆளணி அனுமதி பெற்றுத் தரப்படும் என்று வழங்கப்பட்ட உறுதிமொழியை அடுத்துத் தமது போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் நடந்த கலந்துரையாடலின் தொடர்ச்சியாக நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில் வைத்திய அதிகாரிகள் சங்கம், பொதுச் சுகர்தார பரிசோதகர்கள் சங்கம், உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் இணைத்தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

அதன்போது, பொதுச்சுகாதார பரிசோதகர்கள் பிரதேச சபைகளில் கடமையாற்றுவார்கள், அவர்களது அலுவலகம் பிரதேச சபைகளிலேயே அமையும், மேற்பார்வை சுகாதாரத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் என்று முடிவெடுக்கப்பட்டது. அத்துடன் சுகாதாரத் திணைக்களமே பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கு சம்பளம் வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டதுடன், எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் வலி.வடக்குப் பிரதேச சபை, நல்லூர் பிரதேச சபை, வலி.தென்மேற்குப் பிரதேச சபை, கரைச்சிப் பிரதேச சபை ஆகியவற்றுக்குப் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஆளணி பெற்றுத் தரப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது.

இவற்றையடுத்து, வைத்திய அதிகாரிகள் சங்கமும், பொதுச் சுகாதார பரிசோ[illegible]கர்களும் இணைந்து ஒ[illegible]த்தில் கைச் சாத்திட்டதுடன், [illegible]று முதல் பணிப் புறக்கணி[illegible]ப்பைக் கை விட்டு, சுகாதார பரிசோதகர்கள் கடமைக்குத் திரும்புவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை கலந்துரையாடல் தொடர்பில் செய்தி சேகரிப்புக்குச் சென்ற ஊடகவியலாளர்களை வெளியேறுமாறு பணித்த வடக்கு முதலமைச்சர் அதன் பின்னரே இந்தக் கலந்துரையாடலை இரகசியமாக நடத்தியிருந்தார்.(ற-5)

உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றிய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைய, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தால், சுகாதார திணைக்களத்திற்கு மாற்றப்பட்டனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தம்மை மீளவும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு முழுமையாக விடுவிக்குமாறு கோரி கடந்த இருமாதங்களாகப் போராட்டம் நடத்தியிருந்த போதும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் அது குறித்த முன்னெடுப்புகளை மேற்கொள்ளவில்லை.

குறித்த பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் பல சுற்றுக் கலந்துரையாடல்கள் இடம்பெற்ற போதும் அதில் எட்டப்பட்ட முடிவுகள் எதுவும் வடக்கு முதலமைச்சராலேயோ, வடக்கு சுகாதார அமைச்சரினாலேயோ நடைமுறைப்படுத்தப் படாததால் சுகாதாரப் பரிசோதகர்களின் பணிப்புறக்கணிப்பு முடிவில்லாது நீண்டு கொண்டிருந்தது.

# நில அபகரிப்புக்கு எதிராக கைகோர்க்கிறது ஜ.ம.மு.

கொழும்பு, மே 28

நில அபகரிப்புக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ள போராட்டத்துக்கு ஜனநாயக மக்கள் முன்னணியும் தனது பூரண ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளது.

நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கொழும்பு மாநகர சபை உறுப்பினரும், ஜ.ம.மு வின் ஊடகச் செயலாளருமான சி.பாஸ்கரா இதனைத் தெரிவித்தார்.

"நல்லிணக்கம் நல்லிணக்கம் என்று உதட்டளவில் மட்டும் பேசுகின்ற மஹிந்த அரசு சகல விதத்திலும் தமிழ்ச் சமூகத்தை அடக்குவதிலும் ஆக்கிரமிப்பதிலுமே மேலும் மேலும் முனைப்புக்காட்டி இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. இத்தகைய அடக்குமுறைகளுக்கெதிராக மக்களை அணிதிரட்டி ஜனநாயகவழியில் மேற்கொள்ளும் சாத்வீகப் போராட்டங்களுக்கு எமது கட்சி எப்போதும் ஆதரவினைத் தெரிவித்துக் கொள்கின்றது.

ஜனநாயக வழியில் போராடும் தமிழ்த் தலைமைகள் மீது கட்டவிழ்த்து விடப்படும் பயங்கரவாத தடைச்சட்ட நடவடிக்கைகளை ஒருபோதும் நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

அந்த வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் த.ஜெகதீஸ்வரனின் கைதையும் எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.


இன்று நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்துக்கு ஜனநாயக மக்கள் முன்னணி தனது பூரண ஆதரவைத் தெரிவிப்பதோடு இந்தப் போராட்டத்தில் கட்சி மத பேதங்களுக்கு அப்பால் அனைத்து தமிழ் மக்களும் அணிதிரளுமாறு உரிமையோடு கேட்டுக் கொள்கின்றோம்." என்று அவர் ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்தார். (ற)

# ஆசிரிய உதவியாளர்கள் போராட்டம்

வலி.வடக்கு, மே 28

கோப்பாய், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறும் ஆசிரிய உதவியாளர்கள் தமது வெளி மாவட்டங்களுக்கான இடமாற்றத்தை நிறுத்தக் கோரி நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற இருந்த நிலையில் செயலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா, விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் உறுப்பினர் கஜதீபன் ஆகியோர் கலந்துரையாடியதுடன், அவர்களின் மனுவை பெற்றுக் கொண்டு இது பற்றி கவனத்தில் கொள்வதாகவும் தெரிவித்ததை அடுத்து அவர்கள் கலைந்து சென்றனர்.(ற-86)




# யாழ். வலய மேலதிக ஆசிரியர்கள் வலிகாமம் வலயத்துக்கு இடமாற்றம்

## நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் மேலதிகமாகவுள்ள 162 ஆசிரியர்களும் ஒரு வார காலத்துக்குள் வலிகாமம் கல்வி வலயத்துக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன்.

நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின்போதே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

குறித்த கூட்டததில், கல்வி தொடர்பிலான மீளாய்வின் போது ஆசிரியவளப் பங்கீடு தொடர்பில் ஆரம்பம் முதல் பல் வேறு குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டு வந்தன. ஆசிரிய இடமாற்றங்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினராலும், ஈ.பி.டி.பியினராலும் கூறப்பட்டது.

இதுகுறித்துக் கூறிய ஆளுங் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், "ஒவ்வொரு வலயங்களிலும் மேலதிக ஆசிரியர்கள் உள்ளபோதும், அவர்கள் இடமாற்றத்துக்கு உட்படாது தப்பித்துக் கொண்டிருக்கின்றார்கள். பாடரீதியான ஆசிரியர் பங்கீட்டிலும் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன."- என்று தெரிவித்தார்.

> யாழ். கல்வி வலயத்தில் 162 ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர். வலிகாமம் வலயத்தில் 77 ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

அதன்பின்னர் ஒவ்வொரு வலயங்களிலும் எத்தனை ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர் என்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் 162 ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். அதேவேளை, வலிகாமம் கல்வி வலயத்தில் 77 ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் சந்திரகுமார் ஆகியோர், "வெளிமாவட்டங்களுக்குத்தான் ஆசிரியர்கள் செல்கிறார்கள் இல்லை என்றால், மாவட்டத்தின் வலயங்களுக்குள்ளும[illegible] செல்[illegible]றார்கள் இல்லை?" என்று கேள்வி எழுப்பியது[illegible] இந்தப் பிரச்சினைக்குத் தீர்[illegible] கண்டே ஆக வேண்டும் என்று விடா[illegible]பிடியாக நின்றார்கள்.

முடிவில், யாழ்.கல்வி வல[illegible]த்தில் இருக்கும் மேலதிக ஆசிரியர்களை, வலிகாமம் க[illegible] வலயத்துக்கு இடமாற்றம் செய்வது என்று முடிவெடுக்கப்பட்டது. இந்த இடமாற்றம் ஒரு வார காலத்துக்குள் நடைபெறும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் உறுதியளித்தார்.

அப்போது, இவ்வாறு இடமாற்றங்கள் செய்யப்பட்டாலும் அவை இடமாற்ற நியமத்துக்கு உட்பட்டே மேற்கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாராசா அங்கு சுட்டிக்காட்டினார்.(ற-5)

# ஆசிரியர்களின் எதிர்ப்பையடுத்து இடமாற்றங்கள் நிறுத்தப்பட்டன

யாழ்ப்பாணம், மே 28

வெளி மாவட்டங்களில் சேவைக் காலத்தை முடித்து யாழ்.வலயத்துக்கு இடமாற்றம் கோரிய ஆசிரியர்கள், வலிகாமம் கல்வி வலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டபோதும், ஆசிரியர்களின் எதிர்ப்பால் இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்பட்டு யாழ். கல்வி வலயத்தில் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

குறித்த ஆசிரியர்கள் பிறமாவட்டங்களில் சேவைக்காலத்தை நிறைவு செய்திருந்தும் மீள யாழ்.மாவட்டத்துக்கு இடமாற்றம் வழங்கப்படாத காரணத்தினால் கடந்த 28 ஆம் திகதி வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனையடுத்து அமைச்சின் உதவிச் செயலாளர், யாழ். வலயப் பணிப்பாளர், இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் முன்னிலையில் ஜூன் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் ஆசிரியர்கள் கோரிய வலயங்களுக்கு இடமாற்றம் வழங்குவதாக உறுதியளித்திருந்தார். ஆனால் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் அவர்கள் கோரிய வலயத்தைத் தவிர்த்து வலிகாமம் கல்வி வலயத்துக்கு இடமாற்றம் செய்யப்படுவதாக கூறப்பட்டிருந்தது.

அதனால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கடந்த சனிக்கிழமை கலந்துரையாடியிருந்தனர். இது தொடர்பாக ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சங்கத்துக்குத் தெரிவித்திருந்தனர்.

அடுத்த கட்ட நடவடிக்கைக்கு முன்னர் இலங்கை ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அமைச்சில் உதவிச் செயலாளருடன் கலந்துரையாடினர். அந்தக் கலந்துரையாடலில் குறித்த ஆசிரியர்களின் கோரிக்கைக்கு இணங்க அவர்களை யாழ்.வலயத்திலேயே நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உதவிச் செயலாளர் உறுதியளித்துள்ளார் என்று ஆசிரியர்கள் தெரிவித்தனர். (ற-4)

## நிழற்படப் பிரதியை பெறுவதற்கு நீண்டதூரம் அலையும் நிலை

### பச்சிலைப்பள்ளியில் மீள்குடியமர்ந்தோர்

பளை, மே 28
பச்சிலைப்பள்ளி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள போதிலும் மின்சாரத் தேவைகள் சிலவற்றுக்கு பத்து கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள பளை நகர்ப் பகுதிக்கு செல்லவேண்டியுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பிரதேசத்தின் பல கிராமங்களுக்கு மின்சார விநியோகமும் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அந்தப் பகுதியில் நிழல் பிரதி செய்யும் நிலையங்கள் இல்லாததால் அவ்வாறான தேவைக்காக பளைக்கு அல்லது பரந்தனுக்குச் செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட கிழக்குப் பிரதேசத்தில் புதுக்காட்டுச் சந்தி தொடக்கம் இயக்கச்சி வரையான பகுதிகளில் சுமார் பத்துக்கு மேற்பட்ட கிராமங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.

அந்தக் கிராமங்களில் வதியும் மக்களுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் உதவிகளைப் பெறுவதற்கு விண்ணப்பத்துடன் உரிய ஆவணங்களின் நிழற்படப் பிரதிகளும் இணைக்கப்பட வேண்டியுள்ளன.

ஆவணங்களின் நிழற்படம் பிரதிகள் எடுப்பதற்கு உரிய தனியார் நிலையங்கள் இல்லாததால் 10 கிலோ மீற்றர் தூரம் வரைசெல்ல வேண்டியுள்ளது.

இயக்கச்சி சந்தியில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் முள்ளிப்பற்று உப அலுவலகம் இருக்கின்ற போதிலும் அலுவலக கட்டடத்துக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்பட வில்லை.

பிரதேசத்தில் வீடமைப்புத் திட்டங்களுக்கு உப அலுவலகத்தில் பெறப்படும் படிவங்களுடன் இணைப்பதற்கு ஆவணங்களின் நிழற்படப் பிரதிகள் தேவைப்படு கின்றன.

குறித்த உப அலுவலகத்துக்கு மின்சார இணைப்பு வழங்கி நிழற்படப் பிரதி இயந்திரமும் வழங்கப்பட்டால் பிரதேச மக்களுக்கு ஏற்படும் செலவீனங்கள் தவிர்க்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## மீனவர்களின் பல லட்சம் ரூபா பெறுமதியான வலைத் தொகுதிகள் வெட்டுண்டு பெரும் நாசம்

### மன்னாரில் இந்திய 'நாட்டுப் படகுகள்' அத்துமீறல்




இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீன்பிடிப் பட்குகளின் வருகை கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளன. இந்தப் படகுகள் மன்னார் மாவட்ட மீனவர்களின் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகளை சேதப்படுத்தியுள்ளன என்று மன்னார் மாவட்ட மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்கள் நாட்டுப் படகுகள் மூலம் தற்போது இலங்கை கடல் பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக தலைமன்னார், பேசாலை, வங்காலைப்பாடு, சிறுத்தோப்பு, காட்டாஸ்பத்திரி, கருசல் ஆகிய கிராம கடற்பரப்புக்களில் பல நூற்றுக்கணக்கான இந்திய மீனவர்கள் நாட்டுப்படகுகளில் இரவு நேரங்களில் சட்ட விரோதமான முறையில் வந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

இதன் போது குறித்த கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடலில் போட்டுள்ள பல இலட்சம் ரூபா பெறுமதியான நண்டு மற்றும் கணவாய் பிடிக்கும் வலைகளை வெட்டி சேதப்படுத்தி விட்டுச் செல்வதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதே வேளை பேசாலை கிராமத்தைச் சேர்ந்த சுமார் 40 இற்கும் மேற்பட்ட மீனவர்களின் வலைத்தொகுதிகள் இவ்வாறு சேதப்படுத்தப்பட்டுள்ளன என்றும், இவ் வலைத் தொகுதிகள் பல இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்தவை என்றும் பேசாலை மீனவ சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தலைமன்னார் பொலிஸ் நிலையத்திலும், மன்னார் மாவட்ட கடற்தொழில் பணிமனையிலும் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

மீனவர்கள் கடன் அடிப்படையில் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகளை கொள்வனவு செய்து மீன்பிடியில் ஈடுபடுகின்ற நிலையில் குறித்த வலைகளை இந்திய மீனவர்கள் தங்களின் நாட்டுப்படகுகளை வைத்து சேதப்படுத்து கின்றனர். இதனால் வலைக்குரிய கடன் பணத்தை எவ்வாறு செலுத்த முடியும் என்ற ஏக்கத்தில் தாம் உள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவித்தனர். (ஒ-56)



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி இரத்த கொடையாளர் கழகத்தால் கல்லூரியில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை இரத்ததானம் செய்யப்பட்டுள்ளது. வருடம் தோறும் கல்லூரி அதிபர் எஸ்.கிருஷ்ணகுமார் தலைமையில் இந்த இரத்ததான நிகழ்வு நடைபெற்று வருகின்றது. நிகழ்வில் மந்திகை ஆதார வைத்திய சாலைக்கு கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட சுமார் 75 பேர் இரத்ததானம் வழங்கினர். (ஒ-422)

## இயக்கச்சிச் சந்தையின் குறைபாடுகளுக்கு தீர்வு

தென்மராட்சி, மே 28
இயக்கச்சிச் சந்தையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்திக்க சபை நிதி உதவியுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பளை பிரதேச சபை செயலாளர் சி.சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

வர்த்தக நிலையங்களுடன் கூடிய சந்தை வளாகத்தின் மூன்று பக்கமும் முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டு ஏ-9 வீதியுடனான முன்பக்க வேலியும் கதவுடன் (கேற்) அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தைக்கு வரும் பொது மக்கள், வியாபாரிகள் ஆகியோரின் நலன் கருதி மூன்று இடங்களில் தலா ஆயிரம் மீற்றர் கொள்ளளவுடைய பிளாஸ்ரிக் தொட்டிகள் வைக்கப் பட்டு தினமும் பவுசர் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படுவதாகவும் இந்தத் தொட்டி மூலம் ஏ-9 வீதியில் செல்வோர் பயன்படுத்தக் கூடிய வகையில் குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இயக்கச்சி சந்தை வளாகத்தில் சேதமடைந்து காணப்பட்ட இரு மலசல கூடங்கள் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக் கப்பட்டு பொது மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-9)

## சாரணியர் சங்கம் ஊடாக மாணவரால் யாழ்.மாவட்டத்தில் செயற்றிட்டங்கள்

### யாழ்.மாவட்ட ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.மே.28
சாரணியர் சங்கத்தின் ஊடாக மாணவர்களால் யாழ்.மாவட்டத்தில் பல்வேறு செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது அவர்களுடைய தலைமைத்துவப் பண்பை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பாக அமைவதுடன் மக்களுக்கும் நன்மை தரக்கூடியதாக உள்ளது என்று சாரணியர் சங்கத்தின் யாழ்.மாவட்ட ஆணையாளர் செ.தேவரஞ்சன் தெரிவித்தார்.

ஜனாதிபதி விருதுக்கான சமூக வேலைத்திட்டத்தின் கீழ் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் த.அஜந்தராஜினால் யாழ். மாவட்ட றோட்டறிக் கழகத்தின் அனுசரணையுடன் யாழ். சைவ பரிபாலனசபை வளாகத்தில் புனரமைப்புச் செய்யப்பட்ட பூங்காவின் திறப்புவிழா நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்:-
பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஜனாதிபதி விருதுக்காக அவர்களை ஊக்குவிக்க சமூக நலத்திட்டங்கள் தேவைகளுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றன.

இந்தச் செயற்திட்டம் அவர்களது முயற்சியாகவே அமைந் துள்ளது. இதனோடு இணைந்த சாரணிய மாணவர்கள் தாமாக முன்வந்து வித்தியாசமான பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். சிறு வயதிலேயே அவர்களது தலைமைத்துவப் பண்பை விருத்தி பெறச் செய்ய இது வாய்ப்பளித்துள்ளது.

'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பர். இவை யெல்லாம் சமூகப் பணிகளுக் காகவே மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவித்தார்.




ஆசிரியர் இரா.செல்வவடிவேல் பூங்காவை திறந்துவைத்தபோது

**பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஜனாதிபதி விருதுக்காக அவர்களை ஊக்குவிக்க சமூக நலத்திட்டங்கள்**

ஆசிரியர் இரா.செல்வவடிவேல் பூங்காவைத் திறந்து வைத்ததைத் தொடர்ந்து பூங்காவின் பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மரக்கன்றுகள் நடப்பட்டன.

நிகழ்வில் யாழ்.மாவட்ட றோட்டறிக்கழகத்தைச் சேர்ந்த எஸ்.நிமல்சன், யாழ். இந்துக் கல்லூரியின் ஆசிரியர்கள், மற்றும் சாரணிய மாணவர்களும் கலந்துகொண்டனர். (வ-1[illegible])

# இலங்கைத் தமிழரை பாதுகாப்பார் மோடி


பொன். ராதாகிருஸ்ணன்

சென்னை,மே.28
இலங்கை தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க புதிய இந்திய பிரதமர் அர்ப்பணிப்புடன் செயற்படுவார் என்று மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
மோடி, இலங்கைத் தமிழர்களைப் பாதுகாத்து அவர்களின் உரிமைகளையும் பாதுகாப்பார்.
இலங்கை ஜனாதிபதியின் வருகையை யொட்டி நேற்று முன்தினம் பதவிப்பிரமாண நிகழ்வை தமிழக கட்சிகள் புறக்கணித்தமை குறித்து கருத்துரைத்த அவர், தமிழர்களின் பிரச்சினை குறித்து இந்திய அரசாங்கம் கரிசனை கொண்டுள்ளது. எனவே இலங்கை தமிழர்கள் பயம் கொள்ளத் தேவையில்லை என்று குறிப்பிட்டார். (வ)

# மருத்துவ சேவைக்கான இடமாற்றத்தில் நெருக்கடி

கொழும்பு, மே.28
மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு சுகாதார விநியோகப் பிரிவில் வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்துக்கு ஆட்சேபனை வெளியிடப்பட்டுள்ளது. இதனை அடுத்து மருத்துவ சேவை இடமாற்றத்தில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது.
இதன்படி, சிரேஷ்ட நிர்வாக சேவையின் மருத்துவ அதிகாரிகளின் இடமாற்றங்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளதாக கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய மத்திய செயற்குழு உறுப்பினர் ஹரித்த அலுத்கே தெரிவித்தார்.
இதுதொடர்பான நடவடிக்கைகளை எடுக்குமாறு மேல் மாகாண ஆளுநரை வலியுறுத்திய போதும், இதுவரை எந்தவித பதில்களும் கிடைக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

**முதல் கட்டமாக இன்று தேசிய மருத்துவமனையில் இருந்து கொழும்பு கோட்டை வரை எதிர்ப்புப் பேரணி ஒன்றும் முன்னெடுக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டார்.**

இதுதவிர, தாதியர் தொழிநுட்ப ஒன்றியத்தால் நேற்று முன்தினம் கொழும்பில் செய்தியாளர் சந்திப்பொன்று நடத்தப்பட்டது.
இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய, இணை சுகாதார பட்டப்படிப்பை மட்டுப்படுத்துவதற்கு எதிராக மாணவர்கள் கொண்டு செல்லும் போராட்டத்துடன் இணைந்து செயற்படவுள்ளதாகத் தெரிவித்தார். இதன் முதல் கட்டமாக இன்று தேசிய மருத்துவமனையில் இருந்து கொழும்பு கோட்டைவரைஎதிர்ப்புப் பேரணி ஒன்றும் முன்னெடுக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டார்.
அதேவேளை, அகில இலங்கை சுவசேவா சங்கம் நேற்று முன்தினம் எதிர்ப்புப் பேரணி ஒன்றை நடத்தி யிருந்தது.
இதனிடையே, சுகாதார சேவையாளர்கள் நேற்று முன்தினம் சுகவீன விடு முறைப் போராட்டத்தை முன்னெடுத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

# கிளிநொச்சியில் நாமல்



*கிளிநொச்சிக்கு பயணம் மேற்கொண்ட அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.*
*நேற்று முற்பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் 'மஹிந்தோதய' திட்டத்தின் கீழான கற்கை நெறிகளை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள இராணுவ ஒத்துழைப்பு மையத்துக்குச் சென்று தகவல் தொழில் நுட்ப கற்கை நெறியினை தொடர்வதற்கான கணினிகளை கிளிநொச்சி இராணுவத் தளபதி சுனந்த ரணசிங்கவிடம் கையளித்தார்.*
*(ஜ-55-18)*

**விற்பனைக்கு**
இன்று மட்டும்
12 முட்டை 100 /=
மந்திகை சந்தை
கோழிக்கடை
0775086721
(48536)

# மூவரும் இரகசியமாக நாடு கடத்தப்பட்டனர்

## மலேசிய மனித உரிமை அமைப்பு கண்டனம்



மலேசியாவில் புலிச் சந்தேக நபர்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவரும் இரகசியமாக நாடு கடத்தப்பட்டுள்ளதாக மலேசிய மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு (சுராம்) கண்டனம் தெரிவித்துள்ளது.
சட்ட அணுகுமுறைகள் இன்றி அவர்கள் இலங் கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளதாக அந்த அமைப்புகுற்றம்சுமத்தியுள்ளது.
மலேசிய பாதுகாப்பு அதிகாரிகள் இரகசியமான முறையில் மூன்று இலங்கை யர் களை நேற்று முன்தினம் நாடு கடத் தியதாக நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சுராம் அமைப்பின் பேச்சாளர் ஆர்.தேவராஜன் தெரிவித்துள்ளார்.
நாடு கடத்தப்பட்ட மூவரில் ஒருவர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி நீவ் சின் யெவ் இந்த ஊடக சந்திப்பில் பங்கேற்றிருந்தார்.
சந்தேக நபர்களை நாடு கடத்துவது தொடர்பில் அவர்களது உறவினர்கள், சுராம் மற்றும் ஐக்கிய நாடுகள் அகதிகள் தூதரகத்துக்கு முன்னறிவித்தல் விடுக்கப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.
நாடு கடத்தப்படுவதற்கு முன் 11 நாள்கள் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டதாகவும் எனவே சட்ட ஆலோசனைகள் பெற நேரம் மிகவும் குறுகியதாக காணப்பட்டது என்றும் சட்டத்தரணி நீவ்சின் யெவ் தெரிவித்துள்ளார். இந்தவிடயம் குறித்து பொலிஸாருடன்கடந்த தினங்களில்சுமுக மாகச்செயற் பட்டதால் பிரச்சினை இலகுவில் தீரும் என்று எதிர்பார்த்திருந்ததாக ஆர்.தேவராஜன் தெரிவித்துள்ளார்.
ஆனால் பொலிஸார் தங்களிடம் பொய் கூறியதாகவும் பொலிஸ் பொறுப்பாளர் கலிட் அபு பக்காிடம் சந்தேகநபர்கள் குறித்து வினவியபோது பதில் கிடைக்கவில்லை எனவும் பின்னரே அவர்கள் நாடு கடத்தப்பட்டதைத் தாம் அறிந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (வ)

# புராதன சிறப்பான இடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்

கொழும்பு,ம.28
இலங்கையில் உள்ள புராதன சிறப்பு வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்கு முறையான வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.
அரசு இதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று களனி பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் ஆய்வுப் பிரிவின் பேராசிரியர் பிரசாந்த குணவர்தன தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், நாட்டின் புராதன பிரதேசங்களைப் பாதுகாக்க வேண் டியதன் அவசியத்தை வலியு றுத்தினார்.
இந்தநிலையில், புராதன பிரதேசங்களாக பாதுகாக்கப்பட வேண்டிய ஆயிரத்து 261 இடங்கள் இனங்கண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவற்றில் 90 சதவீதமானவை புதையல் தோண்டலுக்காக சேதமாக்கப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக் காட்டினார். (வ)

**மரண அறிவித்தல்**



**திருமதி. ஆச்சிமுத்து வேலுப்பிள்ளை**
காரைநகர் கோவளத்தை பிறப்பிடமாகவும் வேதரடைப்பை வசிப்பிடமாகவும் கொண்டதிருமதி. ஆச்சிமுத்து வேலுப்பிள்ளை நேற்று (27.05.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தாமோதரம் பிள்ளை- வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற சிறாப்பர் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் சுந்தரலிங்கம்,பேரானந்தசிவம் (ஆசிரியர், கிளிநொச்சி மகா வித்தியாலயம்), உருத்திரேஸ்வரன் (ஆசிரியர் யாழ்.இந்து மகளிர் கல்லூரி), வடிவாம்பிகை,சிவநேசன்(ஆசிரியர் யாழ்ற்ரன்கல்லூரி), பரஞ்சோதி (லண்டன்), ஆகியோரின் அன்பு தாயாரும் கோபாலபிள்ளை கமலாம்பிகை,கலா, கல்யாணி, கலாநிதி(ஆசிரியர் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.),சுகந்தினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சசிதரன்,அகிலன்,ஜனகன், உமாகாந்தன்,கஜீபன், ரேகா,நவரூபன், சங்கீதா,கஸ்தூரி, துளசிகா, சாம்பவி,சனாதனன்,காலஞ்சென்ற டிலாணி, மற்றும் சங்கவி, பிருந்தன், பவித்திரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தெய்வானை, திருநாவுக்கரசு,பாலாமணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவகுரு,தேவாமிர்தம் மற்றும் இரத்தின சிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் வேதரடைப்பு இல்லத்தில் நாளை (29.05.2014) வியாழக்கிழமை மு.ப. 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடைஇந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
வேதரடைப்பு, காரைநகர்
தகவல்:
பிள்ளைகள்

**மரண அறிவித்தல்**

**திருமதி சுவர்ணகுமாரி இரகுநாதன்**
**(இரகுநாதன் ரீச்சர்)**



அளவெட்டி தெற்கை பிறப்பிடமாகவும், வடலியடைப்பு பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியை (யா/ பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி) திருமதி சு.இரகுநாதன் அவர்கள் நேற்று 27.05.2014 செவ்வாய்க் கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் மனோன்மணி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை அன்னலட்சுமி தம்பதியரின் மருமகளும், இரகுநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் யா/சங்கானை சிவப் பிரகாச மகா.வித்) அவர்களின் அன்பு மனைவியும், குகப்பிரியை, (கொழும்பு) குகதர்சினி (பிரான்ஸ்) குகவதனி (மக்கள் வங்கி கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செ.பாலசுப்ரமணியம் த. உதயகுமார், சு.பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நாரணி,கிருசான்,ஜசானி, வருணி, மிருணன், பிரவீனன், அருட்சயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.05.2014 புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பண்டத்தரிப்பு விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
தகவல்:
குடும்பத்தினர்

## தனது இலங்கைப் பயணத்தை உறுதிப்படுத்தினார் பாப்பரசர்



பாப்பரசர் பிரான்ஸிஸ்

கொழும்பு.மே 28

புனித பாப்பரசர் பிரான்ஸிஸ் எதிர்வரும் ஜனவரியில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று வெளிநாட்டுச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பயணம் மேற்கொண்டிருந்த வேளை பாப்பரசர் இலங்கை தொடர்பில் செய்தி யாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த மாத முற்பகுதியில் இலங்கையின் காடினர் மெல்கம் ரஞ்சித்திடம் பாப்பரசர் தமது இலங்கை வருகை குறித்து கலந்து ரையாடியிருந்தார்.

இதன்போது, போரால் பாதிக்கப்பட்ட இலங்கையில் காயங்களை குணப்படுத்த நல்லிணக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தார். (ச)

# மீட்கப்பட்ட உலங்குவானூர்தியை அடையாளம் காண்பதற்கு நிபுணர்

### இலங்கை விமானப்படைக்குள் குழப்பம்

கொழும்பு.மே 28

முல்லைத்தீவுக்கு வடக்கே சாலைக் கடற்பரப்பில் மீட்கப்பட்ட உலங்குவானூர்தியை அடையாளம் காண்பதற்காக நிபுணர் ஒருவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவுக்கு வடக்கே சாலைக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ள சிதைந்து போன உலங்குவானூர்தியின் பாகங்களை அடையாளம் காணும் முயற்சியில் இலங்கை விமானப்படை இறங்கியுள்ளது.

சாலைக்கு கிழக்கே 10 கடல் மைல் தொலைவில் கண்டு பிடிக்கப்பட்ட இந்த உலங்கு வானூர்தியின் பாகங்களை, இலங்கை கடற்படை நேற்று முன்தினம் மீட்டுள்ளது.

ரணகஜ என்ற தரையிறங்கு கலமும், அதிவேகத் தாக்குதல் படகும் இணைந்து இந்த மீட்புப்பணியில் ஈடுபட்டன.

இதையடுத்து மீட்கப்பட்ட இந்த உலங்கு வானூர்தியின் பாகங்கள், கடல் நீரில் நீண்டகாலமாக இருந்ததால், அடையாளம் காணமுடியாதவாறு துருப்பிடித்துள்ளன. அதனால், இந்த உலங்கு வானூர்தியை அடையாளம் காண்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படை, இந்தப் பகுதியில் பல உலங்குவானூர்திகளை இழந்திருப்பதால், அவற்றில் இது எதுவாக இருக்கலாம் என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது. அதனரல், இந்த உலங் குவானூர்தியை அடையாளம் காண்பதற்காக நிபுணர் ஒருவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அவராலும் அதை அடையாளம் கண்டுபிடிக்க முடியாது போனால் மீட்கப்பட்ட பாகங்களைக் கொழும்புக்கு எடுத்துச் சென்று மேலதிக ஆய்வுகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. (ச)



மீட்கப்பட்ட ஹெலி

## இணையத்தளங்கள் தடை: அடிப்படை உரிமை மீறல்

### மனித உரிமை ஆணைக்குழு குற்றச்சாட்டு

கொழும்பு.மே 28

இலங்கையில் இயங்கும் இணையத்தளங்களை தடை செய்தமை, நாட்டின் அரசமைப்பில் மக்களுக்கு உறுதிப் படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமையை மீறும் செயல் என்று மனிதஉரிமைஆணையகத்தின் தலைவர் பிரதீபா மாஹானாமஹேவா தெரிவித்தார்.


இவ்வாறு இணையத்தளங்களை தடை செய்வதன் மூலம் அரசமைப்பின் 14 (1) (அ) சரத்தில் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தை மீறும் செயல் என்று அவர் கூறினார்.

பல செய்தி இணையத்தளங்களை அரசு தடை செய்துள்ளமைக்கு எதிராக இணையத் தளங்களுடன் தொடர்புடைய ஊடகவியலாளர்கள் இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவில் பல முறைப்பாடுகளைச் செய்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித் தார். (ச)

## ரணிலின் அழைப்புக்கு பதில் அளிக்காத மோடி



ரணில்



மோடி

கொழும்பு.மே 28

புதிய இந்தியப் பிரதமருக்கு வாழ்த்து தெரிவிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பல முறை முயற்சித்த போதிலும் அவரது தொலைபேசி அழைப்புக்கு மோடி பதிலளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அதனால் கோபம் அடைந்த ரணில் விக்கிரமசிங்க, நரேந்திர மோடி குறித்து தனக்கு நெருக்கமானவர்களிடம் விமர்சன ரீதியான கருத்துக்களை முன்வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க, மோடிக்கு எதிராக கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்தியத்தேர்தல்வெற்றி மோடியின் வெற்றி என சிலர் கூறிய போதிலும் அது அவரது வெற்றி யல்ல எனவும் அது பாரதீய ஜனதா கட்சியின் வெற்றியெனவும் ரணில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## இதுவரை 10,000 பேர் டெங்குநோயால் பாதிப்பு

கொழும்பு.மே 28

நாட்டில் இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் 10,000 இற்கும் மேற்பட்டோர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இந்தக் காலப் பகுதிக்குள் 33 பேர் உயி ரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு பிரதம பணிப்பாளர் பபா பலிகவடன தெரிவித்தார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் டெங்கு நோயால் உயிரிழப்போர் வீதம் குறைவடைந்துள்ளது என்று அவர் கூறினார்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் பாடசாலை மட்டத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் மாற்றமடைந்துள்ள காலநிலையால் டெங்கு பரவும் அபாயம் அதிகரித்துள்ளது.

டெங்கு நோய் சிகிச்சை தொடர்பில் வைத்தியர்கள், தாதியர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

சுகாதார உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விசேட விழிப்புணர்வு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நகர்ப்புறங்களிலேயே டெங்கு பாதிப்புகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. நகர்ப்புற மக்கள் தமது சுற்றுச் சூழலைச் சுத்தப்படுத்துவதில் மேலும் அக்கறை காட்டுவது அவசியம் என்றும் அவர் மேலும் கூறினார். (ச)

## சிறையில் இல்லாத மீனவரை விடுவிக்க கூறினார் மஹிந்த

### அதிகாரிகளுக்கு குழப்பநிலை

கொழும்பு.மே 28

இந்தியப் பிரதமர் பதவியேற்பு நிகழ்வுக்குவிடுக்கப்பட்ட அழைப்பையடுத்து, இலங்கை சிறையில் உள்ள அனைத்து இந்திய மீனவர்களையும் விடுதலை செய்ய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார். எனினும் அந்த உத்தரவை எப்படிச் செயற்படுத்துவது என்று தெரியாத குழப்ப நிலை, கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சின் அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கை சிறைகளில் இந்திய மீனவர்கள் எவரும் இல்லை என்று கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சின் செயலர் நரேந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதி கொழும்பில் இந்திய - இலங்கை மீனவர்களின் பேச்சுக்கள் தொடங்க முன்னரே அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டு விட்டனர் என்றும் அவர் கூறினார்.

இப்போது இந்திய மீனவர்கள் எவரும் எமது தடுப்புக்காவலில் இல்லை என்று அவர் கூறினார். (ச)

## இனவாதிகள் நீண்ட காலம் நிலைத்திருக்கவே முடியாது

### ராஜித கூறுகிறார்



ராஜித சேனாரட்ண

கொழும்பு.மே 28

இனவாதிகள் மற்றும் மதவாதிகளினால் நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்க முடியாது என்று மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

மத்துகமவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

கௌதம புத்தர் இனவாதம், மதவாதம் மற்றும் அடிப்படைவாதத்தை முற்று முழுதாக நிராகரித்தார் என்று அவர் கூறினார்.

மனித நேயத்தை எவ்வாறு வளர்த்துக் கொள்வது என்பது பற்றியே கௌதம புத்தர் வழிகாட்டி வந்துள்ளார் என்று அவர் தெரிவித்தார்.

இந்திய இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது முதல் நான் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்துள்ளேன் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# ஜனாதிபதி முறைமையை ஒழித்தால் சிறுபான்மையினருக்குச் செல்வாக்கு

### ஹெல உறுமய கட்சி தெரிவிப்பு

கொழும்பு.மே 28

தொகுதிவாரிதேர்தல்முறையை நடைமுறைப்படுத்தாது ஜனாதிபதி முறைமையை மாற்றும் போது அது சிறுபான்மை சமூகத்தினரின் செல்வாக்கை அதிகரிக்க வைக்கும் என்று ஹெல உறுமய கட்சி வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் தொகுதிவாரி தேர்தல் முறையை நடைமுறைப்படுத்திய பின்னரே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கும் ஜனாதிபதி பொதுவேட்பாளராக களமிறங்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சோபித தேரருக்கும் இடையில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை இடம்பெற்ற பேச்சின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து நாட்டில் 17 ஆவது அரசமைப்பை ஏற்படுத்தி ஊழல்களை ஒழிப்பதற்கு இரண்டு கட்சிகளும் இணக்கம் வெளியிட்டுள்ளன.

> நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எனினும் தொகுதிவாரி தேர்தல் முறையை நடைமுறைப் படுத்தாது ஜனாதிபதி முறையை மாற்றும் போது அது சிறுபான்மை சமூகத்தினரின் செல்வாக்கை அதிகரிப்பதுடன் பிரிவினைவாதக் கொள்கைகளுக்கும் வழிவகுக்கும் என்று ஜாதிக ஹெல உறுமய சுட்டிக்காட்டியுள்ளது. (ச)

## மேய்ச்சல் தரை அபகரிப்பை கண்டித்து ஆர்ப்பாட்டம்



ஆர்ப்பாட்டத்தில் பண்ணையாளர்கள்

அம்பாறை.மே 28

அம்பாறை, திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள வட்டமடு மேய்ச்சல் தரைக்குச் சொந்தமான நிலப்பரப்பை அத்துமீறி விவசாயிகள் ஆக்கிரமித்து வருகின்றனர். அதனைக் கண்டித்து அப்பகுதி கால்நடை வளர்ப்போர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வட்டமடு மேய்ச்சல் தரைப் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையாக அரசால் வட்டமடு பிரதேசத்தில் 4 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டதை அடுத்து கால்நடை வளர்ப்பாளர்கள் அந்த நிலப்பரப்புப் பிரதேசத்தைத் தமது கால்நடைகளின் மேய்ச்சலுக்காகப் பயன்படுத்தி வந்தனர். பின்னர் நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக அவர்கள் அங்கு செல்லமுடியாத சூழ்நிலை ஏற்பட்டதையடுத்து காணிச் சட்டத்துக்கு முரணாகப் போலி தற்காலிக காணிப் பத்திரங்களைப் பெற்று காடுகளை அழித்து சிலர் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலில், கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை மேய்ச்சல் தரைப்பகுதிக்குக் கொண்டு சென்றபோது அந்த நிலப்பரப்பை அத்து மீறி சிலர் ஆக்கிரமித்துள்ளதை அடுத்தே கால்நடை வளர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச)

# கிழக்கு மாகாண சபையில் விரைவில் வரும் மாற்றம்

## பிரதித் தவிசாளர் சுபைர் தெரிவிப்பு



எம்.எஸ்.சுபைர்

அம்பாறை.மே 28

கிழக்கு மாகாணசபை விரைவில் வினைத்திறன்மிக்க மாகாணசபையாகத் திகழத்தக்க மாற்றங்கள் ஏற்படவுள்ளன. இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.சுபைர் தகவல் வெளியிட்டுள்ளார்.

காவத்தமுனை அல் - அமீன் வித்தியாலய பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மே[illegible] தெரிவித்ததாவது:-

பல்வேறு குற்றச்சாட்டுக்களுடனும், விமர்சனங்களுக்கு மத்தியிலும் செயற்பட்டுவரும் கிழக்கு மாகாணசபை மிக விரைவில் வினைத்திறன் மிக்க மாகாணசபையாகவும், மாகாண மக்களின் நலன் பேணும் முக்கிய செயற்பாடுகளைக் கொண்ட சபையாகவும் இயங்கும்.

இதற்கான முக்கிய மாற்றங்கள் விரைவில் நிகழும்.

இந்த மாற்றத்தினூடாகக் கிழக்கு மாகாணம் பல அபிவிருத்திகளைக் காணவிருப்பதுடன் ஏனைய மாகாணசபைகளை விடப் பலம் பொருந்தியதாகவும் திகழும்.

இந்த நிலைமைக்கு கல்குடா மக்கள் பெரும் பங்காளிகளாகத் திகழ்வரெனவும் நம்புகின்றேன்.

இந்த அடிப்படையில் கடந்த காலங்களில் நமது முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீரலியின் அரசியல் அதிகாரத்தில் சற்றுத் தொய்வு நிலை ஏற்பட்டாலும் கல்வித்துறை மேம்பாடு தொடர்பில் அவரது சேவை குறைந்தோ, தளர்ந்தோ போய்விடவில்லை.

இதன்படி கல்குடாப் பிரதேசத்தில் கல்வித்துறை வளர்ச்சியடைந்துள்ளதுடன் மட்டக்களப்பு மாவட்ட தமிழ், முஸ்லிம் பாடசாலைகளிடையே கல்வியில் போட்டியும் ஏற்பட்டுள்ளது.

மேலும் கல்குடாவிலுள்ள படித்த சமூகம் கிடைக்கக்கூடிய மாகாணசபை மாற்றத்தினூடாக, கல்குடா மக்களின் அரசியல் தலைமைத்துவத்தைக் கடந்த கால கசப்புணர்வுகளை மறந்து உறுதிப்படுத்திக் கொள்வதற்கும்,

இந்த மாற்றத்தினூடாக முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை முறியடித்து நிம்மதியாக வாழ வழிவகை செய்யவும் பங்களிப்புச் செய்ய முன் வரவேண்டும்.

கல்குடா மண்ணில் பிறந்த எமது முன்னாள் அமைச்சர் அமீரலியின் ஆற்றல், திறமை, மக்களுக்கான சேவைச் செயற்பாடுகள் தொடர்பான தெளிவான பார்வை நாட்டு அரசியல் தலைவர்களிடமுள்ளது. - என்றார். (ச-30)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் இராசமலர் நடராசா



எம்மைப் பெற்றெடுத்து
பாசத்துடன் வளர்த்து
ஆளாக்கிய எங்கள்
அன்பான அம்மாவே !
நீங்கள் எங்களுடன்
வாழ்ந்த காலங்களும்
உங்களது அன்பான
அரவணைப்பும், இனிமையான
வார்த்தைகளும் என்றென்றுமே
எங்கள் இதயத்தில் நிலைத்திருக்கும்.
உங்களது ஆத்மா சாந்தியடையவும்
நீங்கள் என்றும் இறைவனது
நிலைபேறான அன்பை
அனுபவிக்கவும் நாங்கள் எம்
பெருமானிடம் வேண்டுகின்றோம்.

அன்னை மடியில் 21.09.1930

ஆண்டவன் அடியில் 20.05.2012

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.
சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

(48501)(5.6.3)



## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நாகையா நடராசா

(Retired-Executive Staff Officer Indian Overseas Bank Colombo)

தோற்றம் 02★07★1928

மறைவு 01★06★2011

திதி: 28.05.2014

"தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை
என்பதை உணர்த்திய தெய்வமே!"
பிறந்தவர் யாவரும் இறப்பர் என்பதை
யாம் உணரவில்லையே!
நீர் எம்மை விட்டுப் பிரியும் வரை
எம் நினைவு நீங்கும் வரை- உம்
நினைவுகள் எம்மைவிட்டு அகலாது ஐயா!

Dr.E.M.V. நாகநாதன் வீதி.
கோண்டாவில் கிழக்கு.
கோண்டாவில்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(48316)(6.4.3)


## மருத்துவர்களிடையே போட்டி; நோயாளர்கள் பெரும் பாதிப்பில்

### செல்வராசா எம்.பி.கவலை



பொன்.செல்வராசா

மட்டக்களப்பு.மே 28

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மருத்துவர்களிடையே நிலவும் போட்டி நோயாளிகளின் உயிரைப் பறிக்கும் நிலைக்கு இட்டுச் செல்கின்றது. அவற்றை முடிவுக்குக் கொண்டு வர மருத்துவப் பணிப்பாளர் நடவடிக்கை எடு[illegible] வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவும் நிலைமைகளைப் பொது மக்கள் எங்களது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். சில மருத்துவர்களின் நடைமுறைகள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மருத்துவர்களிடையே நிலவும் முரண்பாடுகளால் நோயாளர்கள் பழிவாங்கப்படுகின்றனர். சிலவேளைகளில் நோயாளர்கள் உயிரிழந்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவேண்டிய நிலைமையிலுள்ள நோயாளி ஒருவர் ஆரம்பச் சிகிச்சைப் பிரிவு பகுதியில் அனுமதிக்காக நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இந்த நிலைமைகள் மாற்றப்படவேண்டும் - என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் நிலைமைகள் தொடர்பில் பல முறைப்பாடுகள் தம்மிடமும் தெரிவிக்கப்பட்டுள்ளன என்று கூறினார். (ச)

## உணவு விடுதிகளில் திடீர்ச் சோதனைகள்



சோதனையிடும் சுகாதாரப் பரிசோதகர்கள்

மட்டக்களப்பு.மே 28

மட்டக்களப்பு, கோட்டைமுனை பொதுச்சுகாதார பி[illegible]குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவு விடுதிகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

பொதுமக்கள் சுத்தமான உணவுப் பண்டங்களைப் பெற்றுக் கொள்ள வழிசெய்யும் வகையில் இந்தத் திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சோதனையின்போது மனித பாவனைக்கு உதவாத மற்றும் காலாவதியான உணவுப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்று பொதுச்சுகாதார பாசோதகர்கள் தெரிவித்தனர்.

சுகாதாரத்துக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட மூன்று வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கர்த்தருக்குள் சாவடைவோர் பேறு பெற்றோர்
இறைபணி கலந்த நல்வாழ்வுக்காய்
நன்றி நவிலும் வழிபாடு

அமரர்

வண. சுப்பையா தேவகரன்

தோற்றம் 05★12★1961

மறைவு 28★04★2014

அர்ப்பணிப்பு மிக்க இறை ஊழியத்தில் கலந்திருந்து கடந்த 28.04.2014 கர்த்தருக்குள் நித்திரை அடைந்த வண. சுப்பையா தேவகரன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியோருக்கும், மலர் வளையங்கள் வைத்தோருக்கும் மற்றும் எல்லாவிதத்திலும் இதர உதவிகள் புரிந்தோருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மற்றும் அன்னாரின் இறைபணி கலந்த நல்வாழ்வுக்காக கர்த்தருக்கு நன்றிநவிலலும் வழிபாடு இன்று (28.05.2014) புதன்கிழமை மதியம் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த வழிபாட்டிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(45561)(4.3.6)

வளாய் ஒழுங்கை.
தும்பளை. பருத்தித்துறை.
077 245 9023

திருமதி தவமலர் தேவகரன்
(மனைவி)

# செவிப்புலன் தொடர்பான மருத்துவ முகாம்

"யாழ். பாதுகாப்புத் தலைமையகத்தின் ஏற்பாட்டின் கீழ் இலவசமாக செவிப்புலன் உபகரணங்களை வழங்குவதற்கான மருத்துவ முகாம் எதிர்வரும் 9,10 மற்றும் 11 ஆகிய தினங்களில் யாழ்ப்பாணம் சிவில் இணைப்பு மற்றும் பொது மக்கள் தொடர்பு அலுவலக வளாகத்தில் நடை பெறவுள்ளது.
இதில் கலந்து கொள்ளத் தகுதியுடைய செவிப்புலன் குறை பாடு உடையவர்கள் இலவசமாக மேற்கொள்ளப்படவிருக்கும் செவிப்புலன் பரிசோத னைகளுக்காக மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள "விக்கிரமாராச்சி ஒப்டிகல்ஸ்" நிறுவனத்துக்கு (ஞாயிறு தவிர்ந்த நாள்களில்) காலை 9 மணியில் இருந்து பி.ப.5 மணி வரையும் அல்லது பிறவுண்வீதியில் அமைந்துள்ள "விஷன்கெயார்" நிறுவனத்துக்கு (ஞாயிறு மற்றும் திங்கள் தினங்களைத் தவிர்த்து) மு.ப.9 மணியில் இருந்து பி.ப. ஒரு மணிவரையிலான காலப்பகுதிக்குள் வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (க)

# பிற்போடப்பட்டுள்ளது தமிழிலக்கிய ஆய்வரங்கு

கொழும்பு, மே 28
இந்து சமய தமிழிலக்கிய ஆய்வரங்கு பிற்போடப்பட்டுள்ளதாக இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.
இந்த அறிவித்தலில் அவர் தெரிவித்ததாவது:-
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடந்தோறும் ஆய்வரங்கு ஒன்றை நடத்தி வருகின்றது. இதன்படி இந்த வருடமும் "திருவாதவூரரும் சைவத் திருநெறியும்" என்னும் தலைப்பில் எதிர்வரும் ஜூன் மாதம் 27, 28, 29 ஆம் திகதிகளில் கொழும்பு, வெள்ளவத்தை, இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.
ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால் அந்தத் திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டு எதிர்வரும் ஜூலை மாதம் 18, 19, 20 ஆம் திகதிகளில் கொழும்பு, தமிழ்ச் சங்கம், சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடத்துவதற்கான ஒழுங்குகளைத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது என்றுள்ளது. (க)

# மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 28
யாழ். மாநகரசபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம்நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் மஹோற்சவப் பெருவிழா

மன்னார், மே 28
வரலாற்றுப் பெருமை வாய்ந்த மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் இந்த ஆண்டுக்கான மஹோற்சவப் பெருவிழா அடுத்த மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
10 ஆம் திகதி இடம்பெறும் தேர்த் திருவிழாவின்போது ஐந்து திருத்தேர்கள் வீதியுலா வரவுள்ளன.
மறுநாள் 11 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இரவு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன.
மறுநாள் மௌனத் திருவிழாவும், 13 ஆம் திகதி பகல் திருக்குடத் திருமுழுக்கும் இரவு சண்டிகேஸ்வரர் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (க)

# பாவனைக்குதவாத பொருள்கள் சேகரிப்பு

வவுனியாவில் பாவனைக்குதவாத இலத்திரனியல், பிளாஸ்ரிக் பொருள்களை பாதுகாப்பான முறையில் சேகரித்துக் கொள்ளும் செயற்பாட்டில் மத்திய சுற்றாடல் சபையும் வவுனியா நகர சபையும் இணைந்து செயற்பட்டு வருகின்றன.
கழிவான பாவனைக்குதவாத இலத்திரனியல் பொருள்களை தொலைபேசி, தொலைக்காட்சிப் பெட்டி, உதிரிப்பாகங்கள், மணிக்கூடு உட்பட மின்சாரப் பொருள்கள், பிளாஸ்ரிக் பொருள்களை பைகளில் அடைத்து அதனை பெற்றுச் செல்லவுள்ளதால் பொது இடங்களில் மத்திய சுற்றாடல் சபையினரால் வைக்கப்பட்டுள்ள குப்பைக் கூடைகளில் புறம்பாக வைக்குமாறு வவுனியா நகர சபையின் உதவியுடன் இலங்கை மத்திய சுற்றாடல் சபையினர் ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல் வழங்கி வருகின்றனர்.
சூழல் தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்துமுகமாக இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் தெரிவித்தனர்.
இதேவேளை நாளை வியாழக்கிழமை வவுனியா பொது விளையாட்டு மைதானத்திலும் இந்தப் பொருள்களை வழங்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-402)

# மூன்று நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 28
பேராசிரியர் தனஞ்சயராச சிங்கத்தின் மூன்று நூல்களின் வெளியீடு எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.
காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கலையரங்கில் யாழ். தேசிய கல்வியியற் கல் லூரியின் பீடாதிபதி ச.அமிர் தலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.
பிரதம விருந்தினர்களாக பேராசிரியர் சி.தில்லை நாதன், திருமதி மல்லிகா தில்லைநாதன் ஆகியோர் கலந்து கொள்வார் கள்.
சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் இரா.வை. கனகரத் தினம், தமிழ்ப் பேராசான் நாகலிங்கம் குழந்தைவேலு ஆகியோர் கலந்து கொள் வார்கள். (க)

## இராஜகோபுர மகாகும்பாபிஷேகம்

வடமராட்சி, மே 28
கரவெட்டி கிழக்கு நுணுவில் குளக்கோட்டு அருள்மிகு ஸ்ரீசித்தி விநாயகர் கோயில் நூதன அதி சுந்தர பஞ்சதள இராஜகோபுர மகாகும் பாபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.27 மணி முதல் 8.26 மணிவரை யான சுபவேளையில் நடை பெறவுள்ளது.
இந்தக் கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அதிகாலை 5.06 மணி முதல் ஆரம்பமாகவுள்ளன.
துன்னாலை வல்லியானந்தம் சாரதா பீடத்தைச் சேர்ந்த கலாநிதி சிவசக்தி ஸ்ரீராம், தேவலோகேஸ்வரக்குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். கும்பாபிஷேக அருளுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்துவார். (ஒ-173)

# கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், மே 28
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தினால் விஞ்ஞான இளமாணிப் பட்டக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த.உயர்தர விஞ்ஞானப் பிரிவில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளிலேனும் மூன்று பாடங்களில் சித்தியுடைய அனைவரும் இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
மேலும் க.பொ.த்.உயர்தர தகைமையைக் கொண்டிராத மாணவர்களுக்காக விஞ்ஞான அடிப்படைக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன. க.பொ.த.சாதாரணதரத்தில் கணிதம் விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியுடைய அனைவரும் இந்த அடிப்படைக் கற்கை நெறிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் எனவும் யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ய)

## கூட்டம்

வடமராட்சி, மே 28
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் முத லாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, அதிபர் ந.தெய் வேந்திரராசா தலைமையில் நடை பெறவுள்ளது. (ஒ-173)

♦♦♦

தென்மராட்சி, மே 28
தென்மராட்சி கல்வி வலயப் பாட சாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை பிற் பகல் ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ஒ-9)

# விளையாட்டுத் திருவிழா

யாழ்ப்பாணம், மே 28
திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியும், குழந்தைகள் சங்கமும் நடத்தும் விளையாட்டு விநோத வேடிக்கை நிகழ்வு எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.
பிற்பகல் 1.30 மணியளவில் திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியில் திருமதி க.தனபாலன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. முதன்மை விருந்தினராக கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் கலந்து கொள்வார். திருமதி மலர்விழி நாகேஸ்வரன் பரிசில்களை வழங்குவார். (க)

# அபிவிருத்தியில் பின்தங்கிய கிராமம்

புதுக்குடியிருப்பு, மே 28
புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள தேவிபுரம் கிராமம் அபிவிருத்தியில் பின்தங்கி நிற்பதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.
சுமார் 300 குடும்பங்கள் வசிக்கும் இந்தக் கிராமத்தில் மக்களின் போக்குவரத்து மிகவும் கஷ்டமான நிலையில் காணப்படுகின்றது, இங்கு வசிக்கும் மக்கள் சுமார் 4 கிலோ மீற்றர் தூரத்தை கால்நடையாகவே செல்ல வேண்டிய நிலையில் உள்ள்னர். தமது உற்பத்திப் பொருள்களைக் கொண்டு சென்று விற்பனை செய்வதிலும் இவர்கள் இடர்களை எதிர்கொண்டு வருகிறனர்.
புதுக்குடியிருப்பு ஊடாக செந்தூரன் ,சிலையடியை ஊடறுத்து தேவிபுரம் சென்றடையும் வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு வரும் அதேவேளை தேவிபுரம் வீதி புனரமைப்புச் செய்யப்படவில்லை. இங்கு வாழ்கின்ற மக்கள் தமது மருத்துவ வசதிக்கு புதுக்குடியிருப்பை நாடவேண்டிய நிலையில் வீதி புனரமைக்கப்படாமையால் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. (க-500)

இந்த வார இதழ் வெளிவந்துவிட்டது

## சண்டியர் சாம்ராஜ்ஜியம்

....யாழ்ப்பாண பல்கலைக்கழக விடயங்களில் இராணுவம் நேரடியாகத் தலையீடு செய்யுமளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது. இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகள், மாணவர்கள் , பேராசிரியர்கள் இராணுவமுகாமுக்கு அழைக்கப்பட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்படுதல் , சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள் வளாகத்தில் ஒட்டப்படுதல் என்பன போன்ற வெளித் தலையீடுகளால் மாணவர் மீது ஒரு பயங்கர சூழல் திணிக்கப்பட்டுள்ளது.
பல்கலைக்கழக உபவேந்தர் , பேராசிரியர்கள் , மாணவப் பிரதிநிதிகள் ஆகியோரை வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா பலாலி இராணுவ முகாமுக்கு அழைத்து முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வுகள் தொடர்பாக எச்சரிக்கை விடுத்துள்ளார். இப்படி ஒரு சந்திப்பை நடத்த இவர் யார்? பல்கலை நிர்வாகத்தையும் மாணவர்களையும் தன் இருப்பிடத்துக்கு அழைக்க இவருக்கு என்ன அதிகாரம் உண்டு? இவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரா? அல்லது உயர்கல்வி அமைச்சரா? சண்டியர்களின் சாம்ராஜ்ஜியத்தில் மாணவர்கள் தாக்கப்படுவதோ குறைசொல்லப்படுவதோ , மிரட்டப்படுவதோ ஆச்சரியமான விடயமல்ல. ஆனால் சக்கரவர்த்திகளின் சாம்சாராஜ்ஜியங்களே மக்கள் புரட்சியின் முன்னால் சாம்பல் மேடான வரலாறுகளே .......

சுடர் ஒளி



இடர்தாண்டி
சுடர் விட்ட
தீபங்கள்

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க யாழில் பெருமளவு மாணவர்கள் தெரிவு செய்யும்
யாழில் முதற்தர ஆங்கில பயிற்சி மையத்தில் இருந்து
ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



ஒரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி
English Diploma
veta
புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| Sat sun 8.30 a.m. | Sat, Sun 2.30 p.m. | Wed,Fri 9.00 a.m. | Tue, Thu 3.00. p.m. |
| Mon Wed, Fri 9.30 a.m. | Wed,Fri 3.00 p.m. | Sat,Sun 10.30 a.m. | Sat Sun 11.00 a.m. |

DMI COMPUTER EDUCATION
A1-Exam
B1-Exam
திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது.
City & Guilds IELTS
• Unique Test Tips
• Latest course Materials

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113 கஸ்தூரியார் வீதி, | M.M.V வீதி, | கண்டி வீதி, (HNB அருகில்) | No. 130, கே.கே.எஸ். வீதி, |
| Tel.: 021-222 4403 | Tel.:021-226 2470 | Tel.:021-227 0775 | Tel.:021-224 1970 |

## தூக்குத் தண்டனைக் கைதிகளின் தகவலைச் சேகரிக்கிறது அமைச்சு

### ஆயுள் தண்டனை வழங்குவது தொடர்பில் ஆராய்வு

கொழும்பு.மே 28

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள 75 கைதிகள் தொடர்பான தகவல்களை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு ஆராய்ந்து வருகின்றது.

இந்தக் கைதிகளின் கருத்துக்களை அமைச்சின் மீளாய்வுக் குழு கேட்டறிந்துகொண்டுள்ளது என்று அமைச்சின் செயலரும், மீளாய்வு குழுவின் உறுப்பினருமான ஜீ.எஸ். விதானகே தெரிவித்தார்.

தூக்குத் தண்டனைக்கு பதிலாக அந்த கைதிகளுக்கு ஆயுள் தண்டனையை வழங்குவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் ஆராய்ந்து, நீதி அமைச்சரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**தூக்குத் தண்டனைக்கு பதிலாக அந்த கைதிகளுக்கு ஆயுள் தண்டனையை வழங்குவது தொடர்பில் ஆலோசிக்கப் பட்டு வருகிறது.**

அதன்பின்னர் குறித்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது என்று அமைச்சின் செயலர் ஜீ.எஸ்.விதானகே கூறினார்.

9 பேரைக் கொண்ட இந்த மீளாய்வுக் குழுவுக்கு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியொருவர் தலைமை வகிக்கின்றார் என்று அவர் தெரிவித்தார். (ச)



கிழக்கு மாகாணசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் நேற்று செவ்வாய்க்கிழமை காலை முள்ளிவாய்க்கால் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சகல மாகாணசபை உறுப்பினர்களும் கறுப்பு துண்டுகளைத் தோளில் சால்வையாகப் போட்டு மௌனஅஞ்சலி செலுத்தினர்.

## அரசை வீழ்த்துவது குறித்து ஐ.தே.க மந்திராலோசனை

கொழும்பு.மே 28

அரசை வீழ்த்துவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி மந்திராலோசனை நடத்தியுள்ளது. ஹோட்டல் ஒன்றில் வைத்து அரசை எவ்வாறு வீழ்த்துவது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமைத்துவ சபையின் தலைவர் கரு ஜயசூரிய உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அரசின் பல முக்கிய இரகசியங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஸ்ட பேச்சாளர் ஒருவர் சிங்களப் பத்திரிகையொன்றுக்கு தகவல் வழங்கியுள்ளார்.

அரசுக்கு எதிரான உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியான குற்றச்சாட்டுக்கள், விமல் வீரவன்சவால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதாரம், மக்கள் எதிர்நோக்கி வரும் முக்கிய பிரச்சினைகள், அரச உத்தியோகத்தர்களின் நடவடிக்கை போன்றவை குறித்தும் கவனம்செலுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஊவா மாகாண சபைத் தேர்தலில் முழுப் பலத்தையும்பயன்படுத்தி தேர்தல்பரப்புரையில் ஈடுபட ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது. (ச)

## நாட்டில் பரவுகிறது வைரஸ் காய்ச்சல்

கொழும்பு.மே 28

நாட்டில் தற்போது குழந்தைகள் மத்தியில் வைரஸ் காய்ச்சல் நோய் பரவுகிறது என்று குழந்தை நோய் சிகிச்சை நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

வாந்தி, வயிற்றோட்டம், வயிற்றுவலி ஆகியவையே இந்த நோயின் அறிகுறிகளாகும். குழந்தைகளுக்கு காய்ச்சல் ஏற்பட்டால் பாடசாலைக்கு அனுப்பாமல் தவிர்க்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மூன்று நாள்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால் அது டெங்குக் காய்ச்சலா என்று இரத்தப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். தகுதியான வைத்தியர்களிடம் சிகிச்சை பெற வேண்டும். காய்ச்சல் வந்த குழந்தைகளுக்கு ஓய்வு அவசியம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## குவைத்தில் சட்டவிரோதமாக 20 ஆயிரம் இலங்கையர்

கொழும்பு.மே 28

குவைத் நாட்டில் சட்டவிரோதமாக 20 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கைப் பணியாளர்கள் தங்கியுள்ளனர் என்று குவைத்தின் இலங்கைக்கான தூதரகம் தெரிவித்துள்ளது.

குவைத்தில் பல்வேறு துறைகளில் தொழில் புரிவோரே சட்டவிரோதமாக தங்கியுள்ளனர் என்று இலங்கைக்கான தூதர் சீ.ஏ.எச்.எம். விஜேரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை திரும்பும் எதிர்பார்ப்புடன் பெருந்திரளானவர்கள் நாளாந்தம் தூதரகத்தின் உதவியை நாடி வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

எனினும் குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலங்கையர்கள் கைது செய்யப்படும் சந்தர்ப்பங்களில் விசேட ஏற்பாடுகள் மூலம் அவர்கள் விடுவிக்கப்படுவர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## சதொசவில் குறைந்த விலைகளில் மரக்கறிகள்

கொழும்பு.மே 28

நாட்டின் பல பாகங்களிலும் உள்ள சதொச நிறுவனங்களில்நேற்று செவ்வாய்க்கிழமை முதல்சகல வகையான மரக்கறிகளையும் குறைந்த விலைகளில் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கென மரக்கறி வகைகள் தம்புள்ள, நுவரெலியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்யப்பட்டு மக்களுக்கு மிகவும்குறைந்தவிலைகளில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சர்ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் உத்தரவுக்கு அமைய சதொச நிறுவன தலைவர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.(ச)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



செல்வன் பி. ஆகாஷ்வரசர்மா



செல்வி ம. நிதிபா

Congratulation

'பரிகல்பன' அகில இலங்கை சிறுவர் சித்திரப் போட்டியில் எமது கலாமன்றத்தினூடாகப் பங்கு பற்றி தேசிய ரீதியில் பரிசில்களைப் பெற்றுக்கொண்ட கலாமன்ற மாணவச் செல்வங்களைப் பாராட்டிக் கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

நிர்வாக சபையினர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர்கள்.
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர். (48518)(3.6.3)

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1974 ஆம் ஆண்டு பிறந்த, கார்த்திகை நட்சத்திரம் 5இல் செவ்வாய், கிரகபாவம் 45 உடைய சுவிஸில் நிரந்தர வதிவிட உரிமை (PR) உள்ள மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.

தொடர்பு: 077 273 0627 (48621)(5.6.3)

**வீடு காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், நீராவியடி, பிறவுண் வீதிக்கு அண்மையில் (4 பரப்பு) காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. 29.05.2014 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பின் பார்வையிடலாம்.

தொடர்பு: 0716 160 296 (சி/14392)(5.6.3)

**யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**பதவிவெற்றிடம்**

எழுதுநர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பிப்போர் 11.06.2014ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை பொதுமுகாமையாளர், யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து), இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் அல்லது நேரில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்ப கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| பதவி | : எழுதுநர் |
| சம்பள குறியீட்டு இல. | : 302/15 |
| சம்பள அளவுத் திட்டம் (66/2006 இன்படி) | : 9450-75x10 - 80x10 - 11000 |

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் (166/88 திருத்தம்)

- கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பள திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

- க.பொ.த. (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியுடன் கூட்டுறவுச் சங்க மொன்றின் எழுதுவினைஞர் பதவியொன்றில் ஒரு (01) வருடத்துக்கு குறை யாத அனுபவம்.

யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்,
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
27.05.2014

குறிப்பு: விண்ணப்பப் படிவங்களை சங்க அலுவலகத்தில் 10/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். (சி/13918) (10.6.3)

**தெல்லிப்பழையில்**

**ஜீவ ஒளி ஒப்ரிக்கல்**



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை முன்பாக புதிதாக ஆரம்பிக்கப்பட்ட **ஜீவஒளி** கண்சிகிச்சை நிலையத்தில்

வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் பி.ப.3.30 மணிக்கு

கண் சத்திரசிகிச்சை நிபுணர் **Dr.S.குகதாசன்**



அவர்களால் கண்கள் பரிசீலிக்கப்பட்டு சிகிச்சையும் ஆலோசனையும் வழங்கப்படுவதுடன் மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படும்.



(48520)(3.6.4) தொடர்பு: 076 688 9881

# ஆசிரியர் தரத்துக்கு உள்வாங்குமாறு தொண்டர் ஆசிரியர்கள் கவனவீர்ப்பு

## யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக நேற்று

யாழ்ப்பாணம். மே.28
ஆசிரியர் தரத்துக்கு உள்வாங்குமாறு கோரி தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றிய இருபதுக்கும் மேற்பட்டோர் யாழ்.மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

கவனவீர்ப்புப் போராட்டத்தில் பின்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

கடந்த 10 வருடங்களாக தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி தற்போது ஆசிரிய பயிற்சி முடிவடைந்தும் கூட இன்னமும் எங்களை ஆசிரியர் தரத்துக்கு உள் வாங்கவில்லை. ஆரம்பத்தில் மூவாயிரம் ரூபா சம்பளத்துக்கு தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றி பின்னர் சம்பளம் ஆறாயிரம் ரூபாவாக மாற்றப்பட்டு இப்போது 10 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

இந்தக் கொடுப்பனவு நாங்கள் வன்னியில் கடமையாற்றுவதற்கு போதுமானதாக இல்லை. எனவே எங்களை உடனடியாக ஆசிரியர் தரத்துக்கு உள்வாங்க வேண்டும் என்று கூறியும், தற்போது வடமேல் மாகாணங்களில் ஆசிரிய பயிற்சிகள் முடிவடைந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரிய நியமனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே எங்களையும் உள்வாங்குங்கள் என்றும்.



கவனவீர்ப்பில் ஈடுபட்ட தொண்டர் ஆசிரியர்களை அமைச்சர்களான ஐங்கரநேசன், குருகுலராஜா ஆகியோர் சந்தித்தபோது.

எங்களில் வயது முதிர்ந்தவர்களும் தொண்டர் ஆசிரியர் களாகக் கடமையாற்றுகின்றனர். இவ்வாறு காலத்தை இழுத்தடித்துக்கொண்டு சென்றால் அவர்களுக்கு ஓய்வூதிய வயது கடந்துவிடும். எனவே அவர்கள் ஓய்வூதியம் எடுக்க வேண்டியதுதான். எனவே காலத்தை வீணடிக்காது உடனடியாக எங்களை ஆசிரியர் தரத்துக்கு உள்வாங்குங்கள் என்ற கோரிக்கைகளை முன்வைத்து கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போத அங்கு வருகை தந்த வடமாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா, வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன், அனந்தி சசிதரன், சிவாஜிலிங்கம் ஆகியோரிடமும் தங்களது பிரச்சினைகளை முன் வைத்தனர். இதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சரும், விவசாய அமைச்சரும் இவ் விடயம் தொடர்பாக தாங்கள் கவனத்தில் எடுப்பதாகவும் இது குறித்து வடமாகாண சபையின் கவனத்துக்கு கொண்டு வருவதாகவும் தற்போது இங்கிருந்து கலைந்து செல்லுமாறும் கூறினர்.

அதை அடுத்து அமைச்சர்களின் வார்த்தைகளை நம்பி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டோர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

(வ-21)

## திருட்டு மின்சாரம்; அபராதமும் பிணையும்

தென்மராட்சி, மே 28
சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற மூவர் அபராதமாக தலா 10 ஆயிரம் ரூபா வீதமும் மின்சார சபைக்கான இழப் பீடும் செலுத்துமாறு உத்தர விட்டு ஆள்பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சாவகச்சேரி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து கடந்த வாரம் கைதடி, நாவற்குழி, கைதடி -நுணாவில் ஆகிய பகுதிகளில் பொலிஸார் நடத்திய திடீர் பரிசோதனையில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற மூவர் பிடிக்கப்பட்டனர்.

குறித்த மூவருக்கும் எதிராக பொலிஸாரால் மறுநாள் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

நேற்று வழக்குகள் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மூவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்ட இழப்புக்கு இழப்பீடாக தலா 22 ஆயிரத்து 575 ரூபா, 16 ஆயிரத்து 851 ரூபா, எட்டாயிரத்து 548 ரூபா செலுத்துமாறு தீர்ப்பளிக்கப்பட்டு ரூபா 25 ஆயிரம், 20 ஆயிரம், 10 ஆயிரம் பெறுமதியான தலா ஓர் ஆள்பிணையில் செல்லுமாறும் உத்தரவிடப்பட்டது.

(வ-9)

# சட்டரீதியான மணல் அகழ்வுக்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கவில்லை

## நேற்றைய ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில்

யாழ்ப்பாணம், மே. 28
மகேஸ்வரி நிதியம் சட்டரீதியாகவே மணல் அகழ்வில் ஈடுபடுகின்றது என்று தெரிவித்த அமைச்சர் அது தொடர்பிலான ஆவணங்களை நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமர்பிப்பதாகத் தெரிவித்த போதும் கூட்டத்தின் முடிவு வரையில் அந்த ஆவணங்கள் எதனையுமே சமர்ப்பிக்கவில்லை.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றபோது, மகேஸ்வரி நிதியம் சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபடுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் குற்றஞ் சாட்டியிருந்தனர். குறிப்பாக அம்பன் பகுதியில் மணல் அகழ்வதற்கான அனுமதி மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபையால் வழங்கப்படாத நிலையிலும் குறித்த பகுதிகளில் மணல் அகழப்பட்டுள்ளது.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மகேஸ் வரி நிதியம் சட்டரீதியாகவே மணல் அகழ்வில் ஈடுபடு கின்றது என்று தெரிவித்திருந் தார். அத்துடன் புவிச்சரித வியல் மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் அனுமதியுடனேயே மணல் அகழ்வில் ஈடுபடுவதாகக் குறிப்பிட்டி ருந்தார். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ புவிச்சரிதவியல் திணைக்க ளத்தின் அனுமதி மாத்திரமே வழங்கப்பட்டது. மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபையின் அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவித்தனர்.

இதன்போது அங்கு சமுகமளித்திருந்த மத்திய சுற்றுச் சூழல் அதிகாரசபையின் அதிகாரி, 2004 ஆம் ஆண் டுக்குப் பின்னர் அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவித்திருந்தார். அதனை யடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மகேஸ்வரி நிதியம் சட்டரீதியாகவே செயற்படுகின்றது. அதற்குரிய ஆவ ணங்களை நாளைய (நேற்றைய) கூட்டத்தில் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால் கூட்டத்தின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரையில் எந்தவொரு ஆவணமும் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன் அதுதொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கேள்வி எழுப்பவில்லை. இதே வேளை நேற்று முன் தினம் இடம்பெற்ற கூட்டத்தில் பல்வேறு அறிக்கைகளை நாளைய தினம் (நேற்று) சமர்ப்பிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரி யிருந்தார். ஆனால் குறித்த அறிக்கைகள் தொடர்பில் நேற்று எதுவுமே கேட்கப்ப டவில்லை.

(வ-5)

## கமல் உள்ளிட்ட மூவருக்கு விளக்க மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், மே 28
நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷியனது கொலைக்குற்றச் சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரும் வடமாகாணசபை முன்னாள் எதிர்க்கட்சித் தலை வருமான கந்தசாமி கமலேந்திரன் உள்ளிட்ட மூவருக்கும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக் கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கந்தசாமி கமலேந்திரன், லண்டன் யசிந்தன் மற்றும் றெக்ஷியனின் மனைவியான அனித்தா ஆகியோருக்கே இவ்வாறு விளக்கமறியல் நீடிக்கப் பட்டது.

வடமாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் பதவியிலிருந்து கமலேந்திரன் விலக்கப்பட்ட நிலையில் பின்னர் உறுப்பினர் பதவியிலிருந்தும் விலக்கப்பட்டார். றெக்ஷியன் கொலை செய்யப்பட்ட சம்ப வம் உறுதிப் படுத்தப்பட்டதை அடுத்து அவர் கட்சியிலிருந்தும்விலக்கப்பட்டார்.

றெக்ஷியன் கடந்த நவம்பர் 26 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைச் சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டில் கமல் கடந்த டிசெம்பர் 3 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அதற்கு முதல்நாள் வேலணையில் வசித்து வந்த லண்டன் யசிந்தன் மற்றும் றெக்ஷியனின் மனைவி ஆகியோர் பொலிஸாரால் கைது செய் யப்பட்டனர். அன்று தொடக்கம் அவர்கள் மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (வ-4)

# பதின்ம வயதுப் பெண்கள் வீட்டைவிட்டு செல்லல், காணாமற் போதல் சம்பவங்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 28
நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் 16-18 வயதுக்கும் இடைப்பட்ட பதின்ம வயதுச் சிறுவர்கள் திருமணம் செய்யும் நோக்கில் வீட்டை விட்டு ஓடுவது அதிகரித்துள் ளது. இந்தமாதம் மாத்திரம் அவ்வாறு 5 பேர் வீட்டை விட்டு வெளியேறியுள்ளனர். அவ்வாறே பதின்ம வயதுச் சிறுவர்கள் காணாமல் போனமையும் இந்த மாதம் அதிகரித்துள்ளது. அவை தொடர் பில் பருத்தித்துறை நீதிமன் றில் வழக்குகள் இடம்பெற்று வரு கின்றன.

இந்த வருட ஆரம்பத்திலிருந்து இந்த மாதம்வரை 10 முறைப்பாடுகள் பதிவாகி யுள்ளன என்று பொலிஸ் தரப்புத் தகவல் தெரிவிக்கிறது. நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட சில இடங்களில் இருந்து இத்தகைய முறைப் பாடுகள் பதிவாகியுள்ளன. அவர்கள் திருமண நோக்கி லேயே வீட்டைவிட்டு ஓடுகின்றனர்.

பொலிஸ் நிலையங் களில் பதிவான முறைப்பாடு களின் அடிப்படையில் அது தெரிய வந்திருக்கிறது.

காணாமல் போனதும் குறித்த அவர்களது பெற்றோர் முறைப்பாடு செய்கின்றனர். அதனடிப்படையில் அவர்கள் பொலிஸ் விசார ணைக்கு உட்படுத்தப்பட்டு பெண்ணின் பாதுகாப் புக் கருதியதாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்ப டுகிறது.

இதுதவிர காணாமல் போய் இன்றுவரை வீடு திரும்பாத முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. இந்தமாத ஆரம்பத்தில் துன்னாலையில் இருந்து வன்னிக்குச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால் வர் 24 நாள்களாகி விட்ட போதும் இன்றுவரை வீடு திரும்பவில்லை.

அது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் வன்னியிலுள்ள தமது உறவினர் ஒருவரது வீட்டுக் குச் சென்றிருந்தனர். அவர்கள் அங்கிருந்த புறப் பட்டுவிட் டனர் என்று வன்னியிலுள்ள உறவினர்கள் கூறியுள்ளனர். ஆனால் அவர்கள் தற்போது எங்கு உள்ளனர் என்பது குறித்து எந்தத்தகவலும் பொலிஸாரால் கண்ட றியப்படவில்லை. தாயும் பதின்மவயதுடைய அவரது 3 பிள்ளைகளுமே இதில் உள்ளடங்குகின்றனர்.

இதுமாத்திரமன்றி துன்னாலையைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் 3 வாரங்களுக்கு முன்னர் காணாமல் போயுள்ளார். அவரும் எங்குள்ளார் என்று பொலிஸாரால் கண்டறியப்படவில்லை. கட்டைவேலியைச் சேர்ந்த 14 வயதுடைய சிறுவன் ஒரு வன் கடந்த ஞாயிற்றுக் கிழமை காணா மல் போய் நேற்று முன்தினம் வன்னி யில் கண்டு பிடிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளான். (வ-4)

## சமிக்ஞைகளை கடைப்பிடிக்காத சாரதிகளால் விபத்துக்கள்

வவுனியா, மே 28

வவுனியா நகரப் பகுதியில் கண்டி வீதியில் மஞ்சள் கோடுகளில் பொலிஸார் உரிய சமிக்ஞைகளை விடுக்கும் போதும் வாகனங்களை நிறுத்தாமல் சாரதிகள் செல்வதால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

மஞ்சள் கடவைகளில் பயணிகள் வீதியைக் கடக்கின்றபோது வேகமாக வரும் வாகனங்களை நிறுத்தும் சமிக்ஞைகளை பொலிஸார் விடுகின்ற நிலையிலும் சாரதிகள் அவற்றுக்கு மதிப்பளிக்காது செயற்படுவதால் வீதி விபத்துக்கள் அதிகரிப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

எனவேசமிக்ஞைகளை கடைப்பிடித்து மஞ்சள் கடவைகளில் வாகனங்களை செலுத்துமாறு சாரதிகளுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ச-402)



மன்னார்.மகிழங்குளம் -பள்ளமடு உள்ளக வீதி புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மக்கள் பயணிப்பதில் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். இந்த வீதி சுமார் 50 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படவில்லை என்று மக்கள் கூறுகின்றனர். (ச)

## யானைகள் அட்டகாசம் அதிகரிப்பு

முல்லைத்தீவு, மே 28

முல்லைத்தீவு, புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம் பகுதிகளில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் நேற்று முன்தினம் புகுந்த காட்டு யானைகளால் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என்று இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம் , தேறாங்கண்டல் ஆகிய கிராமங் களில் குறிப்பாக இரவு வேளைகளில் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்து வருகின்றது.

காட்டு யானை அட்டகாசம் குறித்து பல தடவைகள் உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றும் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (ச-55)

# கரைச்சி பிரதேச சபையின் பணியாளர் இடைநிறுத்தம்

### இறைச்சிக்காகப் பசுமாட்டை வெட்டிய சம்பவத்தை அடுத்து

கிளிநொச்சி, மே 28

சட்டவிரோதமாக இறைச்சிக்காக பசுமாடொன்றை வெட்டிய சம்பவத்துடன் தொடர்பு பட்டதாகக் கருதப்படும் பிரதேச சபையின் பணியாளரை பணியில் இருந்து இடைநிறுத்தவும், இரு இறைச்சிக் கடைகளை மூடிவிடுவதற்குமான முடிவுகளை கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

இறைச்சி விற்பனை செய்யப்பட்ட உருத்திரபுரத்தில் அமைந்துள்ள இரு மாட்டிறைச்சிக் கடைகளும் மூடப்பட்டுள்ளன

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள அம்பாள் குளம் கொல்களத்தில் ஞாயிற்றுக்கிழமை பசுமாடு ஒன்று சட்டவிரோதமான முறையில் இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளது. குறித்த மாட்டின் இறைச்சி உருத்திரபுரம் மாட்டிறைச்சிக் கடையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபைக்குச் சொந்தமான கொல்களத்தில் இறைச்சிக்காக வெட்டப்பட்ட மாடுகளில் பசுமாடு ஒன்று வெட்டப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் என்று கரைச்சி பிரதேச சபைத் தலைவர் நா.வை. குகராஜா தெரிவித்தார்.

கரைச்சிப் பிரதேச சபையின் பணியாளர் ஒருவர் கடமையில் இருந்த போதே இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எனவே அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டு குறித்த பணியாளரை பணி நீக்கம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது குறித்த இறைச்சி விற்பனை செய்யப்பட்ட உருத்திரபுரத்தில் அமைந்துள்ள இரு மாட்டிறைச்சிக் கடைகளும் மூடப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். (ச-55)

## மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுங்கள்

### கோருகின்றனர் மக்கள்

முல்லைத்தீவு, மே 28

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள இதுவரை மின்சாரம் வழங்கப்படாத கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு. மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள குறிப்பிட்ட சில கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் கரும்புள்ளியான், செல்வபுரம், பூவரசங்குளம், விநாயகபுரம் போன்ற பகுதிகளுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என்று மக்கள் கூறினர்.

எனவே இந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-55)

## அடிப்படை வசதிகள் படிப்படியாக நிவர்த்தி

### முதல் கட்டமாக ரூ.10 இலட்சம் செலவில் கட்டடம் அமைப்பு

முல்லைத்தீவு, மே 28

முலலைத்தீவு விசுவமடுபொதுச் சந்தைக்கான அடிப்படை வசதிகள் நிவர்த்தி செய்யப்படும் என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் எஸ்.மிதிலைநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு விசுவமடு பொதுச்சந்தை கடந்த நான்கு ஆண்டுகளாக போதிய அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருகின்றது. அதனால் அங்குள்ள வர்த்தகர்கள், நுகர்வோர் எனப் பலரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டு வந்துள்ளனர்.

அண்மையில் வீசிய கடும் காற்றால் சந்தைக் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. இதனால் வர்த்தகர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

விசுவமடு பொதுச்சந்தையின் தேவைகள் பல நிறைவேற்றப்படவேண்டியுள்ளன. காணிப் பிணக்கு காணப்பட்டதால் எந்த அபிவிருத்திகளையும் மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது.

அதற்கான தீர்வு காணப் பட்டு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் சுமார் பத்து இலட்சம் ரூபா செல வில் கட்டடத் தொகுதி ஒன்று அமைக்கப்படவுள்ளது. அதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன - என்றார். (ச-55)

## மாணவர்களுடைய கல்வியில் அக்கறை செலுத்த வேண்டும்

### உதவிக் கல்விப் பணிப்பாளர் கோரிக்கை

மாணவர்களின் கல்வி தொடர்பாக பெற்றோர்கள் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும் என்று கிளிநொச்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் த.பேரின்பராசா தெரிவித்தார்.

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:- கிளிநொச்சி கல்வி வலயத்தில் பாடசாலை செல்லாத மாணவர்கள் தொடர்பாக வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவு சிறந்த செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

பாடசாலை செல்லாது வீடுகளில் தங்கியுள்ள மாணவர்களைபாடசாலைகளில்இணைப்பது வலயக் கல்வி அலுவலகத்தின் நோக்கமாகும். அதிபர்களும் ஆசிரியர்களும் மட்டும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உழைத்தால் போதாது. பெற்றோர்களும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

தங்களுடைய பிள்ளைகளை ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்ப வேண்டும். பாடசாலைக்குவருகின்றபிள்ளைகளின் வரவு ஒழுங்கு தொடர்பாக விவரங்களைத் திரட்டி வருகின்றோம். எதிர்காலத்தில் பிள்ளைகளின் கல்வியில் அக்கறையில்லாத பெற்றோர்கள் எவருமே இப்பகுதியில் இல்லை என்ற நிலை உருவாக வேண்டும் - என்றார். (ச-18)

## ரூ. 8 இலட்சம் செலவில் பொதுச்சந்தை அபிவிருத்தி

முல்லைத்தீவு, மே 28

முல்லைத்தீவு, தண்ணீரூற்று பொதுச் சந்தை எட்டு லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

முல்லைத்தீவு. கரைதுறைப் பற்று பிரதேச சபையின் கீழ் உள்ள தண்ணீரூற்று பொதுச் சந்தையின் அபிவிருத்திப் பணிகளுக்கென தெரிவுசெய்யப்பட்டு 2014 ஆம் ஆண்டின் சபை நிதியொதுக்கீட்டில்இந்தத்தொகை ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. இதன் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கூறப்படுகிறது. (ச-55)

## திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை புனரமைப்புச் செய்யுங்கள்

### விவசாயிகள் வேண்டுகோள்

கிளிநொச்சி, மே 28

கிளிநொச்சிதிருவையாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்புச்செய்யப்பட்டு விவசாய நடவடிக்கைகளைமேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி. இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் கடந்த 1990 ஆம் ஆண்டுக்கு முன்னைய காலப்பகுதியில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் தமது விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

அதனையடுத்து கடந்த காலத்தில் ஏற்பட்ட போரால் இந்தப் பகுதிக்கான ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் செயலிழந்து அதன் கட்டுமானங்களும் சிதைவடைந்துள்ளன என்று விவசாயிகள் கூறினர்.

இந்த நீர்ப்பாசனத் திட்டத்தை புனரமைத்துத் தருமாறு பல தடவைகள் கோரிக்கைகள் முன் வைத்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று விவசாயிகள் குற்றஞ் சாட்டியுள் ளனர்.

எனவே இந்தத் திட்டத்தை புனரமைத்துத் தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-55)



# நின்று கொண்டே பணி செய்தால் உடல் எடை குறையும்

எடையைக் குறைக்க பல்வேறு உடற்பயிற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. ஆனால் நாள் ஒன்றுக்கு சுமார் 3 மணி நேரம் தொடர்ந்து நின்று கொண்டே வேலை செய்தால் உடல் எடை குறையும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மான்செஸ்டர் பல்கலைக்கழகத் தின் உடற்பயிற்சி விஞ்ஞானி ஜோன் பக்லி தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்ட னர். அதில் இருக்கைகளில் அமர்ந்த படி வேலை செய்தவர் களின் உடல் எடை அதிகரித்தது. அதே நேரத்தில் நின்று கொண்டே வேலை செய்தவர்களின் உடல் எடை குறைந்தது. அவர்களின் உடலில் இருந்து ஆண்டுக்கு 3.6 கிலோ எடையுள்ள கொழுப்பு எரிக்கப்படுவதால் உடல் எடை குறைவதாக விஞ்ஞானி பக்லி கூறியுள்ளார்.

இதே கருத்தை பல விஞ்ஞானி கள்ஹற்றுள்ளனர். நின்றுகொண்டே வேலை செய்பவர்களின் உடல் எடை குறையும். அவர்கள் குண் டாவதைத் தடுக்க முடியும்

**3 மணி நேரம் தொடர்ந்து நின்று கொண்டே வேலை செய்தால் உடல் எடை குறையும்**



## சிறிய ரக




மோட்டார் வாகன உற்பத்தியில் முன்னணி வகிக்கும் ஜப்பான் நிறுவனமான ஹொண்டா 6 பேர் பயணிக் கக்கூடிய ஆடம்பர விமானத்தை வடிவமைத்துள்ளது. இந்த விமானம் மணிக்கு 420 மைல்கள் வேகத்தில் பயணம் செய்யக்கூடியது.

சுமார் 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறு மதியான இந்த விமானம் அடுத்த வருடத்தில் அறி முகப்படுத்தப்படவுள்ளது.





## புகைத்தல் அளவை கண்காணிக்க உதவும் சாதனம்




புகைத்தல் உடலுக்கு கேடு விளைவிக்கும் என்று எவ் வளவு தான் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள போதி லும், புகைத்தலுக்கு அடிமையாகுபவர்களின் எண் ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல் கின்றது.

இவ்வாறானவர்களிடையே விழிப்புணர்வை ஏற் படுத்தும் பொருட்டும், புகைத்தலின் அளவைக் கட்டுப் படுத்தும் பொருட்டும் தற்போது புதிய சாதனமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்மார்ட் லைட்டர் என்று அழைக்கப்படும் இந்தச் சாத னம் ஒருவருடைய புகைத்தல் தொடர்பான முழுமை யான தகவல்களையும் தரக்கூடிய தொழில்நுட்பத் தைக் கொண்டுள்ளது.

# உலகிலேயே வயதான பூனை



உலகிலேயே அதிக வயதுடைய பூனை என்ற கின்னஸ் சாதனையை பொபி என்றழைக்கப்படும் 24 வயது டைய பூனை பெற்றுள்ளது. ஏற்க னவே கின்னஸ் சாதனையில் பதி யப்பட்ட பிங்கி என்னும் 23 வயது டைய பூனை இறந்த பின்னரே இந் தக் கின்னஸ் சாதனை பொபிக்கு வழங்கப்பட்டுள்ளது.

பொபி 1990ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பிறந்துள்ளது. அதே மாதத்தில் தென்னாபிரிக்காவின் முன்னாள் தலைவர் நெல்சென் மண்டேலா சிறைச்சாலையில் இருந்து விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பூனை, இரண்டு உரிமை யாளர்களிடம் தனது வாழ்க்கை யைக் கழித்து வருகின்றது. இந்தப் பூனையை 5ஆவது வயதில் மார் கரிட் கோர்னர் என்பவரால் வளர்க் கப்பட்டது. பொபிக்கு 10 வயதாகும்போது மார் கரிட்டின் மகள் ஜெஸ் கியூம் அவரது கணவர் அன்டியும்பூனையை வளர்க்கத்தொடங்கியுள்ளனர். தற்போது பொபி தனது உரிமையாளர் அன்டியு டனும் அவரது இரு குழந்தைகளுட னும்நான்கு பூனைகளுடனும் இரண்டு முயல் களுடனும் வாழ்ந்து வருகின் றது.

இந்தப் பூனை இத்தனை வருடங்கள் வாழ்வதற்கு காரணம் என்ன என்ற கேள்வி எழலாம். எனது பூனை வீட்டைச் சுற்றி நடப்பதும் நன்றாக உணவு உண்பதனையுமே பழக்க மாகக் கொண்டது. காலையில் பிஸ் கட்டுகளையே விரும்பி உண்கின்றது. பின்னர் சிறு சிற்றுண்டிகளை உண் ணும் என்று பொபியின் உரிமை யாளர் தெரிவித்துள்ளார்.

தனது பூனைக்கு 24 வயதாவதை கடந்த பெப்ரவரி மாதம் கின்னஸ் சாதனைக் குழுவுக்கு அன்டி அறிவித்துள்ளார்.

பூனை தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்ட கின்னஸ் சாதனை அதிகாரிகள் குறித்த பூனையே தற்போது உலகில் வாழும் வயது முதிர்ந்த பூனை என்று தீர்மா னித்ததுள்ளனர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசியல் நிலைமை கைமீறிப் போய்விட்டது

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கும் தருணத்தில் ராஷ்ரிய சுயம்சேவா சங் எனப்படும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் முதன்மைப் பிரமுகர்களில் ஒருவரான ஷேசாத்திரி சாரி கூறிய கருத்து தமிழர்களைக் கவலை கொள்ள வைத்துள்ளதுடன் இந்தியாவை மீண்டும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

பிரதமராவதற்கு முன்னர் தமிழகத்தில் நடந்த பரப்புரைக் கூட்டங்களில் மோடி பேசிய விடயங்களும், மோடியுடன் கூட்டுச் சேர்ந்த தமிழகக் கட்சிகளும், ஈழத் தமிழர்களுக்குச் சற்று நம்பிக்கையைக் கொடுத்திருந்தமை என்னவோ உண்மை. அதிலும் குறிப்பாக அரசமைப்பதற்கு வேண்டிய அறுதிப் பெரும்பான்மையை மோடி பெறமுடியாது போய், ஜெயலலிதாவின் ஆதரவுடன் ஆட்சி அமைக்கும் ஒரு நிலை வந்தால் மிகச் சிறப்பானது என்ற எதிர்பார்ப்புக்கூட ஈழத் தமிழர்களிடம் இருந்தது.

ஆனால், மோடி அமோக வெற்றி பெற்றார். தமிழகத்தின் அரசியல் அழுத்தத்துக்கு அப்பாற்பட்ட தூரத்தை அவர் எட்டினார். அதன் பின்னர் அவரது பதவியேற்புக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைக்கப்பட்டார். இது ஈழத் தமிழர்களின் புருவங்களை உயர்த்தின. தமிழகத்திலும் இதற்குக் கடுமையான எதிர்ப்பு எழுந்தது. மோடி அரசும் காங்கிரஸ் வழியில்தான் பயணிக்கப் போகிறது என்பதற்கான அறிகுறி இது என்றுகூட விமர்சனங்கள் வைக்கப்பட்டன.

மோடி அரசை அப்படி ஒரேயடியாக விமர்சித்துவிட இப்போது காலம் போதாது. பொறுமை அவசியமாக இருக்கிறது. என்றாலும் மோடியின் பாரதீய ஜனதாக் கட்சியின் ஆணி வேராக, அதன் மீது காத்திரமான கொள்கை ரீதியான செல்வாக்கைச் செலுத்தக்கூடியதாக உள்ள ஆர்.எஸ்.எஸ். தலைவர் சொல்லியிருக்கும் கருத்து, இலங்கை விவகாரத்தில் மோடி அரசின் அணுகுமுறை எப்படியானதாக இருக்கும் என்பதற்குக் கட்டியம் கூறும் வகையில் இருக்குமோ என்ற அச்சத்தை மீண்டும் தமிழர்களிடம் ஏற்படுத்தி விட்டது.

*நாம் இலங்கையில் பிரிவினையை எதிர்க்கிறோம். இதில் வெளி நாடுகள் தலையிடுவதையும் எதிர்க்கிறோம். இலங்கை - இந்திய உறவு தமிழர்கள் பிரச்சினையால் பகையாகிவிடக்கூடாது. இலங்கைப் பிரச்சினை, இலங்கை அரசு - ஈழத் தமிழர்கள் - இந்திய அரசு ஆகியவற்றுக்கு இடையிலேதான் தீர்க்கப்பட வேண்டும். இந்தப் பிரச்சினையில் மற்ற நாடுகள் தலையிடுவதையும் எதிர்க் கிறோம்.*

இப்படிச் சொல்லியிருக்கிறார் சாரி. இதே விடயத்தை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் சொல்லியிருக்கிறார் என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார் அவர். தமிழர் - சிங்களவர் பிரச்சினை என்பது கணவன் - மனைவி சண்டை போன்றது; அதில் பக்கத்து வீட்டுக்காரருக்கு என்ன வேலை என்று கூறி தமிழ் நாட்டின் தலையீட்டை நிராகரித்தமையைத் தான் சாரியும் குறிப்பிட்டுக் கூறியிருந்தார்.

ஆனால் சாரியும் இந்தியாவும் இதில் ஒரு விடயத்தைக் கவனிக்கத் தவறிவிட்டன. பல்வேறு அழுத்தங்கள் இருந்தபோதும், தமிழகத்தின் தலையீட்டைக்கூட நிராகரித்து, வடக்கு முதலமைச்சர் தெரிவித்த அந்த நல்லெண்ணக் கருத்தைப் பற்றிப் பிடித்துக்கொண்டு பதில் நடவடிக்கையை எடுக்க இலங்கை அரசு முற்றாகத் தவறிவிட்டது. வடக்கு முதலமைச்சர் தமது பதவியேற்பு முதல் காட்டிய பல நல்லெண்ணச் சமிக்ஞைகளுக்கு சாதகமாகப் பதிலளித்து இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழியில் முன்னேறுவதற்கு இலங்கை அரசு தவறிவிட்டது.

இத்தகைய ஒரு நிலையில், இந்தப் பிரச்சினை வெறும் கணவன் மனைவிப் பிரச்சினையாக மட்டும் இல்லை. அது விவாகரத்துக் கோரி நீதிமன்றத்துக்கு வந்துவிட்டது. நீதிபதியாக நியாயம் வழங்க வேண்டியது இந்தியா என்றுதான் அப்பாவித் தமிழர்களும், தலைவர்களும் நம்புகிறார்கள். அவர்களுக்கு மீண்டும் ஒரு துரோகத்தைத் தாங்கும் மனத்தைரியம் இல்லை. மோடி புரிந்துகொள்ள வேண்டியது இதைத்தான்.

# மஹிந்தரின் வலைக்குள் மோடியும் சிக்கிக் கொள்வாரா?

சேரலாதன்

புதிய இந்தியப் பிரதமராக நரேந்திரமோடி பதவியேற்றுள்ளார். அவர் சார்ந்த பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர்களையெல்லாம் பின்தள்ளிவிட்டு இந்திய நாட்டின் அதிகாரம் மிக்க உயர்பதவியில் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு மோடி அமர்ந்திருக்கப் போகின்றார். பெருமை மிக்க காங்கிரஸ் கட்சி ஒரு மூலையில் அமர்ந்திருப்பதைத் தவிர வேறு வழியே இல்லை. கடந்த பத்து ஆண்டுகளாக இந்தியாவை ஆட்டிப் படைத்த நேரு குடும்பத்தின் சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தமை மோடியின் பெரும் சாதனைதான்.

ஆனால் இந்தியப் பிரதமர் பயணிக்கப் போகின்ற பாதை பஞ்சு மெத்தைகளால் ஆனதல்ல. கரடு முரடான, மேடுபள்ளம் நிறைந்த, கற்களையும், முட்களையும் கொண்டதொரு பாதை அவரது பயணத்துக்காகக் காத்திருக்கின்றது. பல இன, மொழி, மத, கலாசார விழுமியங்களின் கூட்டுக் கலவையால் உருவானதுதான் இந்திய நாடு. பலம் வாய்ந்த மாநில அரசுகளும் அங்கு அமைந்துள்ளன. இவற்றுள் சில ஆளும் கட்சியின் கொள்கைகளுடன் உடன்பட்டவை அல்ல. ஆகவே இவற்றையும் அரவணைத்துக் கொண்டு செல்லக் கூடிய திறமை புதிய இந்தியப் பிரதமரிடம் நிச்சயம் அமைந்திருக்க வேண்டும். இந்திய நாட்டைச் சூழவுள்ள நாடுகள் யாவும் இந்தியாவுடன் நட்புறவைக் கொண்டிருக்கவில்லை. சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் நிரந்தர எதிரி நாடுகளாக உள்ள நிலையில் வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், நேபாளம், மாலைதீவு, இலங்கை, மியன்மார் ஆகியன இந்தியாவுடனான உறவுகளைப் பொறுத்தவரையில் மதில் மேல் பூனை போன்றதொரு நிலைப்பாட்டையே கொண்டுள்ளன. ஆசியப் பிராந்தியத்தில் சீனா தனது இராஜதந்திர வியூகங்களை விஸ்தரித்துச் செல்வது இதற்கான முக்கிய காரணமாகும். மேலும் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், மாலைதீவு என்பன முஸ்லிம் நாடுகள் என்பதால் அவை தமக்கான தனித்துவத்தைப் பேணவே விரும்புகின்றன. இந்தியாவில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் மோதல்கள் ஏற்படும்போது அவற்றின் தாக்கங்கள் இந்த நாடுகளிலும் உணரப்படுகின்றன.

இந்த நிலையில் நரேந்திரமோடி தம்மையொரு தீவிர இந்துத்துவவாதியாகவே எப்போதும் அடையாளப்படுத்தி வந்துள்ளார். இளவயதிலிருந்தே ஆர்.எஸ். எஸ். இயக்கத்தில் இணைந்து அதில் ஊறிய அவரால் ஒருபோதுமே இந்துத் துவ வலையிலிருந்து விடுபட முடியாது. மோடியின் பெரு வெற்றிக்கு ஆர்.எஸ். எஸ் இயக்கத் தொண்டர்கள் தமது உழைப்பை முழு அளவில் வழங்கியிருந்தனர். ஆகவே மோடி தமது தற்போதைய நிலைப்பாட்டிலிருந்து விலகவே முடியாத நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது.

மோடியின் பதவியேற்பு நிகழ்வில் சம்பிரதாயங்களை மீறிய வகையில் சார்க் நாடுகளின் அரசுத் தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இதில் பாகிஸ்தான் நாட்டின் பிரதமர் நவாஸ் ஷெரீப் கலந்துகொண்டமை பலரையும் ஆச்சரியத்தில் மூழ்க வைத்துவிட்டது. எமது நாட்டின் ஜனாதிபதியும் கலந்து கொண்டிருந்தார். ஆனால் இங்கேதான் பிரச்சினையே ஆரம்பித்தது. இலங்கையின் போர்க் குற்றவாளியாகக் கருதப்படும் மஹிந்த ராஜபக்ஷவை இந்தியாவுக்கு அழைத்தமை தவறென இந்தியாவின் தமிழ்நாட்டில் மட்டுமல்ல அண்டை மாநிலங்களிலும் வாழும் தமிழர்கள் போர்க்கொடி எழுப்பினர். பல்வேறு இடங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் இடம்பெற்றன. குறிப்பாக ம.தி.மு.க தலைவர் வைகோ தலைமையில் இந்தியத் தலைநகரில் இடம்பெற்ற மஹிந்த எதிர்ப்புப் பேரணி முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது. தாம் பதவி யேற்ற முதல் நாளிலேயே மோடி தமிழர்களின் எதிர்ப்பை எதிர் கொள்ள வேண்டியதொரு சூழ்நிலை உருவாகிவிட்டது. மேலும் தமிழக முதல்வர் ஜெயலலிதா, ரஜினிகாந்த் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் மோடியின் பதவியேற்பு நிகழ்வைப் புறக்கணித்துவிட்டனர். இதை விட வேறு நான்கு மாநில முதல்வர் களும் பதவி யேற்பு நிகழ்வில் கலந்து கொள்ளவில்லையெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளை அழிக்க வேண்டுமென்ற இலங்கை அரசின் முயற்சிகளுக்கு புலிகளைப் பழிவாங்கும் உணர்வுடன் இருந்த சோனியா காந்தி முழு ஆதரவை வழங்கினார். அவரது கைப்பாவையாக விளங்கிய மன்மோகன்சிங் தலைமையிலான இந்திய அரசு இலங்கைக்கு முழு உதவிகளையும் வழங்கியது. இலங்கை அரசும் தமது திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டது. தற்போது காங்கிரஸ் அல்லாத அரசு ஒன்று இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதால் அதனைச் சமாளிப்பதற்குத் தமது வழக்கமான நடைமுறைகளை இலங்கை ஜனாதிபதி ஆரம்பிக்கப் போகின்றார் என்பதில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. ஏனென்றால் ஐ.நா. செயலாளர் நாயகம் பான்-கீ மூன் மற்றும் உலக நாட்டுத் தலைவர்களுக்கு "அல்வா" கொடுத்த அனுபவம் அவரிடம் நிறையவே உள்ளது. எந்த விடயத்தையும் எவ்வாறு சமாளிப்பது என்பதில் அவரைவிடத் திறமைசாலிகளான தலை வர்கள் இல்லையென்றே கூறிவிட முடியும். இதனால்தான் மோடியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொள்ளவந்த முன்னாள் பிரதமர் மன்மோகனை அவர் கண்டுகொள்ளவில்லையெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இனிமேல் சோனியா காந்தி யைக் கண்டால் அவர் தூர விலகிவிடுவார் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவை யில்லை. இனிமேல் அவரது பிரதான இலக்காக இந்தியாவின் புதிய அரசு இருக்கப் போகின்றது. அதிலும் புதிய வெளிவிவகாரத்துறை அமைச்சரான சுஷ்மா சுவராஜ் ஏற்கெனவே மஹிந்தருக்கு அரசியல் ரீதியில் நெருக்கமானவர் என்ற தகவல்களும் கசிந்துள்ளன. இது போதாதா மஹிந்தர் காய்களை நகர்த்துவதற்கு? மேலும் நரேந்திரமோடி பிரதமர் பதவியில் அமர்ந்துள்ள போதிலும் கட்சியைப் பொறுத்தளவில் சுஷ்மா அவரைவிட மூத்தவர். கட்சிக்குள் அதிக செல்வாக்குப் படைத்தவர். அத்வானிக்கு மிகவும் நெருக்கமானவர். ஆகவே அவரது கருத்துக்கு மோடி கட்டுப்பட்டே ஆகவேண்டும். இதைவிட இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை எவரும் வீட்டோ செய்துவிட முடியாதென மோடி தெரிவித்ததாகவும் கூறப்படுகின்றது. இவையெல்லாம் இலங்கை அரசுக்கும் அதன் ஜனாதிபதிக்கும் சாதகமான அம்சங்களாகும். மேலும் தாம் பதவியேற்ற முதல் நாளே தமிழர்களின் எதிர்ப்பைச் சம்பாதித்தமை மோடியின் மனதில் உறுத்தலை ஏற்படுத்திவிடாது எனக் கூறமுடியாது.

இந்த நிலையில் இந்தியாவின் புதிய அரசை தமது வலைக்குள் சிக்க வைப்பதில் மஹிந்தர் தீவிரமாக ஈடுபடப் போகின்றார். தம் மீதும், தமது படையினர் மீதும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுபட வேண்டுமாயின் இந்திய அரசின் ஆதரவு நிச்சயம் தேவை என்பதை அவர் நன்கறிவார். ஆகவே மோடியைச் சிக்க வைப்பதற்கான வியூகங்கள் வகுக்கப்படப் போகின்றன. இதில் மோடி சிக்குவாரா அல்லது தப்பித்துக் கொள்வாரா என்பதற்குக் காலம் தான் பதில் கூறமுடியும்.



**பதவியேற்ற முதல் நாளே தமிழர்களின் எதிர்ப்பைச் சம்பாதித்தமை மோடியின் மனதில் உறுத்தலை ஏற்படுத்திவிடாது எனக் கூறமுடியாது. இந்த நிலையில் இந்தியாவின் புதிய அரசை தமது வலைக்குள் சிக்க வைப்பதில் மஹிந்தர் தீவிரமாக ஈடுபடப் போகின்றார்.**

திருமதி மேரிதிரேசா பசுபதி
(இளைப்பாறிய அதிபர்)



தொல்காப்பியத்திலிருந்து தண்டியலங்காரம், யாப்பருங் கலக்காரிகை, நிகண்டு, நன்னூல், நன்னூல் காண்டிகையுரை இலக்கணச்சுருக்கம் என்ற நூல்களாக வெளிவந்துள்ளன. எனவே நவீன காலத்திலும் அவற்றைப் பேணவேண்டிய அவசியத்தையும் தேவையையும் உளப்பூர்வமாகச் சிந்தித்துக் கொண்டு அதனை ஒரு கலையாகவே கொள்ள வேண்டும்.

# கற்றல் கற்பித்தலுக்கு அப்பாலும் தமிழ் மொழியாற்றலை விருத்தி செய்தல்

உலகிலேயே வழக்கிலிருந்து வரும் இராண்டாயிரம் மொழிகளுள் செம்மைத் தமிழ்மொழியும் ஒன்றாகும். இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மொழிவல்லுநரான தொல்காப்பியனார் தமிழ் மொழிக்கு வகுத்துள்ள இலக்கண வரம்பானது ஆச்சரியத்துக்குரியதும் அழிக்க முடியாததும் ஆகும். தமிழ் மொழியானது அன்னாரைத் தொடர்ந்து காலாகாலமாக இலக்கண அடிப்படையிலேயே பேணப்பட்டு வந்தது. குறட்பாக்களை அடிப்படையாகக் கொண்ட அவரது பாக்கள் "சூத்திரங்கள்" என அழைக்கப்பட்டன.

இந்தச் சூத்திரங்களைத் தெளிவாக விளங்கிக் கொண்டு அவற்றை மனனம் செய்வதும் வழக்கமாக இருந்து வந்தது. சூத்திரங்களால் கருதுகோள்கள் நிறைவேறியதோடமையாது ஒவ்வொரு தமிழ் எழுத்துக்களும் உடலின் எந்தெந்த உறுப்புக்களின் தொழிற்பாட்டால் உச்சரிக்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள், ஆர்வலர்கள் இவற்றை கருத்தில் கொள்ள வேண்டிய அவசியத்தை கூறுகையில்:

ஆரம்பத்தில் காது, வாய், நாக்கு, மூக்கு, மேல் அண்ணம், தொண்டை, பற்கள் இவற்றின் இடர்பாடுகளால் மொழிகளை கற்பதில் தடைகள் உள்ளனவா என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டியவர்கள் ஆசிரியர்களும் பெற்றோர்களுமாவர்.

இவற்றுக்கான நவீன தொழில்நுட்ப முறைகளுடன் கூடிய வைத்திய ஆலோசனைகள், தொடர்புகளைப் பேணுவதில் தாமதிக்கக் கூடாது. பாரம்பரிய குறைபாடுகளாலும் சூழல் சார்ந்த குறைபாடுகளாலும் திக்கிப் பேசுதல் ழகர, ளகர, லகர பேதப் பேச்சுகள் பேசப்படுவது சாதாரண்மான குறைபாடுகளாகும். இவற்றை ஆசிரியர்கள் ஆரம்பத்திலேயே இனங்கண்டு கொள்ள வேண்டும்.

தொல்காப்பியத்திலிருந்து தண்டியலங்காரம் யாப்பருங்கலக்காரிகை, நிகண்டு, நன்னூல், நன்னூல் காண்டிகையுரை, இலக்கணச்சுருக்கம் என்ற நூல்கள் வெளிவந்துள்ளன. எனவே நவீன காலத்திலும் அவற்றைப் பேண வேண்டிய அவசியத்தையும் தேவையையும் உளப்பூர்வமாகச் சிந்தித்துக்கொண்டு அதனை ஒரு கலையாகவே கொள்ள வேண்டும். இது இன்றைய ஆசிரியர்களின் பெரிய பொறுப்பும் கடமையுமாகும்.

இந்தக் கருத்தை உள்வாங்கியே சோக்கிரட்டீஸ் என்ற தத்துவஞானி ஆசிரியர் "ஞான விளக்குகள்" எனக் குறிப்பிடுகிறார் Teaching is one of the fine arts என்னும் கூற்றினையும் கருத்தில் கொள்ள வேண்டும் Some are born teachers எனவும் கூறப்படுகின்றது. மேற்படி கருத்துக்களை உள்வாங்கியவர்கள் பலர் நம்முள் காணப்படுவது மகிழ்ச்சிக்குரியதும் வரவேற்கத்தக்கதுமாகும்.

கற்பித்தலினூடாக மொழியாற்றலை வளர்ப்பதற்கு ஆசிரியர்கள் பல்வேறு முயற்சிகளைக் கையாள வேண்டும். இன்பத்தமிழ், செம்மைத்தமிழ், தேன்தமிழ் என்றெல்லாம் புகழப்பட்டு வரும் தமிழ் மொழி, பூர்வீகமானது என்பதற்கப்பால் வேறு எந்த மொழியிலுமில்லாத தனித்துவமான கட்ட மைப்பைக் கொண்டது.

*"இயல் இசை நாடகம் என்பது பிரிவு*
*எந்த மொழியிலுண்டு இயம்புவீர் சிறிது"* எனப் பாடல் பெற்றது. முத்தமிழையும் ஒன்று சேரக் கற்பிப்பது சிறந்த முறையாகும். பொதுவாக இயற்தமிழ் பற்றிய மனப் பேதமையை முதலில் நீக்க வேண்டும் இதனைப் பலவாறு எண்ணி பேரறிஞரான அமரர் கி.வ.ஜகந்நாதன் இயற்றமிழை தெளிவாக்கிட "பயப்படாதீர்" என்ற நூலை ஆக்கி வெளியிட்டுள்ளார்.

பேச்சு வழக்குத் தமிழ் பற்றிக் கூறும் போது பண்டைய தமிழர் மத்தியில் காணப்பட்ட மொழியாள்கை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள், வணிக நாகரிகம் போன்றவற்றையும் வாழும் தமிழ் என்ற நூலின் வாயிலாகக் கூறியுள்ளார். தமிழ் பற்றி மேலும் டாக்டர் உருத்திரமூர்த்தி என்னும் உளவியல் நோக்குநர் தமது "எண்ணங்கள்" என்ற நூலின் வாயிலாக மொழியும் சிறந்த கலைகளும் உளத்தோடு மட்டுமில்லாது உடலுறுப்புக்களையும் சென்றடைவதாகக் குறிப்பிடுகிறார்.

சில வருடங்களின் முன்னர் டாக்டர் கதிர்காமநாதன் என்னும் உளவியல் நோக்குநர் வழங்கிய செவ்வியில் மேற்கத்தேய நாடுகளின் கல்வி முறையில் ஆரம்ப வகுப்புக்களில் குழுமுறைக் கல்வியமைப்புத் தமது மனத்தைப் பெரிதும் ஈர்த்ததாக குறிப்பிட்டமையை பலர் அவதானித் திருக்க முடியும். இவ்வாறு காலத்துக்குக் காலம் வெளியாகும் உளவியல் கல்விச் சிந்தனைகள் அனைத்தையும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் இம் மிலேனிய ஆண்டானது உலகமயமாக்கலில் உள்வாங்கப்படுவதையும் சிந்திக்க வேண்டும்.

ஆயினும் இதர மொழிகளுக்கு முன்னுரிமை கொடுத்துக் கற்பிப்பதும் தமிழ் மொழியை அதன் கட்டமைப்பிலிருந்து வழுகச் செய்வதும் காலத்தின் தேவையென நியாயப்படுத்த முடியாது. ஒருவர் எத்தனை மொழியை வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளலாம். அத்தனைக்கும் அடிப்படை தாய் மொழியின் கருவூலகங்களெனில் மிகையாகாது.

நாம் எவ்வகையில் எமது தாய்மொழியான தமிழ்மொழியைக் கற்று அதில் ஆற்றல் மிக்கவர்களாக திகழ முடியுமோ அவ்வகையில் எமது உள்ளமும் சிந்தனைகளும் பேருவகை கொள்ள முடியும். இந்தக் கருத்தை ஒட்டியதாய் வள்ளுவப் பெருந்தகையின் குறளொன்றினை நோக்குங்கள்

"யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு" என்கிறார்.

ஆதியில் தமது உள்ளக் கருத்துக்களை சைகை மூலம் வெளிப்படுத்தி வந்த மக்கள் கூட்டம் காலக்கிரமத்தில் டா, டோ.டி என்ற எழுத்துக்கள் மூலம் கருத்து வெளிப்பாடு செய்ததாகக் கூறப்படுகிறது. இவைகளே மொழியின் ஆரம்பப் படிநிலையைத் தோற்றுவித்தன எனவும், இவ்வெழுத்துக்கள் தமிழ்மொழியில் மட்டும் கருத்து வெளிப்பாட்டுச் சொற்களாக அமைவதையும் மொழியாராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனாலேயே யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம் என அமரகவி பாடியதும் அர்த்த பூர்வமானதெனலாம். முத்தமிழையும் ஒன்று சேரக் கற்பித்தல் , சிறந்த முறை எனலாம். ஒரு கிழமையில் அமையும் ஏழுபாடவேளைகளில் இவற்றைப் பயன்படுத்தலாம். பாடப்புத்தகங்களிலுள்ள அநேகமான பாடங்களை இவ்வாறு அமைத்துக் கொள்ளலாம். இதில் ஆசிரியர்களின் திறமையும், முயற்சியும் முக்கியமானதாகும். நாடகப் பாத்திரங்களைத் தெரிவு செய்தல் எல்லோரையும் சம்மந்தப்படுத்து தல், குறிப்பிட்ட தலைப்பை ஒட்டி பாட்டாக்கம் செய்தல், பாக்களை இசையோடும் அசைவோடும் பாடச்செய்தல், பின் மேடையேற்றல் என்பன இடம்பெறலாம். இம் முறையானது ஆரம்ப வகுப்புக்களைவிட இடைநிலை, உயர்கல்வி வகுப்புக்களில் பயனுள்ளதாக அமைவது குறிப்பிடக் கூடியதாகும். இயற்தமிழிற் காணப்படும் முக்கிய கருத்துக்களைப் பதிவு செய்தல். வகுப்பறைகளில் தொங்கவிடுதல் அவற்றின் பொருளுணர்ந்து மனனம் செய் தல் என்பன பாட நிறைவைத் தருபவை

B V z D (தொடரும்)

# எங்கள் குருநாதன் யோகர் சுவாமிகள்

## அவர் அவதரித்த தினம் நாளை


ஈழ நாட்டில் வடபால் மாவிட்டபுரத்தில் அம்பலவாணர் என்னும் சைவப் பெரியாருக்கும் சைவநெறி தவறாத சின்னாச்சி அம்மையாருக்கும் 1872 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி புதன்கிழமை காலையில் அவிட்டத் திருநாளில் யோகநாதன் அவதரித்தார்.

அக்காலத்தில் சைவப்பாடசாலைகள் அதிகம் இல்லை. யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் சிறிய தகப்பனார் இவரைக் கொண்டு போய்ப் படிப்பதற்காகச் சேர்த்தார். தந்தை வழி மாமியாராகிய முத்துப்பிள்ளை அவர்களுடைய இல்லத்தில் தங்கியிருந்து கல்வியைத் தொடர்ந்தார். முத்துப்பிள்ளை சைவநெறி தவறாத அம்மையார். சுவாமி கள் ஆங்கிலமும் செந்தமிழும் கற்றபின் கிளிநொச்சியில் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தொழில் புரிந்தார்.

பழைய தவம் வந்து கைகூட, நல்லூர் தேரடியில் செல்லப்பா சுவாமிகளை அணுகினார். அவர் முன் சென்றதும் பரவச நிலை அடைந்தார். செல்லப்பா சுவாமிகள் "நீ ஆரடா" என்று அதட்டி "உன்னுள்ளே பாரடா" என்றும் பக்குவம் நோக்கி தீட்சையும் செய்தருளினார்.

ஒரு பொல்லாப்பு மில்லை . எப்பவோ முடிந்த காரியம், நாம் அறியோம், முழுவதும் உண்மை என்று நான்கு மகாவாக்கியங்களையும் சுவாமிகள் உபதேசித்தார். சீடரான யோகநாதர் தேரடியில் பல்நாள்கள் தியானத்தில் அமர்ந்த பின் குருவின் பணிப்பு பின்படி நல்லூரை விட்டுக் கால்நடையில் காடும் மலையும் கடந்து கதிர்காமத்தை அடைந்தார். துறவறத்தை மேற்கொண்ட சுவாமிகள் கதிரமலை யாத்திரையின் பின் கொழும்புத்துறை சுவாமியார் வீதிச் சந்தியில் உள்ள இலுப்பை மரத்தடியில் உட்கார்ந்திருக்கும் வழக்கத்தை மேற்கொண்டார். இவ்விருட்சத்தின் அருகில் நன்னியர் என்னும் ஒருவர் கடை வைத்திருந்தார். செல்லப்பா சுவாமிகள் அந்தக் கடைக்குப் போவதுண்டு. சில காலம் சென்ற பின் நன்னியர் கடையை விட்டுப் போகவே அது வெற்றிடமாயிற்று. அந்தக் குடிசையில் யோகசுவாமிகள் சென்று தவத்தினில் வைகினார். அந்தக் குடிசை அன்பர்கள் வந்து தொழும் ஆச்சிரமமாகியது. அங்கு அமைதி ஒளிரப்பெற்றது. வெள்ளிக்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் அடியார் கூட்டம் அதிகளவில் இருக்கும். தேவாரம், திருவாசகம், சிவபுராணம், திருப்புகழ், திருமந்திரம், நற்சிந்தனை முதலானவைகளையும் பாராயணம் செய்வார்கள். சுவாமிகள் அடியார்க்கு ஏற்ற புத்திமதி சொல்வார்கள். அன்பர்கள் கொடுக்கும் பொருள்களை மற்றவர்க்குக் கொடுப்பதே அவர் வழக்கமாகக் காணப்பட்டது.

இவ்வாறு அடியார்க்கு உய்யும் நெறி காட்டிய ஐயன், வழக்கம் போல் ஒரு நாள் ஆவுக்கு உணவைக் கொண்டு அணுகும் போது அப்பசு அவாவினால் துள்ளிப்பாயச் சுவாமிகள் திடீரெனத் திரும்பிய போது விழுந்து பின்பு சில்லில் இயங்கும் நாற்காலியின் உதவி கொண்டு உலாவி வந்தார். எம் சுவாமிகள் இருந்த இருப்பிலிருந்தே தம்மிடம் வரும் அன்பர்கள் தத்தமக்குரிய பணிகளை வினவ அவர்களுக்கெல்லாம் வழிகாட்டி அருளி பாத யாத்திரை ஆகியவற்றைச்



செய்வித்தார். சிவதொண்டன் நிலையத்துக்கு எழுந்தருளி சில தினங்கள் தங்கியிருந்து ஆசி நல்கினார்கள்.

இவ்வாறு அருள்புரிந்த சுவாமிகள் மகாசமாதி எய்துவதற்குத் திருவுளங்கொண்டு கொழும்புத்துறையில் தான் தொடங்கிய திருவடிப் பூசைத் தினம் பங்குனித் திங்கள் ஆயிலிய நட்சத்திரத்தில் 1964 ஆம் ஆண்டு மகாசமாதியெய்தினார். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கானோர் வந்து சுவாமிகளுக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள். தூயோன் இறுதி யாத்திரையில் துண்டி மயானம் வரையும் உடன் சென்றார்கள். யாத்திரையின் போது வீதியிரு மருங்கும் தோரணம், மா, வாழை நிரை கொண்ட கும்பம் வைத்து குடிமனையிலுள்ளோர் அஞ்சலி செலுத்தினர். திருமேனி கற்பூரச் சோதி மயமாய் நீறாகிச் சாம்பல் மண்குடத்தில் சேமிக்கப்பட்டு ஐயன் இருந்த கொட்டிலில் சமாதி கோயில் கட்டப்பட்டு அந்த கோயிலில் தாபிக்கப்பட்டுப் பூசிக்கப்பட்டு வருகிறது.

யோகசுவாமிகளின் திருவடி வாழ்க.

***செல்வி யோ. விநாசித்தம்பி***

# ஜேட்லிக்கு நிதி, பாதுகாப்பு சுஷ்மாவுக்கு வெளிவிவகாரம்

## உள்துறை அமைச்சராக ராஜ்நாத் பதவியேற்பு

புதுடில்லி, மே 28

மத்திய அமைச்சர்கள் விபரங்கள் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன. அருண் ஜேட்லிக்கு நிதி, பாதுகாப்பு அமைச்சுகளும், சுஷ்மா சுவராஜுக்கு வெளியுறவுத் துறையும், ராஜ்நாத் சிங்குக்கு உள்துறை அமைச்சும் ஒதுக்கப்பட்டுள்ளன.



அருண் ஜேட்லி



சுஷ்மா சுவ ராஜ்

அமைச்சரவை அமைச்சர்கள்:

1. ராஜ்நாத் சிங்- உள்துறை அமைச்சகம்.
2. அருண் ஜேட்லி - நிதி, பாதுகாப்பு.
3. சுஷ்மா சுவராஜ் - வெளியுறவு அமைச்சகம்.
4. வெங்கய்ய நாயுடு - நகர்ப்புற வளர்ச்சி, வீட்டுவசதி, வறுமை ஒழிப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை.
5. கோபிநாத் முண்டே- பஞ்சாயத்து ராஜ்ய, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகங்கள்.
6. ராம் விலாஸ் பாஸ்வான்- நுகர்வோர் விவகாரத்துறை மற்றும் உணவு, வழங்கல் துறை.
7. நிதின் கட்கரி- போக்குவரத்து, நெடுஞ்சாலை மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை.
8. மேனகா காந்தி - பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்துறை.
9. கல்ராஜ் மிஸ்ரா- சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறை.
10. நஜ்மா ஹெப்துல்லா- சிறுபான்மை விவகாரத்துறை.
11. ஆனந்த் குமார் - ரசாயனம் மற்றும் உரத்துறை.
12. ரவிசங்கர் பிரசாத்- தொலைத் தொடர்பு, தகவல் தொழில் நுட்பம் மற்றும் சட்டம், நீதித் துறை.
13. ஆனந்த கீதே - கனரக தொழில்துறை மற்றும் பொதுத் துறை.
14. உமாபாரதி - நீர் வள மேலாண்மை.
15. அசோக் கஜபதி ராஜூ - விமான போக்குவரத்துத்துறை.
16. ஹர்சிம்ரத் கவுர் பாதல் - உணவு பதப்படுத்துதல் துறை.
17. நரேந்திர சிங் தோமர்- சுரங்கம் மற்றும் இரும்புத் துறை; தொழில் மற்றும் வேலை வாய்ப்புத்துறை.
18. ஜுவல் ஓரம் - பழங்குடியின் விவகாரத்துறை.
19. ஹர்ஷ வர்த்தன்- சுகாதாரத் துறை.
20. ஸ்மிருதி இராணி- மனித வள மேம்பாடு.
21. ராதா மோகன் சிங்- விவசாயம்.
22. தாவர்சந்த் கெலாட்- சமூக நீதி.
23. சதானந்த கவுடா- ரயில்வே அமைச்சர். (த)

### இணை அமைச்சர்கள் இவர்கள்

புதுடில்லி, மே 28

1. ஜெனரல் வி.கே.சிங்- வடகிழக்கு பிராந்திய வளர்ச்சி, வெளியுறவு விவகாரம், வெளிநாடு வாழ் இந்தியர் விவகார துறை. 2. இந்திரஜித் சிங்ராவ் - திட்டமிடுதல், புள்ளியல், திட்ட அமுலாக்கம், பாதுகாப்பு அமைச்சகம் 3. சந்தோஷ் கங்க்வார் - ஜவுளித்துறை, நாடாளுமன்ற விவகாரத் துறை, நீர்வளம், நதிகள் மேம்பாடு, கங்கை நதி புனரமைத்தல். 4. ஸ்ரீபத் எஸ்ஸோ நாயக்- கலாசாரம் மற்றும் சுற்றுலா. 5. தர்மேந்திர பிரதான் - பெற்றோலியம், இயற்கை எரிவாயு. 6. சர்வானந்த சோனோவல் - விளையாட்டு, தொழில் முனைவோர் மேம்பாடு, திறன்சார் மேம்பாடு. 7. பிரகாஷ் ஜவடேகர்- தகவல் ஒலிபரப்பு, சுற்றுச் சூழல், வனம், பருவநிலை மாற்றம், நாடாளுமன்ற விவகாரத்துறை.

8. பியுஷ் கோயல்- மின்சாரம், நிலக்கரி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை. 9. ஜிதேந்திர சிங்- அறிவியல் தொழில்நுட்பம், புவி அறி வியல் துறை. 10. நிர்மலா சீதாராமன்- வர்த்த கம் மற்றும் தொழில்துறை மற்றும் நாடாளுமன்றத் துறை.

11. ஜி.எம்.சித்தேஸ்வரா- விமான போக்குவரத்துத் துறை.

12. மனோஜ் சின்ஹா- ரயில்வே துறை. 13. நிஹால் சந்த்- ரசாயனம் மற்றும் உரத் துறை. 14. உபேந்திர குஷ்வாஹா- ஊரக வளர்ச்சித் துறை, குடி நீர், சுகாதாரம், பஞ்சாயத்து ராஜ் துறை.

15. பொன்.ராதாகிருஷ்ணன்- கனரக தொழில்துறை.

16. கிரண் ரிஜிஜு- உள்துறை.

17. கிரிஷன் பால் குர்ஜார்- சாலை போக்குவரத்து, நெடுஞ் சாலை, கப்பல் போக்குவரத்து துறை. 18. சஞ்சீவ் குமார் பாலியான்- விவசாயம், உணவு பதப்படுத்துதல் துறை.

19. மன்சுக்பாய் வாசவா- பழங்குடியின விவகாரத் துறை.

20. ராவ் சாஹிப் தான்வே- நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் வழங்கல் துறை.

21. விஷ்ணுதேவ் சாய்- சுரங்கம், இரும்பு, தொழில், வேலைவாய்ப்புத் துறை.

22. சுதர்சன் பகத்- சமூக நீதித் துறை. (த)

### சிறிய அமைச்சரவை

புதுடில்லி, மே 28

இதற்கு முன்பு இருந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அமைச்சரவையில் 28 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், 11 தனிப்பொறுப்பு இணை அமைச்சர்கள், 32 இணை அமைச்சர்கள் என 71 அமைச்சர்கள் இருந்தனர். இந்தக் கூட்டணி 2009 நாடாளுமன்றத் தேர்தலில் 234 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி 336 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இந்தக் கூட்டணி சார்பில் 46 பேர் மட்டுமே அமைச்சர்களாக இடம்பெற்றுள்ளனர். (த)

# மும்பைத் தாக்குதல் வழக்கு: மோடி - நவாஸ் நேற்று பேச்சு


புதுடில்லி, மே 28

பிரதமர் நரேந்திர மோடியை, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

மோடி பிரதமராகப் பதவியேற்றப் பிறகு பாகிஸ்தான் பிரதமருடன் நடைபெறும் முதல் நல்லுறவுப் பேச்சு இதுவாகும்.

இந்தச் சந்திப்பின் போது, பிரதமர் மோடியுடன், வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ், வெளியுறவுச் செயலர் சுஜாதா சிங் ஆகியோர் உடன் இருந்தனர்.

**இரு நாடுகளின் முக்கியப் பிரச்சினையாக இருக்கும் பயங்கரவாதத்தை ஒடுக்குவது குறித்து இருவரும் ஆலோசித்ததாக தெரிகிறது.**



நவாஸ் ஷெரீப் நரேந்திர மோடியுடன் சந்திப்பு

முன்னதாக, ஹைதராபாத் இல்லத்தில் மோடி - நவாஸ் சந்திப்பு நடைபெற்றது. அங்கு வருகைதந்த நவாஸ் ஷெரீப்பை மோடி கைகுலுக்கி வரவேற்றார்.

பாகிஸ்தானில் நடைபெற்று வரும், மும்பை 26 / 11 பயங்கரவாதத் தாக்குதல் வழக்கு விசாரணை குறித்து நரேந்திர மோடி, நவாஸ் ஷெரீப்பிடம் கேள்வி எழுப்பியுள்ளார். தவிர, இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தக மேம்பாடுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டிருக்கிறது.

இரு நாடுகளின் முக்கியப் பிரச்சினையாக இருக்கும் பயங்கரவாதத்தை ஒடுக்குவது குறித்து இருவரும் ஆலோசித்ததாகத் தெரிகிறது.

மோடி - நவாஸ் சந்திப்பு பெரிய விளைவுகள் எதையும் ஏற்படுத்தாது, இருப்பினும் இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் பதற்றமான சூழலை மாற்றி நல்லுறவு மேம்பட வழி வகுக்கும் 'எனக் கூறப்படுகிறது.

இந்தியாவுக்குச் சமாதான செய்தியுடன் வந்திருப்பதாகவும், 1999 இல் வாஜ்பாயும் - தானும் விட்டுச் சென்ற அமைதிப் பேச்சைத் தொடர விரும்புவதாகவும் நவாஸ் கூறியிருந்தார் என்பது கூவனிக்கத்தக்கது. (த)

### அத்வானிக்கு விருப்பமில்லை

புதுடில்லி, மே 28

பா.ஜ.க. மூத்த தலைவர் எல்.கே. அத்வானி மத்திய அமைச்சரவையில் இடம் பெற விரும்பவில்லை என்பதால், அவருக்குப் பதவி வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

மத்திய அமைச்சரவை பட்டியல் தயாரிக்கும்போது எல்.கே. அத்வானியின் பெயர் பரிசீலிக்கப்பட்டது. அவர் விரும்பும் துறையை ஒதுக்கவும் நரேந்திர மோடி தயாராக இருந்துள்ளார். அத்வானியின் சிஷ்யர் என்று கருதப்பட்டவர் நரேந்திர மோடி. அவர் பிரதமராக இருக்கும் அமைச்சரவையில் அவருக்கு கீழ் பணியாற்ற அத்வானி விரும்பவில்லை. அதனால், சபாநாயகர் பதவி வழங்கலாம் என்று பரிந்துரைக்கப்பட்டது. ஆனால், அத்வானி சபாநாயகர் பதவியையும் ஏற்க முன்வரவில்லை.தேசிய ஜனநாயக் கூட்டணியின் தலைவராக மட்டுமே நீடிக்க விரும்புவதாக அத்வானி திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார். இதனால், அவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படவில்லை என்று பாரதிய ஜனதா கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த)

## மோடியுடன் நல்லுறவு ஜெயலலிதா விருப்பம்

சென்னை, மே 28



ஜெயலலிதா

நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவை புறக்கணித்திருந்தாலும், தமிழக முதல்வா ஜெயலலிதா, மோடியுடன் நல்லுறவு தொடர வேண்டும் என்றே விரும்புவார் என அ.தி.மு.க. வட்டாரம் தெரிவிக்கின்றது.

அரசியல் நிலவரங்களை கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கும் அவர், வெகுவிரைவில் மோடியுடன் ஆலோசனை நடத்த வாய்ப்பிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பதவியேற்பு விழாவுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைக்கப்பட்டமை தான் ஜெயலலிதாவை அதிருப்தி அடைய வைத்த ஒரே நிகழ்வு என அ.தி.மு.க. தலைவர்கள் கூறுகின்றனர். ராஜபக்ஷ பங்கேற்றதாலேயே, மோடி பதவியேற்பு விழாவை முதல்வர் புறக்கணிக்க வேண்டியதாயிற்று என மூத்த தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.

இலங்கைப் பிரச்சினையில், அ.தி.மு.க. விருப்பத்துக்கு மாறாக பா.ஜ.க. முடிவுகள் எடுக்கும் பட்சத்தில் மோடி - ஜெயலலிதா உறவில் விரிசல் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் அ.தி.மு.க. மூத்த தலைவர்கள் சிலர் கூறுகின்றனர். (த)

# மோடி பதவியேற்பில் தனுஷ் - ஐஸ்வர்யா

புதுடில்லி, மே 28



தனுஷ் ஐஸ்வர்யா தம்பதியர்

நரேந்திர மோடி பதவியேற்பு விழாவில், நடிகர் ரஜினிகாந்த் சார்பில் அவருடைய மகள் ஐஸ்வர்யா, கணவர் தனுஷ் கலந்துகொண்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மோடி பதவியேற்பு விழாவில் கலந்துகொள்ள, நடிகர் ரஜினிகாந்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆனால், அந்த விழாவில் இலங்கைஜனாதிபதி ராஜபக்ஷ கலந்துகொள்வதால், ரஜினி பங்கேற்கக்கூடாது என்று ரஜினி வீட்டின் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதனையடுத்து, அவ்விழாவில் பங்கேற்பதை ரஜினிகாந்த் தவிர்த்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், ரஜினியின் மகள் ஐஸ்வர்யா, மருமகன் தனுஷ் ஆகியோர் மோடி பதிவியேற்பு விழாவில் கலந்து கொண்டதாகவும், இதனை ஐஸ்வர்யாவே [illegible] டுவிட்டரில் தெரிவித்[illegible]தாகவும் தகவல்கள் வெளியா[illegible]ள்ளன. இது குறித்து டுவிட்டரில் அவர், டில்லியில் நரேந்திர மோடி பிரத[illegible]ற்ற நிகழ்ச்சியில் [illegible]டேன் [illegible]னாலை [illegible] அவரது வாழ்த்து[illegible]ற்றேன், இது மகிழ்ச்சிக்குரிய தருணம் என்றும், இந்தியன் என்பதிலும் பெருமிதம் கொள்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார். (த)

# போகோ ஹராமினால் கடத்தப்பட்ட மாணவிகள் இருப்பிடம் கண்டுபிடிப்பு

அபுஜா, மே 28
போகோ ஹராம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கும் சிறுமிகளின் இருப்பிடத்தை கண்டுபிடித்துள்ளதாக நைஜீரியப் பாதுகாப்புத் தரப்புத் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் நைஜீரியாவில் போர்னோ மாகாணத்தில் சிபோக் என்ற இடத்தில், பாடசாலை மாணவிகள் 276 பேரை, போகோ ஹராம் தீவிரவாதிகள் கடத்தி சென்று மறைவிடத்தில் சிறை வைத்தனர்.

அவர்களை பாலியல் அடிமைகளாக விற்கப்போவதாக மிரட்டல் விடுத்தனர். இது உலக மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. நைஜீரிய இராணுவத்தால் அவர்களை கண்டு பிடிக்க முடியவில்லை. அதைத் தொடர்ந்து அவர்களை மீட்க அமெரிக்கா இராணுவத்தை அனுப்பியுள்ளது. அந்நாட்டு அரசும் மாணவிகளின் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்க இராணுவத்தை அப்பணியில் ஈடுபடுத்தியது.

தற்போது மாணவிகளை தீவிரவாதிகள் எங்கு மறைத்து வைத்திருக்கிறார்கள் என்பதை இராணுவம் கண்டு பிடித்துவிட்டதாக அந்நாட்டுப் பாதுகாப்பு துறை தலைவரான ஏர் மார்ஷல் அலெக்ஸ் பாடேஹ் தெரிவித்துள்ளார்.

விரைவில் மாணவிகள் மீட்கப்படுவார்கள் என அலெக்ஸ் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். (கு)



பாதுகாப்பு துறை தலைவரான எயார் மார்ஷல் அலெக்ஸ் பாடேஹ்

## பாகிஸ்தான் பஸ் விபத்தில் 16 பேர் சாவு

இஸ்லாமாபாத், மே 28
வடமேற்கு பாகிஸ்தானின் ஸ்வாட் பள்ளத்தாக்கில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற பஸ் விபத்தில் 10 சிறுவர்கள் 5 பெண்கள் உட்பட 16 பேர் உயிரிழந்துள்ளதுடன் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

பஞ்சாப் மாகாணத்தின் சுவாட் மாவட்டத்திலுள்ள கலாம் குன்றுக்கு பயணித்த மேற்படி பஸ் ஆறொன்றுக்கு அண்மையிலிருந்த வீதியில் விபத்துக்குள்ளாகியது.

பஸ்ஸின் சாரதி பஸ்ஸைச் செலுத்திய நிலையில் உறங்கியமையே இந்த விபத்துக்குக் காரணம் என நம்பப்படுகிறது. காயமடைந்தவர்களில் 3 ஆண்களும், 3 பெண்களும் ஒரு குழந்தையும் உள்ளடங்குகின்றனர். (கு)



திட்டமிடப்படாத பயணம் ஒன்றை மேற்கொண்டு ஆப்கானிஸ்தான் சென்ற அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அங்கு கடமையில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் படையினரைச் சந்தித்துப் பேசினார். இதன் போது அவர் ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமீத் ஹர்சாயைச் சந்திக்கவில்லை. (கு)

## குடும்ப சம்மதமின்றி திருமணம்: பெண் கல்லால் அடித்துக் கொலை

### பாகிஸ்தானில் சம்பவம்

லாகூர், மே 28
பாகிஸ்தானின், லாகூர் நகரின் உயர்நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே, ஒரு பெண்ணை அவரது குடும்பத்தினரே கல்லால் அடித்துக் கொலை செய்திருக்கின்றனர்.

இது குறித்து பாகிஸ்தான் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அந்தப் பெண், தங்கள் சம்மதமில்லாமல், ஒருவரைத் திருமணம் செய்துகொண்டார் என்பதுதான் இந்தக் கொலைக்குக் காரணம் என்று அந்தக் குடும்பத்தினர் கூறினர்.

தனது வழக்குக் குறித்த விசாரணைக்காக, அந்தப் பெண் உயர்நீதிமன்றக் கட்டடத்துக்குள் வரும்போது, அவரது தந்தை, சகோதரர்கள் மற்றும் உறவினர்களில் ஒருவர் ஆகியோர் சேர்ந்து அவரைப் பிடித்து வைத்துக் கொண்டு, கற்களால் அவரின் தலையில் தாக்கத் தொடங்கினர் என்று பொலிசார் கூறினர்.

அவரது தந்தையைத் தவிர பிற சந்தேக நபர்கள் எல்லோரும் தப்பியோடிவிட்டனர்.

அவரது தந்தை கைது செய்யப்பட்டிருக்கிறார்.

குடும்பக் கௌரவத்தை காப்பதற்கு என்று பெண்களைக் கொலை செய்வது என்பது பாகிஸ்தானில் நீண்ட காலமாக நடந்து வரும் ஒரு செயல்.

இது குறித்து மனித உரிமைக் குழுக்கள் கவலை வெளியிட்டு வருகின்றன.

பாகிஸ்தானின் சில பகுதிகளில் பெண்களே தங்கள் கணவர்களைத் தேர்வு செய்வது என்பது கலாசார ரீதியாக அந்தப் பகுதிகளில் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்று என்று செய்தியாளர்கள் கூறுகின்றனர். (கு)

## பொம்மை என்று எழுதப்பட்டு வந்த தபால் பொதியில் பெண்ணின் சடலம்

### ஜப்பானில் பயங்கரம்

ரோக்கியோ, மே 28
ஜப்பானில் பொம்மை எனக் குறிக்கப்பட்டு வந்த தபால் பொதியில் இளம்பெண் ஒருவரின் சடலம் இருந்தமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜப்பானின் ஒசாகா சிற்றியைச் சேர்ந்தவர் ரிக்கா ஒகாடா. இவர் கடந்த மார்ச் மாதம் திடீரென மாயமானார்.

ஆனால், மாயமாவதற்கு முன்னதாகத் தனது சினேகிதி ஒருவரைச் சந்திக்க இருப்பதாக பேஸ்புக்கில் தகவல் வெளியிட்டுள்ளார் ரிக்கா.

ஆனால், அதன் பின்னர் அவர் எங்கே சென்றார் எனத் தெரியவில்லை. இந்நிலையில், நேற்றுச் சந்தேகத்துக்கிடமான வகையில் சுமார் 6 அடி 6 அங்குல நீளமான பொதிஒன்றைப் பொலிஸார் கைப்பற்றினர்.

அதன் மேலே பொம்மை என எழுதப்பட்டிருந்தது. அந்தப் பொதி ஒசாகாவின் தென்பகுதி யில் இருந்து அனுப்பப்பட்டிருந்தது.

ஆனால், அனுப்பியவர்கள் குறித்த விபரமில்லை. அந்தப் பொதி ரிக்காவின் பெயரில், அவரது முகவரிக்கு அனுப்பப்பட்டிருந்தது.

> “சுமார் 400 கிலோ மீற்றர் தொலைவைப் பயணம் செய்து வந்த அந்தப் பொதி மீது பொலிஸாருக்குச் சந்தேகம் வந்ததால், பொலிஸார் அதைப் பிரித்துப் பார்த்தனர். அதன் உள்ளே ரிக்காவின் சடலம் இருந்தது.

அதன் கட்டணத்தையும் ரிக்காவின் கடன் அட்டையிலிருந்தே எடுத்துள்ளனர். சுமார் 400 கிலோ மீற்றர் தொலைவைப் பயணம் செய்து வந்த அந்தப் பொதி மீது பொலிஸாருக்குச் சந்தேகம் வந்ததால், பொலிஸார் அதைப் பிரித்துப் பார்த்தனர்.

அதன் உள்ளே ரிக்காவின் சடலம் இருந்தது. ரிக்காவின் உடலில் எண்ணிலடங்காத கத்திக்குத்துக் காயங்கள் இருந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், ரிக்காவைக் கொலை செய்தது அவரது பள்ளித் தோழிதான் என்றும், கொலையாளி ரிக்காவின் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இம்மாத ஆரம்பத்தில் வெளி நாடு சென்றுவிட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இது தொடர்பான தெளிவான விபரங்களை வெளியிட ஒசாகா பொலிஸார் மறுத்துள்ளனர். தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (கு)

## கடவுளின் பெயரால் வன்முறை வேண்டாம்

ஜெருசலேம், மே 28
கடவுளின் பெயரை வன்முறைக்குப் பயன்படுத்த வேண்டாம் என பாப்பரசர் பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துவரும் பாப்பரசர் நேற்று முன் தினம் ஜெருசலேம் நகரைச் சென்றடைந்தார்.

அங்குள்ள இஸ்லாமிய வழிபாட்டு தலம் மற்றும் யூதர்களின் வழிபாட்டு தலம் ஆகியவற்றைத் தரிசித்த அவர் அங்கு கூடியிருந்த மக்களிடையே உரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

மற்றவர்களின் வலியைப் புரிந்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

கடவுளின் பெயரால் வன்முறையை யாரும் பயன்படுத்தக் கூடாது எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (கு)

## ஆப்கானிஸ்தான் ஆபத்தான நாடு

### ஒபாமா அறிவிப்பு



ஒபாமா

காபூல், மே 28
ஆப்கானிஸ்தானில் உள்ள அபாயகரமான சூழலால் அந்த நாட்டை ஆபத்தான நாடு என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அறிவித்துள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி அப்கானிஸ்தானுக்கு இரகசியச் சுற்றுபயணத்தை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மேற்கொண்டார்.

அங்கு பக்ராம் விமானப் படைத் தளத்துக்குச் சென்ற அவர், அமெரிக்க இராணுவ வீரர்களிடம் பேசுகையில், ஆப்கானிஸ்தானில் அல்-கெய்தா தீவிரவாத அமைப்பு தகர்க்கப்பட்டாலும், பின்லேடனை கொன்றுவிட்டாலும், இன்னும் அது அபாயகரமான இடமாகத்தான் உள்ளது.

எந்நேரமும் இருக்கும் பயங்கரவாதிகளின் தாக்குதல்களால், அதிகளவில் அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்படுகின்றனர்.

எனினும் இந்த பயங்கரவாதிகளின் அட்டூழியங்களை ஒடுக்குவதற்கு, பக்ராமில் உள்ள அமெரிக்க இராணுவ படைகள் தீவிரமாக செயல்பட்டு வருகின்றன என வீரர்களைப் பாராட்டி கூறியுள்ளார். (கு)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலைகளை முடிப்பதில் தாமதம் உண்டாகலாம். கணவன், மனைவிக்கிடையே மன வருத்தமடையும் சம்பவங்கள் ஏற்படலாம்.

**இடபம்**: நெருக்கமானவர்களுடன் ஏற்படும் சந்திப்பு மன மகிழ்ச்சியைத் தரும். எதைப்பற்றியாவது யோசித்துக்கொண்டே இருப்பீர்கள். பணத் தேவை உண்டாகும். உத்தியோகத்தில் ஏற்றம் பெறுவது பற்றிய சிந்தனை அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்**: சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய அனுகூலம் ஏற்படும். மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி அமைதி உண்டாகும். எதையும் செய்து முடிக்கும் துணிச்சல் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நினைத்த காரியத்தை நினைத்தபடியே செய்து முடிப்பார்கள்.

**கடகம்**: பகைகள் விலகும். அடுத்தவர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் சரியாகும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். தர்மசிந்தனை அதிகரிக்கும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில் வியாபாரம் சிறப்படையும்.

**சிங்கம்**: வியாபார வளர்ச்சிக்கு இருந்த தடைகள் நீங்கும். அரசாங்கம் தொடர்பான விடயங்கள் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் பதவி உயர்வு உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் காரிய அனுகூலம் உண்டாகும். சக பணியாளர்கள் மூலம் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள்.

**கன்னி**: பேச்சின் இனிமை, சாதுரியத்தால் எளிதில் காரியங்கள் கைகூடும். எதிர்காலத்துக்கு உதவக்கூடிய விடயங்களில் ஆர்வம் உண்டாகும். ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். மனதில் இருந்த குழப்பம் நீங்கித் தைரியம் ஏற்படும். போட்டிகளில் பங்கு பெற ஆர்வம் உண்டாகும்.

**துலாம்**: குடும்பத்தில் இதமான சூழ்நிலை நிலவும். கணவன், மனைவிக்கிடையே சகஜமான நிலை காணப்பட்டாலும் வாழ்க்கைத் துணையைப் பிரிந்து வேலை நிமித்தமாக வெளியில் தங்க நேரிடலாம். மனக்கவலை நீங்கி எதையும் எதிர்கொள்ளும் துணிச்சல் வரும்.

**விருச்சிகம்**: அடுத்தவரை மனம் மகிழச்செய்யும் விதத்தில் பேசி காரியம் சாதிப்பீர்கள். அடுத்தவர்களுக்கு உதவி செய்யப்போய் வீண் பழி சுமக்க நேரிடலாம். கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்காது.

**தனுசு**: அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எந்தவகையிலாவது உழைப்பு வீணாகும். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபங்கள் உண்டாகும். கணவன், மனைவி இருவரும் மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நன்மை தரும்.

**மகரம்**: மனக்குழப்பம் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். மற்றவர்களிடம் பழகும் போது கவனமாக இருப்பது நல்லது. சமூகத்தில் கௌரவம் அந்தஸ்து அதிகரிக்கும்.

**கும்பம்**: வியாபாரம் தொடர்பான பயணங்கள் இலாபம் தருவதாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த வேலைகளைக் கவனமாகச் செய்து முடித்து பாராட்டுப் பெறுவார்கள். செயல் திறமை அதிகரிக்கும்.

**மீனம்**: உங்கள் திறமையைக் கண்டு மற்றவர்கள் பாராட்டுவார்கள். உறவினர் வருகை இருக்கும். யாரிடம் பேசும் போதும் நிதானமாகப் பேசுவது நன்மை தரும். எதிலும் மிகவும் கவனமாக ஈடுபடுவது நன்மை தரும்.

## நாளை

**வைகாசி-15 வியாழக்கிழமை | 29.05.2014**

திதி: பிரதமை பி.இ.01.01 வரை
நட்சத்திரம்: ரோகிணி
மு.இ.07.29 வரை

சுபநேரம்: 07.22-08.52 வரை
இராகுகாலம்: 01.22-02.52 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### வேதாந்தமும் கிறிஸ்தவ மதமும்

உலகின் எல்லாப் பெரிய சமயங்களிடையிலும் பல கருத்துக்களில் ஒற்றுமை இருக்கிறது. சில வேளைகளில் இந்த ஒற்றுமைகள் மிக நெருக்கமாகவும், வியப்பூட்டும் வகையிலும் இருக்கின்றன. இவற்றைப் பார்த்தால் 'பல்வேறு மதங்களும் ஒன்றைப் பார்த்து ஒன்று தத்தமது கொள்கைகளை அமைத்துக் கொண்டனவோ !' என்று கருத இடம் உண்டாகிறது.

இப்படி ஒன்றை ஒன்று பின்பற்றியதுக்குப் பல்வேறு மதங்களின் மீது பழி போடுகிறார்கள். ஆனால், இந்தக் குற்றச்சாட்டுக்களுக்குச் சரியான ஆதாரம் இல்லை என்பது பின்வரும் செய்திகளால் விளங்கும்!

மதம் என்பது மக்கள் சமுதாயத்தின் ஆன்மாவையே அடிப்படையாகக் கொண்டது. உள்ளே இருக்கும் ஒன்றின் பரிணாமமே (விரிவே) எல்லா உயிர்களும், ஆகையால், அது – அந்த உட்பொருள்– தன்னைப் பல்வேறு மக்கள் மூலமாகவும் பல்வேறு நாடுகள் மூலமாகவும் வெளிப்படுத்திக் கொள்ளும் அவசியம் நேரிடுகிறது.

ஆன்மாவின் மொழி ஒன்றுதான்; ஆனால் உலக மொழிகளோ பல. உலக மக்களின் பழக்க வழக்கங்களும் பெரிதும் மாறுபட்டனவாகவே இருக்கின்றன. சமயம் ஆன்மாவுக்கே உரியது; ஆன்மா பல்வேறு நாடு, மக்கள், மொழிகள், பழக்க வழக்கங்கள் இவை மூலமாகத் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது. எனவே உலக சமயங்களுள் காணப்படும் வேறுபாடு உபதேச முறையில்தானே தவிர அடிப்படையில் அல்ல. அவற்றுள் காணப்படும் ஒற்றுமைகளும் ஒழுங்கும் ஆன்மாவைப் பொறுத்தவை. ஆன்மாவின் மொழி ஒன்றே. ஆகையால், எந்தச் சூழ்நிலையில் எந்த மக்களிடையே இது தன்னை வெளிப்படுத்திக் கொண்டாலும், உட்பண்புகள் ஒரு தன்மையனவாகவே உள்ளன. எல்லா வகை இசைக் கருவிகளிலும் ஓசை இனிமையாக இருப்பது போல, இது வெளிப்படும் இடங்களில் எல்லாம் இன்ப நிறைவு இருக்கிறது.

## கின்னஸில் இடம்பிடித்த முதியவர்



அமெரிக்காவில் 111 வயது முதியவர் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்று சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் மாகாணத்தில் அலெக்ஸாண்டர் இமிச்சை என்ற முதியவர் வசித்து வருகிறார். உளவியல் மருத்துவரான அவர் தற்போது 111 வயதை அடைந்துள்ளதால், இவரை உலகின் மிக வயதான ஆண் எனகின்னஸ்அறிவித்துள்ளது.

இதற்கு முன்னதாக இந்தச் சாதனையை தக்க வைத்துக் கொண்டிருந்த இத்தாலியைச் சேர்ந்த ஆர்டுரோ லிகாட்டா, கடந்த மாதம் தனது 111 வயது 357ஆவது நாளில் உயிரிழந்தார்.

மேலும் பிரான்ஸைச் சேர்ந்த ஜீன் லூயிஸ் கால்மென்ட் என்ற நபரே சுமார் 122 ஆண்டுகளும் 164 நாள்களும் வாழ்ந்த வயதான நபராக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | 2 | 6 | | | 9 | | |
| | | | | 4 | 5 | | 6 | 3 |
| | | | 2 | 9 | | 8 | 5 | |
| | | | 5 | 6 | 1 | | 3 | |
| 2 | | | | 3 | | | | 9 |
| | 6 | | 9 | 2 | 7 | | | |
| | 4 | 6 | | 8 | 9 | | | |
| 1 | 9 | | 4 | 7 | | | | |
| | | 8 | | | 6 | 1 | 9 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 9 | 3 | 1 | 6 | 8 | 2 | 4 |
| 6 | 8 | 4 | 5 | 9 | 2 | 1 | 3 | 7 |
| 3 | 1 | 2 | 8 | 7 | 4 | 5 | 9 | 6 |
| 9 | 3 | 8 | 2 | 6 | 7 | 4 | 1 | 5 |
| 2 | 6 | 1 | 4 | 5 | 8 | 9 | 7 | 3 |
| 7 | 4 | 5 | 1 | 3 | 9 | 2 | 6 | 8 |
| 8 | 5 | 6 | 7 | 2 | 1 | 3 | 4 | 9 |
| 4 | 2 | 7 | 9 | 8 | 3 | 6 | 5 | 1 |
| 1 | 9 | 3 | 6 | 4 | 5 | 7 | 8 | 2 |

# விக்னேஸ்வரனுக்கு தனியான அழைப்பு அனுப்புவதற்கு மறுப்பு தெரிவித்த பா.ஜ.க.

## தகவல் வெளியிட்டது ரைம்ஸ் ஒப் இந்தியா

கொழும்பு.மே 28
புதுடில்லியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இந்தியப் பிரதமரின் பதவியேற்பு நிகழ்வுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வர னுக்கு தனியான அழைப்பை அனுப்பு வதற்கு பா.ஜ.க.வும் இந்திய வெளிவிவகார அமைச்சும் மறுத்துவிட்டது என்று ரைம்ஸ் ஒவ் இந் தியா செய்தி வெளியிட்டுள்ளது.
நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வர னுக்கு தனியான அழைப்பை அனுப்ப வேண்டும் என்று பா.ஜ.க. கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளும், அங் கம் வகிக்காத தமிழ்நாட்டு அரசி யல் கட்சிகளும் வேண்டுகோள் விடுத்திருந்தன.
எனினும், பா.ஜ.க.வும் இந்திய வெளி விவகார அமைச்சும் அந்தக் கோரிக்கையை நிராகரித்துவிட்டன. வெளி நாட்டு அரசுத் தலைவர்களுக்கு மட்டுமே அழைப்புகள் அனுப்பப்பட்டுள் ளன.
மஹிந்த ராஜபக் ஷவுடன், விக்னேஸ்வரன் வருவதற்கு எந்த எதிர்ப்பும் இல்லை. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கு தனியான அழைப்பு அனுப்புவது இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டை மதிக்கும் கடப்பாட்டை இந்தியா மீறுவதாகிவிடும் என்பதாலேயே அவருக்கு அழைப்பு விடுக்க மறுக் கப்பட்டுள்ளது.
இதேவேளை, மோடியின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்க தன்னுடன் வருமாறு இலங்கை ஜனாதிபதி விடுத்த அழைப்பை வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் நிராகரித்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.


கண்ணீர் அஞ்சலி



அமரர்
செபஸ்ரி ஜோச் அன்ரனி
(மேற்பார்வையாளர், மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை தனியார் நிறுவனம்)

பண்புடனும் பாசத்துடனும் மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவைதனில்
இணைந்தது முதல் கடமை, கண்ணியம்,கட்டுப்பாடு என்றதற்கமைய
சிறந்ததொரு கடமை வீரனாகச் செயலாற்றி வந்தீர்!
கடமையில் இருக்கும் பொழுதே காலன் உம்மைத் தேடி வந்தான்!
சிறப்பாக எம்முடன் சேவை புரிந்த சிறந்த செயல் வீரரே!
ஆளுக்கொரு தேதி வைத்து ஆண்டவன் அழைப்பான்
அப்போ யார் அழுதால் அவனுக்கென்ன காரியம் முடியப்பான்

அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களது ஆத்ம சாந்திக்காக சிரம் தாழ்த்திப் பிரார்த்திக்கின்றோம்.
பணிப்பாளரும், பணியாளர்களும்
மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை தனியார் நிறுவனம்.
651/03,நாவலர் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.



மரண அறிவித்தல்



திருமதி சரஸ்வதி நடேசு

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நல்லூர் வடக்கு, அரச வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி நடேசு நேற்று (27.05.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நடேசு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சாந்தரூபி, சாந்தகுமாரி மற்றும் சாந்தலட்சுமி, அகிலேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கோபாலசிங்கம், யுகராசா, நிர்மலா ஆகியோரின் அன்பு மாமியும், மயூதா, பாபுதன், டிபோனிக்கா, றம்மியா, பிரசாத், கவித்தன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2014)புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப.3.00 மணியளவில் பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நல்லூர் வடக்கு,
அரச வீதி, நல்லூர்.
(48524)
(12.6.3)
தகவல்: குடும்பத்தினர்.
077 821 3143


### மது போதையில் வாகனம் செலுத்திய சாரதி கைது

கொழும்பு.மே 28
பொகவந்தலாவ பிரதேசத்தில் மதுபானம் அருந்தி விட்டு ஓட்டோ செலுத்திய சாரதி ஒருவரை பொகவந்தலாவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.
இந்த நபர் பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்தச் சாரதி மது அருந்தியதுடன், அவருக்கான சாரதி அனுமதி பத்திரத்தை யும் வைத்திருக்கவில்லை என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.
இந்த நபர் ஹற்றன் நீதிவான் நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் கூறி னர். (ச)


3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தங்கராசா
புவனேஸ்வரி

தோற்றம்
28.10.1934

மறைவு
28.05.2011

அம்மா....!
புரண்டு படுத்தால் நாம் இறந்து விடுவோமோ என்று
அருகில் இருந்து எமக்காக தூக்கத்தைத் தொலைத்து விழித்திருந்த
சூரியன் - அம்மா!
ஆயிரம் சொந்தங்கள் அணைத்திட இருந்தாலும்அன்னையே!
உங்களைப்போல் அன்பு செய்ய யாரும் இல்லை இவ் உலகில்
மறுபிறவி ஒன்று இருந்தால் நான் செருப்பாகப் பிறக்க வேண்டும்
என் அம்மா காலில் மிதிப்பட அல்ல...
என்னைச் சுமந்தவளை ஒரு முறையாவது (அம்மாவை) சுமக்க வேண்டுமென்று...

97, பருத்தித்துறை வீதி,
வீராமாகாளியம்மன் கோயில்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
த.நேசன் (மகன் -கனடா)
(48519)(15.6.3)



31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



பிறப்பு
10 . 08 . 1948

இறப்பு
30 . 04 . 2014

அமரர் கனகசபை நாகேந்திரன்
[ஓய்வுபெற்ற சிறைச்சாலை ஓவசியர்]

30.04.2014 புதன்கிழமை அதிகாலை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கனகசபை நாகேந்திரன் அவர்களின் (ஓய்வுபெற்ற சிறைச்சாலை ஓவசியர்) அந்தியேட்டிக்கிரியைகள் 30.05.2014 வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் புற்றளை சித்திவிநாயகர் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று அதனைத்தொடர்ந்து வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அதில் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் கட்டை ஒழுங்கை,
புலோலி வடகிழக்கு, பருத்தித்துறை. (48500)(4.6.3)
மனைவி,
குடும்பத்தினர்.


### கடலில் மூழ்கி ஜேர்மன் நபர் உயிரிழப்பு

கொழும்பு.மே 28
ஹிக்கடுவ கடலில் நீராடுவதற்குச் சென்ற ஜேர்மன் நபர் உயிரிழந்துள்ளார்.
கடலில் நீராடுவதற்குச் சென்ற ஜேர்மன் நபர் நீண்டநேரமாக கரைக்கு திரும்பாததையடுத்து தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்த போது, மிதந்துகொண்டிருந்த அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டதுஎன்று பொலிஸார் தெரிவித்தனர்.
இலங்கைப் பெண்ணொருவரை திருமணம்செய்துகொண்ட இந்த நபர் ஹிக்கடுவ, நாரிகம பகுதியில் வசித்து வந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
29.04.1927

ஆண்டவன் அடியில்
08.06.2013

திதி:
28.05.2014

திருமதி
சின்னம்மா வைத்திலிங்கம்
(5ஆம் வட்டாரம், மண்கும்பான்)

எம்மைச் சீரும் சிறப்புமாக வாழவைத்த
எம் அருமைத் தெய்வமே! பண்பின் சிகரமே!
அன்பின் உறைவிடமே! எம்மைப் பிரிந்து
ஆண்டு ஒன்றல்ல எத்தனை ஆண்டுகள்
ஆனாலும் உங்கள் நினைவுகள்
அன்று போல் இன்றும் என்றும் எம்
இதயத்தில் நிலைத்திருக்கும்.

16,2/3,
முதலாவது சப்பல் லேன்,
வெள்ளவத்தை. (C/14391) (5.6.3)
உங்கள் பிரிவால் துயருறும்
கணவர்,மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்.

# மோடியின் பதவியேற்பில் மஹிந்த; இலங்கைக்கு நல்லதொரு சந்தர்ப்பம்

## அமைச்சர் திஸ்ஸவிதாரண தெரிவிப்பு

கொழும்பு, மே 28

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கும் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு விடுக்கப்பட்ட அழைப்பு வரவேற்புக்குரியது. இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு சிரேஷ்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவை வல்லரசாக்கும் தனது இலட்சியத்தை வெற்றி கொள்வதற்காக சார்க் நாடுகளை இணைக்கும் அரசியல் காய்நகர்த்தலை தனது பதவியேற்பு வைபவத்தோடு மோடி ஆரம்பித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுடன் தனிப்பட்ட ரீதியிலும் நட்புறவை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். எதிர்காலத்துக்கு இது எமக்கு நல்ல பெறுபேறுகளைக் கொடுக்கும்.

தமிழ் நாட்டின் எதிர்ப்புக்கு மத்தியிலும் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமையானது இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான நட்புறவை வலுப்படுத்துவதற்கான நல்லதொரு சமிக்ஞையாகும்.

வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனை தன்னோடு இந்தியாவுக்கு வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்தமை நல்லிணக்கத்துக்கான முன்னுதாரணமாகும்.

பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இது உந்து சக்தியாக அமைந்திருக்கும். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அழுத்தம் காரணமாக வடக்கு மாகாணசபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அழைப்பை நிராகரித்திருந்தார்.



இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் இலங்கையின் பிரச்சினைகள் உள்நாட்டுக்குள்ளேயே தீர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற கொள்கையே காணப்பட்டது.

ஆனால், அன்று மத்திய அரசுக்கு தமிழ்நாட்டின் ஜெயலலிதாவின் ஆதரவு ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளத் தேவைப்பட்டது.

ஆனால், இன்று பாரதீய ஜனதாக் கட்சி பெரும்பான்மையை பெற்றதோடு தனிக் கட்சி ஆட்சியமைக்கும் பலத்தையும் கொண்டுள்ளது.

எனவே, தற்போது இந்திய மத்திய அரசுக்கு ஜெயலலிதாவின் ஆதரவு அவசியமில்லை.

இது இலங்கை அரசுக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பம். இந்திய அரசுடன், இராஜதந்திர ரீதியிலும் தனிப்பட்ட ரீதியிலும் நட்புறவுகளை வலுப்படுத்திக்கொள்ள வேண்டும்அதன் மூலம் எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கும்.

கடந்த காலங்களில் சார்க் அமைப்பின் நடவடிக்கைகள் அனைத்தும் முடங்கிப் போய் காணப்பட்டன. சார்க் வலய நாடுகளுக்கிடையில் நட்புறவுகள் காணப்படவில்லை; நெருக்கடிகளே தலைதூக்கியிருக் கின்றன.

இவ்வாறானதோர் சூழ்நிலையில் இந்தியாவை வல்லரசாக்குவதே எனது இலக்கு என்று தேர்தலில் தெரிவித்த மோடி அதனை நோக்கிக் களமிறங்கியுள்ளார்.

தனது பயணத்தை சார்க் அமைப்பை மீண்டும் பலப்படுத்தும் அரசியல் காய்நகர்த்தலுடன் முன்னெடுத்துள்ளார். அதற்காகவே தனது பதவியேற்பு வைபவத்துக்கு சார்க் நாட்டுத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இதுவொரு நல்ல முயற்சியாகும் -என்றார்.

(ச)

# சர்வதேசப் பாடசாலை மாணவர்கள் தேசிய பாடசாலைகளில் கற்கமுடியாது

சர்வதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தேசிய பாட சாலைகளிலிருந்து உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற முடியாது என்று கல்வி அமைச்சர் பந்துலகுணவர்தனதெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-சர்வதேசப் பாடசாலைகளின் மாணவர்கள் தேசிய பாடசாலைகளில் உயர் கல்வி கற்க அனுமதிக்கப்படுவதனால், ஏனைய பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே சர்வதேச பாடசாலைகளில் சாதாரண தரப் பரீட்சையில் சித்தி யெய்தும் மாணவர்கள், இனி வரும் காலங்களில் தேசிய பாடசாலைகளில் உயர்தரத்தில் கல்வி கற்க விண்ணப்பிக்கமுடியாது. இது தொடர்பில் தேசிய பாடசாலைகளின் அதிபர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தகைய மாணவர்கள் அதிக அளவில் தேசிய பாட சாலைகளில் சேர்வதனால், சாதாரண பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனைக் கருத்திற் கொண்டே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது-என்றார். (ச)


## மரண அறிவித்தல்



### துரைராசா யோகேஸ்வரன்

வவுனியாவைப் பிறப்பிடமாகவும்,ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட துரைராசா யோகேஸ்வரன் 26.05.2014 திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராசா-பரிபூரணம் தம்பதியரின் அன்பு மகனும், நந்தினியின் அன்புக் கணவரும், ராகவீணாவின் பாசமிகு தந்தையும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற ஸ்ரீதேவி மற்றும் யோகேஸ்வரிதேவி, E.சிவராஜா (ஓய்வுபெற்ற பகுதித்தலைவர், தரம்6-9 வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), பரமேஸ்வரம்,சுசீலாதேவி(லண்டன்), பாபு (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பொன்னம்பலநாதன், சிவராஜா (கனடா), ரவிச்சந்திரா (லண்டன்), T.பரமேஸ்வரம் (ஆசிரியை வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), தமிழரசி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும்

இல. 20/1, 4ஆம் ஒழுங்கை,
தோணிக்கல், வவுனியா.
024 222 3841/077 616 7348 (43325)(5.8.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம் நமசிவாயம்

தேத்தாவடி, இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம் நமசிவாயம் நேற்று (27.05.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நமசிவாயத்தின் (கட்டடக் கலைஞர்) அன்பு மனைவியும், சரஸ்வதியின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10.00 மணியளவில் சாமித்திடல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேத்தாவடி, இடைக்காடு,
அச்சுவேலி. (48511) (12.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## 43 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 18.04.2014
சிவபத மடைந்த எங்கள்
குடும்பவிளக்கு
அமரர்
கணேசலிங்கம் தர்சன்



தோற்றம் 06.11.1992
மறைவு 18.04.2014

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று(28.05.2014) புதன்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (30.05.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடுவில் கிழக்கு,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில். (48513)(3.4.6)

குடும்பத்தினர்.

## தேவை

யாழ்.பிரபல்யமான லொட்ஜ் 24 மணிநேரம் தங்கியிருந்து வேலை பார்க்க 60 வயதுக்கு மேற்பட்ட சிங்களம் தெரிந்த மனேஜர் தேவை. வாடகைக்கும் கொடுக்கப்படும்.

தொ.பே: 075 048 4074, 021 222 7861 (48490) (6.4.3)

## விற்பனைக்கு

கட்டா ஊர்க் கருவாடு

தலை, முள் அகற்றப்பட்டு சுகாதாரமுறைப்படி உப்புக்குறைத்து காயவிடப்பட்ட வெளிநாட்டுக்கான கட்டா ஊர்க்கருவாடு விற்பனைக்கு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (48515) (6.4.3)

தொ.பே: 077 256 7072, 077 452 7454

## விற்பனையாளர்கள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள், பழகவிரும்புபவர்கள் (ஆண்) தேவை.

தொடர்பு:
த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்,
44,42 பெரியகடைவீதி,
யாழ்ப்பாணம். (சி13914) (12.3.6)

## வீடு வாடகைக்குண்டு

ஸ்ரேசன் றோட், கொக்குவிலில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்குண்டு.

நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: ராகுலன் 077 859 0969 (48516) (6.4.3)

## யாழ்.நகரில் வீடு வாடகைக்குத் தேவை

பிரபல பல்தேசியக் கம்பனிக்கு யாழ்.நகரில் ஸ்ரான்லி வீதிக்கு அண்மையாகவும் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட படுக்கையறையுடன் கூடியதும், இணைந்த குளியலறையும் வாகனத் தரிப்பிடமும் மற்றும் அடிப்படை வசதியுடன் கூடியதுமான வீடு உடனடியாக வாடகைக்கு வேண்டும்.

தொடர்புகளுக்கு: Manager,
P.O.Box 1068, Colombo - 04,
078 500 0580
(48509) (12.3.6)

## அற்றோணி தத்துவப்பத்திரத்தை மீளப்பெறல்

இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத் தருவதாவது 6 ஜூலை 1993 திகதியிடப்பட்டு கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜூட் உதயகுமார் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 146 இலக்க விசேட அற்றோணித்தத்துவமானது, பேக்கறி ஒழுங்கை உடுப்பிட்டி தவமலர் சுரேந்திரநாதன் என்பவரின் பெயரில் இல.55, புனித பெனடிக் மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பு -15 ஐச்சேர்ந்த சுப்பிரமணியம் சுரேந்திரநாதன் (தே.அ.அ.இல. 420942931v) ஆகிய என்னால் நிறைவேற்றப்பட அற்றோணிதத்துவப்பத்திரம் இன்று முதல் மீளப்பெறப்படுவதோடு, இரத்தும் செய்யப்படுகின்றது. இன்று முதல் அற்றோணி தத்துவகாரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணி தத்துவப்பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

28.05.2014 சுப்பிரமணியம் சுரேந்திரநாதன்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 07.01.1976
உதிர்வு 08.06.2013

### அமரர் சீவரத்தினம் தவசேகரன்

(Electrician - தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்)

திதி: அமாவாசை

உதித்த ஒளி மழுங்கி ஓராண்டு ஆனாலும்
உதிரத்தில் உங்கள் வலி உதட்டிலில் உங்கள் நாமம்
உளத்திலே உங்கள் எண்ணம் உள்ளாட்டும் உணர்வலைகள்
உளமது ஏற்றிடாத உங்கள் பிரிவால் அப்பா!
பாசச் செயல்களால் எம்மை உருக வைத்த எம் அப்பாவே!
உங்கள் பிஞ்சுக் குழந்தைகள் அப்பா!
அப்பா! என்று தவிக்கின்றனரே
நித்தமும் கனவில் வரும் உங்களை அப்பா!
இனி எப்போது காண்போம்!

புன்னாலைக்கட்டுவன்

குடும்பத்தினர் (48604)(45.3.6)

# அபிவிருத்தியை ஆராய்வதை விடுத்து மோதலுக்கு முக்கியத்துவம் கொடுத்த ஒருங்கிணைப்பு கூட்டம்

(நேற்றைய தொடர்ச்சி)

சர்ச்சைகளுக்கும்.குழப்பத்துக்கும் நடுவே அபிவிருத்தி மீளாய்வுகளும் நடந்தேறிக் கொண்டு இருந்தன.தென்னை வளச் சபை தொடர்பிலான மீளாய்வு இடம் பெற்றது. இதில் திவிநெகும என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரியிடம் இந்தப் பிரதேசத்து மொழியிலேயே எல்லாம் எழுதப்பட வேண்டும்.அப்பதான் எனக்கும் விளங்கும் இங்க இருக்கிற வைக்கும் விளங்கும் என்றார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடக்கு மாகாணத்துக்குரிய முல்லைத்தீவு மாவட்டம் திருகோணமலையுடனும், மன்னார் மாவட்டம் அநுராதபுரத்துடனும் இணைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கேள்வியெழுப்பினார். தென்னை வளச் சபையின் அதிகாரி சிங்களவர். அவரிடம் சிங்களத்தில் கேள்வி எழுப்புமாறு அமைச்சர் டக்ளஸ், சிறீதரனைப் பார்த்துச் சொன்னார் நக்கலாக.

பின்னர் மொழிபெயர்ப்பாளர் மூலம் கேள்வி எழுப்பப்பட்டது. அவர் பதிலளிப்பதற்கு முயன்றபோது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழமை போன்று அறிக்கை சமர்ப்பியுங்கள் என்று சொல்ல,'நீங்கள் ஏன் அமைச்சர் அந்தரப்படுறியள்' என்று சற்றுக் கடுப்பாகவே கேட்டார் சிறீதரன்.

### திக்கம் வடிசாலை சர்ச்சை

இதன் பின்னர் மீளவும் சர்ச்சையைத் தோற்றுவித்த விடயமாகியது திக்கம் வடிசாலை விவகாரம். இதனை யாரிடம் கையளிப்பது என்று அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்து அதன் பின்னரே முடிவு எட்டப்படும் என்றார் அமைச்சர். அமைச்சர் டக்ளஸின் மழுப்பல் பதிலுக்கு, சுரேஷ் பிரேமச்சந்திரன், நீங்கள் தனியாருக்குக் கொடுக்கப் போறியளா? அல்லது கூட்டுற விடம் கொடுக்கப் போறியளா? என்று நேரடியாகக் கேட்க வும், அதை மீள இயக்க 100 மில்லியன் தேவை என்று தெரிவித்த டக்ளஸ், அரசின் தற்போதைய கொள்கைப்படி இதற்கு நிதி வழங்கப்படமாட்டாது என்று தெரிவித்தார்.

இதன்போது சுரேஷ்பிரேமச்சந்திரன் அதனைத் தனியாரிடம் ஒப்படைக்கக்கூடாதென்று தெரிவித்தார். அதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களும் ஆதரித்து நின்றனர். ஆனால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ முடிவு எதுவும் சொல்லாமல் இழுத்தடித்தார்.

இதன்போது திக்கம் வடிசாலையின் ஊழியர்களின் சம்பளத்துக்கு மாதம் மூன்றரை லட்சம் ரூபா நிதி தனது கட்சிப் பணத்தில் கொடுத்து வருவதாகத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ், சிவாஜிலிங்கத்தைப் பார்த்து இதை நீங்கள் பொறுப்பெடுப்பியளா என்று சவால் விட, சவாலுக்குச் சளைக்காத சிவாஜிலிங்கம் நாங்கள் அந்தப் பணத்தை வழங்குகின்றோம்-என்றார். உடனே அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், நாம் மாகாண சபையில் நியதிச் சட்டத்தை இயற்றி திக்கம் வடிசாலையை மாகாண சபைக்குரியதாகப் பெற்றுக் கொள்கின்றோம் என்று சொல்லி அடுத்த விடயத்துக்குக் காய் நகர்த்தினர்.

வனவளச் சபை தொடர்பில் சொல்வதற்கு எதுவுமில்லை என அந்தத் திணைக்களத்தின் சார்பில் கலந்து கொண்ட அதிகாரி கூட்டத்தில் தெரிவித்தார். பின்னர் ஏன் அதற்குத் தனியான நிகழ்ச்சி நிரல் ஒதுக்கவேண்டும் என்ற கேள்வியும் எழாமலும் இல்லை.

### நாகர்கோவிலில் கள்ள மண் அகழ்வு

இதன்போது பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர், நாகர்கோவில், அம்பன் பகுதியில் கள்ள மண் அகழ்வினால் அங்குள்ள வன வளம் அழிக்கப்படுகின்றது என்றும், இதனால் அங்குள்ள ஜீவராசிகள் கிராமப் பகுதிகளுக்குள் நுழைவதாகவும் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மணல் அகழ்வு அந்தப் பகுதிகளில் இரண்டு விதமாக நடக்கின்றது. ஒன்று சட்டபூர்வமற்ற முறையிலும், மற்றையது சட்டபூர்வமாகவும் நடக்கின்றது. சட்டபூர்வமாக நடக்கின்ற விடயத்திலும் வன வளப் பாதிப்பு உள்ளதா என்று கேள்வியைத் தொடுத்தார். அதற்கு பருத்தித்துறைப் பிரதேச சபைத் தவிசாளர், பாதிப்பு இருக்கின்றது என்று குறிப்பிட்டார். இதன்போது அமைச்சர் டக்ளஸும் அந்தப் பகுதியில் பாதிப்பு இருந்தால் நானும் அனுமதிக்கமாட்டேன் என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் வடக்கு மாகாண விவசாய அமைச்சர், புவிச் சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகம் மணல் அகழ்வுக்கு அடையாளப்படுத்தும் இடத்தில் மத்திய சுற்றுச் சூழல் அதிகாரசபை அதன் சூழல் பாதுகாப்புத் தொடர்பில் ஆராய்ந்த பின்னரே அனுமதி வழங்கப்படும். மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபையின் அனுமதி வழங்கப்படாமலேயே அம்பன் பகுதியில் மணல் அகழ்வு இடம்பெற்று வந்தது என்ற உண்மையைப் போட்டுடைத்தார். இதற் குரிய ஆதாரங்களையும் சபையில் சமர்ப்பித்தார்.

உடனேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபை அதிகாரியை எழுப்பி, உங்களுடைய அனுமதியில்லாமலா மணல் அகழ்வு நடக் கின்றது என்ற கேள்வியைத் தொடுத்தார். அதற்கு அவர் 2004 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமது திணைக்களம் எந்த அனுமதியும் வழங்க வில்லை என்றதும், அமைச் சர் டக்ளஸ், இப்போது அம்பன் பகுதியில் மண் அகழப்படுகின்றதா என்ற கேள்வியைத் தொடுத்துக் கொண்டே, புவிச் சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியக அதிகாரி கூட்டத்துக்கு வந்திருக்கிறாரா என்ற அடுத்த கேள்வியையும் தொடுத்தார்.

இதன்போது அவர் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது என்றதும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாகாண சபை மந்திரி நீங்கள் தவறாகச் சொல்லவாறீர்கள் என்று வீறாப்பாகப் பேச, அமைச்சர் ஐங்கரநேசன், நானொன்றும் தவறாகச் சொல்லவில்லை என்றார் பதிலுக்கு.

அமைச்சர் டக்ளஸோ சிலர் முறையற்ற விதத்தில் களவாக மண் அகழ்கின்றனர். முறையாக மண் அகழ்பவர்கள் அவ்வாறு தவறாகச் செயற்படவில்லை என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் கடைசியாக அம்பன் பகுதியில் எப்போது மணல் அகழ்வு செய்யப்பட்டது என்று அமைச்சர் டக்ளஸ் கேள்வியெழுப்பினார்.

இந்த ஆண்டு மார்ச் மாதம் வரை அந்தப் பகுதியில் புவிச் சரிதவியல் திணைக்கள அனுமதியுடன் மணல் அகழப்பட்டதாகப் பருத்தித்துறைப் பிரதேச சபைத் தவிசாளர் பதிலளித்தார்.குறுக்கீடு செய்த அமைச்சர் டக்ளஸ், அனுமதி கொடுக்கப்பட்டிருக்குத்தானே என்று கேட்க, புவிச் சரிதவியல் திணைக்களம் அனுமதி கொடுத்திருக்கின்றது.ஆனால் மத்திய சுற்றாடல் அதிகார சபை அனுமதி கொடுக்க வில்லை என்று பதிலளித்தார்.

மீளவும் அமைச்சர் டக்ளஸ், சுற்றாடல் அதிகார சபையின் அதிகாரியிடம் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளதா என்று காட்டமாகவே கேட்டார். அவ ரும் முன்னர் சொன்ன பதி லையே திரும்பவும் சொன் னார்.இதன் பின்னர் கருத்துச் சொன்ன அமைச்சர் டக்ளஸ், புவிச் சரிதவியல் திணைக் களம் அனுமதி கொடுக்கிற தாக இருந்தால் எல்லாரிடமும் அனுமதி பெற்றுத்தான் கொடுக்கும் என்று புதுக்கதை விட்டார்.

இதன்போது மகேஸ்வரி நிதிய இணைப்பாளரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திடீரென எழுப்பி நீங்கள் என்ன மாதிரி அனுமதி பெற்றீர்கள் என்று கேட்டார். மணல் அகழ்வு பற்றிக் கதைத்துக் கொண்டிருக்கும்போது அமைச்சர் திடீரென மகேஸ்வரி நிதியத்தை இதற்குள் சம்பந்தப்படுத்தினார்.அதுவரை மகேஸ்வரி நிதியம் என்ற வார்த்தை கூட மணல் அகழ்வு விடயத்தில் சொல்லப்படாத நிலையிலும் திடீரென அதன் இணைப்பாளரைப் பதில் சொல்ல அழைத்தார்.

அதற்குப் பதிலளித்த இணைப்பாளர், தாங்கள் இங்குள்ள அதிகார சபையிடம் பணத்தைச் செலுத்தியதாகவும், இவர்கள் கொழும்பு அலுவலகத்துக்கு அறிக்கை அனுப்பியதாகவும் கொழும்பிலிருந்தே அனுமதியைப் பெற் றதாகவும் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அனுமதி பெற்றே எல்லாம் செய்யப்பட்டு வருகின்றது என்று திரும்பத் திரும்பச் சொன்னார். இதன்போது குறுக்கிட்ட சுரேஷ் பிரேமச்சந்திரன், நீங்கள் அனுமதி பெறாமல்தான் செய்திருக்கிறியள் என்றார் காட்டமாக. இதன் பின்னர் தொடங்கியது கடுமையான விவாதம். அமைச்சர் டக்ளஸோ அனுமதி பெற்றுத்தான் செய்யப்படுகின்றது என்பதை திரும்பத் திரும்பச் சொல்லி நிரூபிக்க முயன்ற போதும், அதனை மறுதலித்த சுரேஷ், ஒரு கட்டத்தில் நீங்கள் கொள்ளையடிக் கிறி யள் என்ற வார்த்தையைச் சொல்லி விட்டார்.

உடனே வீறு கொண்ட எழுந்த ஈ.பி.டி.பியினர் சுரே ஷுடன் சரமாரியாக வார்த் தைப் போர் தொடுத்தனர்.யார் கொள்ளையடிச்சது. ஐ.பி. கே.எவ் காலத்தில் நீங்கள் தான் கொள்ளையடிச்சனிங் கள் என்று கடுமையானதும் உக்கிரமானதுமான வார்த் தைப் போரைத் தொடக்கி விட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரோ, கொள் ளையடிச்சது என்று சொன்ன வார்த்தையை மீளப்பெற்றால் தான் நீங்கள் பேசலாம் என்று சுரேஷைப் பேசவிடாது இடைஞ் சல்படுத்திக் கொண்டேயிருந்தார். ஆனால் சுரேஷ் அந்த வார்த்தைப் பிரயோகத்தை மீளப்பெறுவதற்குத் தயாரில்லாமல் இருந்தார்.வார்த்தைப் போர் உச்சக் கட்டத்துக்குச் சென்றது.மண்டையன் குழுத் தலைவர் என்பது வரை அது சென்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ, அனுமதி பெற்றுத் தான் செய்யப்படுகின்றது என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார். சர்ச்சைக்கு நடுவிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சட்ட ரீதியாகத் தான் செயற்படுகின்றது என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

இதன் கடுமையான வாதங்களின் நடுவே மாகாண சபை உறுப்பினர் கஜதீபனுக்கும், ஈ.பி.டி.பியின் அமைப்பாளர்களுக்கும் இடையில் கடுமையான சொற்போர் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. சைகைகளால் கடுமையான தாக்குதல்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. இதன் பின்னர் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் பேசுவதற்கு எழுந்தவுடனே சந்திரகுமாரின் தாக்குதல் கஜதீப்ன் பக்கம் திரும்பியது.

### தறுதலைகள்

நீர் தறுதலை வாத்தி என்று தொடங்கினார் சந்திரகுமார். அதைப் பேப்பரில் போடுறாங்கள் என்று சொல்ல நீரும், இணைத் தலைவரும் (அமைச்சர் டக்ளஸ்) சேர்ந்து நடத்திற பேப்பரில்தான் அது வந்தது என்று கஜதீபனும் பதிலடி கொடுத்தார். வார்த்தைகளின் உச்சத்தில் நான் தறுதலை வாத்தி என்டா நீர் தறுதலை எம்.பி. என்று கஜதீபன் முழங்க, நான் தறுதலை எம்.பிதான் என்று சந்திரகுமார் உண்மையை ஒப்புக்கொண்டதைப் போல் ஒத்துக் கொண்டார். அத்துடன் அந்த வாதம் முடிவை எட்டியது.

மறுபுறத்தில் இடம்பெற்ற மணல் அகழ்வு விவாதத்தில் அவைத் தலைவர் சி.வி.கே. சிவ ஞானம் கதைக்க முற்பட சபை கொஞ்சம் அமைதிக்குத் திரும்பியது. இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மகேஸ்வரி நிதியத்துக்கும் எனக்கும் சம்பந்தம் இருக்கின்றது என உங்களுக்குத் தெரியும் என் றார். அதற்கு சுரேஷ் எனக்குத் தெரியாது என்று சொல்ல, இது பொய் என்றார் அமைச்சர் டக்ளஸ். உடனே சுரேஷ் பதிலுக்கு, அமைச் சர் ஏதோ சந்திரமண்டலத்தில இருந்து வந்த மாதிரி ஒவ்வொண்டுக்கும் கேட்டுக் கொண்டிருப்பார் என்று சொல்லி முடிப்பதற்குள் மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராஜா, மகேஸ்வரி நிதியத்துக்கு எதிராக வழக்குப் போட்டு அந்த வழக்கின் தீர்ப்பு என்று சொன்னதற்கு அமைச்சர் டக்ளஸ் யார் வழக்குப் போட்டது என்று கேட்க, நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷோ உதைத் தான் நான் சொன்னனான். உங்களுக்கு ஒண்டும் தெரியாத மாதிரி சந்திர மண்ட லத்திலிருந்து வந்தமாதிரி கேட்பியள் என்று கடிந்தார். இறுதியில் மகேஸ்வரி நிதியம் தொடர்பிலான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்தும் புயல் அடித்து ஓய்ந்ததைப் போல் நீண்ட சர்ச்சை முடிவுக்கு வந்து சேர்ந்தது.

### இரணைமடு குடிதண்ணீர்

இதன் பின்னர் சர்சைக்குரிய விவாதத்தை உண்டு பண்ணும் என்று எதிர்பார்க்கப்பட்ட இரணைமடுக் குடிதண்ணீர் திட்டம் தொடர்பிலான அபிவிருத்தி மீளாய்வு செய்யப்பட்டது.திட்டப் பணிப்பாளர் பாரதிதாசன் அதற்குரிய விளக்கங்களைக் கொடுத்தார். இதன் பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வேண்டுமென்று வில்லங்கத்தனமாகச் சில கேள்விகளைத் திட்டப் பணிப்பாளரிடம் தொடுத்தார். திட்டம் எப்ப தொடங்கினது? ஏன் இன்னமும் முடியவில்லை ? என்ன தடை? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை வம்பிழுக்க கேள்விகளைத் தொடுத்தபோதும், கூட்டமைப்பினரோ தீடீர் மௌனிகளாகவே இருந்தனர்.

சர்ச்சை தோன்றாத வகை யில் கூட்டமைப்பினர் அமைதியாக இருந்துவிட்டு சகல கேள்வி பதில்களும் முடிந்த பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், அமைச்சர் ஐங்கரநேசன் என்று ஆறுதலாக தமது தரப்பு வாதங்களை முன்வைத்தனர்.இதனால் இரணைமடு விடயம் சர்ச்சையைத் தோற்றுவிக்காமல் அமந்து போனது. இறுதியில் மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் இரணைமடுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். குளத்தை புனரமைப்போம். யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர் விநியோகக் குழாய்களையும் புதைப்போம். எப்ப இரணைமடுவில மேலதிக தண்ணீர் வருகுதோ அப்ப யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வருவோம் என்று தெரிவிக்க அவையில் கொஞ்சம் கரகோஷம் எழுந்தது. அமர்வு 2.15 மணிக்கு முடிவுக்கும் வந்தது.

# கூட்டமைப்பின் திருத்தங்களுடன் இரணைமடு குடிதண்ணீர் திட்டம்

**நடைமுறைப்படுத்த மத்திய அமைச்சும் சம்மதித்துள்ளதாக மாவை எம்.பி. தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், மே. 28

இரணைமடுக் குடிதண்ணீர்த் திட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தங்களுடன் நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய அமைச்சும் சம்மதித்துள் ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

இரணைமடுக் குடி தண்ணீர் திட்டம் தொடர்பில் எழுப்பப்பட்ட சர்ச்சைகள் அனைத்தும் அதனுடன் முடிவுக்கு வந்தன.

யாழ்.மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றபோது, முதலாவது விடயமாக இரணைமடுக் குடிதண் ணீர்த் திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போது குறித்த திட்டத்தை கிளிநொச்சி விவசாயிகளின் நலனை முக்கியமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா, மத்திய நீர் வழங்கல் மற்றும் வடிகால மைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை நாம் சந்தித்துக் கலந்துரையாடினோம். எமது கலந்துரையாடலில் இரணைமடுக் குடிதண்ணீர் திட்டம் தொடர்பிலான எமது நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கிக் கூறி னோம்.

தற்போதுள்ள இரணைமடுக் குடிதண்ணீர்த் திட்டம் தொடர்பில் மாற்றங்கள் மேற்கொண்டு அதற்கமைய நடைமுறைப்படுத்த மத்திய அமைச்சர் இணங்கினார். அத னுடன் நாமும் உடன்பட்டோம்.

அதனைஅடுத்து கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இரணைமடுக் குடிதண்ணீர்த் திட்டம் மூன்று கட்டங்களாக தனித் தனியே நடை பெறாது. ஒரு திட்டத்தில் மூன்று பிரிவாக இடம் பெறும். ஒரு ரயிலில் எவ் வாறு3 பெட்டிகள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு இருக்கின்றதோ அதே போன்றே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

நாம் ஏற்கனவே மேற் கொண்ட தீர்மானத்துக்கு அமைய இரணைமடுக் குடி தண்ணீர்த் திட்டம் தற்போதுள்ளவாறு நடைமுறைப்படுத் தப்படாமல் திருத்தியமைக் கப்பட்டது.

இதன் பிரகாரம் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கலந்துரையாடியபோது அவர்கள் மத்திய அரசு சம்மதித்தால் அதனடிப்படையில் செயற்படுத்தத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டனர்.

மத்திய அரசும் சம்மதித்துள்ளமையால் திருத்தியமைக் கப்பட்ட இரணைமடு குடிதண்ணீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

(வ-5)

## ஐந்து நாடுகளில் ஐந்து வீடுகள்

*பெருமையில் மேர்வின் சில்வா*

கொழும்பு, மே 28

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து மற்றும் சுவிஸர்லாந்து ஆகிய நாடுகளில் தனக்கு 5 வீடுகள் இருப்பதாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேர்வின் அண்மையில் அமெரிக்காவுக்கு சென்றிருந்த போது 10 லட்சம் டொலர் பெறுமதியான வீடு ஒன்றை கொள்வனவு செய்துள்ளதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகி இருந்தன. அது குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நான்கு நாடுகளில் வீடுகளை கொள்வனவு செய்யும் அளவுக்கு தன்னிடம் பணம் இல்லை எனவும் அந்த நாடுகளில் உள்ள நண்பர்கள் மற்றும் உறவினர்கள் தமக்கு இந்த வீடுகளை தனது பாதுகாப்புக்காக வழங்கியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு என்ற பிரச்சினை ஒன்றுமில்லை என்ற போதிலும் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால், இந்த வீடுகளில் ஒன்றில் சென்று இருக்க முடியும். எனினும் எனக்கு எவரிமும் இருந்து எந்த அச்சுறுத்தலும் இல்லை. இளவரசர் சித்தார்த்தனுக்கு (புத்தபகவான்) ரம்யா, சுரம்யா, சுபா ஆகிய பெயர்களில் மூன்று மாளிகைகள் இருந்தன. எனக்கு 5 நாடுகளில் 5 மாளிகைகள் இருக்கின்றன.

நல்ல மனம், மனிதம் தெரிந்த மனிதர்களுக்கு உலகில் பரிசுகள் கிடைக்கும். உலகம் முழுவதும் எனக்கு நண்பர்களும் உறவினர்கள் என்ற வலைமைப்பு உள்ளது. எனக்கு இலங்கையில் எந்த பிரச்சினையுமில்லை. நான் இறப்பது இலங்கையில்தான். இறந்த பின்னர் மீண்டும் ருகுணுவில் பிறந்து களனிக்கு வருவேன் - என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# விமலின் நடிப்பை நம்ப வேண்டாம்

## ஹரின் பெர்ணான்டோ கூறுகின்றார்

கொழும்பு, மே 28

அமைச்சர் விமல் வீரவன்ஸ அரசை விமர்சித்து கொண்டு அரசுக்குள் இருக்காது வெளியேறினால், அவரை வரவேற்கத் தயாராக இருக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ. புத்தலவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"அரசு வீழ்ந்து வருகின்றது என்று விமல் கூறுகிறார். துறைமுகம் வெறும் புஷ்வாணம் என்கிறார். அரசு வங்குரோத்து அடைந்துள்ளதாக தெரிவிக்கின்றார். அப்படி கூறி வந்தவர் ஜனாதிபதியுடன் தற்போது தேநீர் அருந்தச் சென்றுள்ளார்.

பொய்யான உண்ணாவிரதம், பொய்யான நடிப்பு என்பவற்றில் பிரயோசனமில்லை. தாய் நாட்டை காப்பாற்றுங்கள் என்று கூறும் பொய்களுக்கு மயங்கி விட வேண்டாம். முதலில் அமைச்சரவையில் இருந்து வெளியில் வாருங்கள். நாங்கள் மதிப்ப ளிக்கின்றோம். நாங்கள் அதனை செய்து காட்டுகிறோம்.

ஜனாதிபதிக்கு சர்வதேச ஆதரவில்லை. அம்பாந்தோட்டை மாவட்டத்தை அபிவிருத்தி செய்யும் போது அவற்றில் அந்த மாவட்ட மக்களுக்கு தொழில் வாய்ப்பு கிடைக்கவில்லை. பிரேமதாச கம் உதாவ அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொண்ட போது பலருக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது.

இன்று இரண்டு மாற்றுக்களே உள்ளன. ஒன்று கசினோ மற்றையது ஹெரோயின் போதைத் தூள். தேசத்தின் தந்தை, பாடநூல் தந்தை, மகாவலி தந்தை, 10 லட்சம் வீடமைப்பின் தந்தை ஆகியோரை ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கியது. ஆனால் இன்று ஹெரோயின் போதைத் தூள் தந்தை, கசினோ தந்தை போன்றோரே உருவாகியுள்ளனர்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்கள் அனைத்தும் இரத்து

### ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்



கொழும்பு, மே 28

எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினால் அமைக்கப்படும், புதிய அரசு, சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்ட சகல ஒப்பந்தங்களையும் ரத்துச் செய்யும் எனக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்கால ஐக்கிய தேசியக் கட்சி அரசு கல்விக்கு முன்னுரிமை வழங்கும் என்று குறிப்பிட்டுள்ள அவர், சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காது நாட்டின் கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரி வித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதார சாதாரண தரப் பரீட்சை முதல் புதிய கல்விக் கொள்கைகள் பின்பற்றப்பட உள்ளது என்றும், சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெய்தாத மாணவ மாணவியருக்கு புதிய கற்கை நெறிகள் அறிமுகம் செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். -(ற)

# கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டு; சந்தேகநபருக்கு பிணை அனுமதி

யாழ்ப்பாணம், மே 29

மாதகலில் சுமார் 39 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நபர் யாழ். மேல்நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார். யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேம சங்கர் முன்னிலையில் பிணை விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு பிணை அனுமதி வழங்கப்பட்டது.

மாதகல் மேற்கில் கடந்த ஜூலை 12 ஆம் திகதி வீட்டில் வைத்து சுமார் 39 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் அந்தவீட்டில் வசிக்கும் தர்மகுலசிங்கம் பேபி, நீக்கிலன் செல்லத்துரை ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம்மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து மூன்றாம்நாள் தர்மபாலன் தர்மராஜன் என்பவர் கைது செய்யப்பட்டார். அவர்கள் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

குறித்த பகுதியில் கஞ்சா போதைப்பொருள் விற்பனை செய்யப்படுகின்றது என்று இளவாலைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் புலனாய்வுப்பொலிஸார் இருவர் அங்கு கண்காணிப்புக்கு அமர்த்தப்பட்டனர். செல்லத்துரை என்பவர் தனது தோளில் 3 உரப்பைகளை சுமந்து சென்று பேபியின் வீட்டுக்குச் சென்று பேபியிடம் கொடுத்துள்ளார். அந்த நேரம் அங்கு பொலிஸார் சென்று அந்த உரப்பைகளைச் சோதித்த போதே ஒவ்வொரு பையிலும் தலா 6 பொதி களாகச் சுற்றப்பட்ட நிலையில் 18 கஞ்சா பொதிகளைப் பொலிஸார் கைப்பற்றினர். அவர்கள் இருவரையும் கைது செய்தனர். நீதிமன்ற உத்தர வுக்கு அமைய கஞ்சா அரச பகுப்பாய்வுத் திணைக்களத் துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

> “ மாதகல் மேற்கில் கடந்த ஜூலை 12 ஆம் திகதி வீட்டில் வைத்து சுமார் 39 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொரு ளுடன் அந்தவீட்டில் வசிக்கும் தர்மகுலசிங்கம் பேபி, நீக்கிலன் செல்லத்துரை ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் வழங்கிய தகவலையடுத்துக் கைதான தர்மபாலன் தர்மராஜன் என்பவரைப் பிணையில் விடுவிக்கக்கோரி பிணை விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது. அதைப் பரிசீலித்த மேல்நீதி மன்று 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் ஒரு லட்சம் ரூபா பெறுமதி யான தலா இரண்டு ஆள் பிணை யிலும் விடுவித்த தோடு ஒவ் வொரு வெள்ளிக் கிழமையும் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்கும் இடையில் கையெ முத்திட வேண்டும் என்று உத் தர விட்டது. தவிர அவர் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களைக் கையாளுதல் என்பவற்றில் ஈடுபடக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டார். (ற-4)

## பிரதேச சபை தலைவர் கைது

கொழும்பு, மே 28

திவுலபிட்டிய பிரதேச சபைத் தலைவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். தாக்குதல் சம்பவம் ஒன்று தொடர்பாகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண,

"தாக்குதல் சம்பவம் ஒன்று தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்தே பிரதேச சபைத் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொட்டதெனியாவ பொலிஸார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது"- என்று தெரிவித்துள்ளார். (ற)


## சுய தொழில் வாய்ப்பு

விற்பனைத் துறையில் ஆர்வமும், பொதுஜன தொடர்புடையவர்களுக்கும், இச்சுயதொழில் வேலைவாய்ப்பு மூலம் மாதம் பெரும் வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். உங்களின் முதலீடு வெறும் 30,000/= மட்டுமே. நீங்கள் முதலிடும் பணத்துக்கு பொருள்கள் உங்கள் கையில். மேலதிக விவரங்களுக்கு சுயவிவர விண்ணப்பத்துடன் நேரில் வரவும்,

தொடர்புக்கு: 077 226 3216 (48533) (10)

Clock Tower, 45, Muneeswaran Veethy, Jaffna.

* உதவியற்ற விதவை தாய்மார்களுக்கு முதலீட்டு கடனுதவி பெற்று தரப்படும்

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

## பிரத்தியேக வகுப்பு

G.C.E A/L கணக்கீடு 2015, 2016 A/L

(2014 A/L மாணவர்களுக்கு துரித மீட்டல் செய்யப்படும்.)

T.P: 077 447 5527

யாழ்ப்பாணம். (48525) (10)

## தவறிவிட்டது

19/2, பாக்றோட் குருநகரைச் சேர்ந்த றேமன் பேனாட்ஜொகூ ஆகிய எனது IC(852203803V)மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதி பத்திரம், காப்புறுதிப் பத்திரம், காசோலை, சிறுதொகை பணம் ஆகியன 26.05.2014 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் T.P மூலம் தொடர்பு கொண்டு தந்துதவவும்.

தொடர்பு: 077 1310841

முத்தையா பேக்கரி

373, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (48537) (10)

சன்மானம் வழங்கப்படும்.

## விற்பனைக்கு

| | |
|---|---|
| ★ வறுத்த அரிசிமா | 90.00 |
| ★ ஆட்டா மா | 100.00 |
| ★ அவித்த கோதுமைமா | 100.00 |

★ வறுத்த ஆட்டா மா என்பன விற்பனைக்குண்டு.

பொதியிடல் வேலைக்கு ஆள் தேவை.

தொடர்பு: பிருந்தா மில்ஸ்,

No.18, நக்கா றோட், யாழ்ப்பாணம்.

Tele: 077 991 2304 (48534) (10)


## மரண அறிவித்தல்

### கதிரவேல் பேரம்பலம்



பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் France ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேல் பேரம்பலம் (JP) 21.05.2014 காலமானார்.

அன்னார் தேவசுந்தரியின் (புஸ்பம்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கதிரவேல்சுவாமிகள் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி-நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், விஜயரூபன், காலஞ்சென்ற சுரேந்திரரூபன் (Canada) மற்றும் லோகேஸ்வரி (France), திருப்பதி, தயாபரி (Canada), குணவதி (London) ஆகியோரின் அன்புத் தந்தையும், இன்பராணி, ராஜி (London) சந்திரமோகன் போல்தயா (France), இதயராஜ், யோகநாதன (Canada), சின்னத் தம்பி (London) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் , சர்வானந்ததேவி, காலஞ் சென்றவர்களான பரமானந்தம், நித்தியானந்ததேவி, யோகேஸ்வரி மற்றும் மீன லோஜினி, சோதிப்பிள்ளை றோசம்மா ஆகியேரின் பாசமிகு சகோதரனும், சற் குணதேவி, பொன் ராஜா (London), மாசிலாமணி, ஜீவரட்ணம் , காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் நாகராஜா, அன்னபூரணம், தர்மலிங்கம், பவானி, ஞானேஸ் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.05.2014) புதன்கிழமை இலங்கை நேரப்படி மாலை 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். பூதவுடல், பிரான்சில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

33, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (48528) (10.6)

தகவல்: மருமக்கள்.

## துயர் பகிர்கின்றோம்



எமது நிறுவனத்தில் பணிபுரியும் செல்வி விசாந்தினியின் தந்தை ஐ.விசாகரத்தினம் அவர்கள் அமரத்துவம் அடைந்துள்ளார் என்பதை அறிந்து நாம் ஆழ்ந்த கவலை கொள்கின்றோம். நாம் அன்னாரது ஆத்மா சாந்தியடைய வேண்டிநிற்பதுடன் அவர் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த ஆற்றுப்படுத்தல்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பணியாளர்கள்
V2 TRAVELS & TOURS(PVT)LTD
வல்வெட்டித்துறை

## மரண அறிவித்தல்

### அருட் சகோதரி மேரி ஜெர்மெயின் பொன்னையா தி.கு



ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட் சகோதரி மேரி ஜெர்மெயின் பொன்னையா நேற்று (27.05.2014) செவ்வாய்க்கிழமை இறைபதம் இணைந்து விட்டார்.

அன்னாரின்பூதவுடல்இன்று(28.05.2014) புதன்கிழமை பி.ப.3.00 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், இள வாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

121, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (48531)

தகவல்: அருட் சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ் மாகாணத் தலைவி.

# இணையத்தினூடான வங்கிச் சேவை; கூடுதல் அவதானத்துடன் செயற்படுக

## அறிவுறுத்துகின்றது பொலிஸ் திணைக்களம்

கொழும்பு, மே 28

இணையத்தின் ஊடாக வங்கி சேவைகளை பயன்படுத்துவோர் கூடுதல் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸ் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண, இணைய குற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், பொது மக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும். இணைய பாவனைக்கென் தனியான சிம் அட்டையினை பயன்படுத்துமாறு பொதுமக்களுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன் இணைய வங்கி சேவைகளை பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில் குறித்த இணையத்தளங்களின் உண்மைத்தன்மையினை இனங்காணுவது அவசியம் என்றும், வங்கிகளின் இணையத்தளங்கள் என சில போலியான இணையத்தள முகவரிகள் மின்னஞ்சல் மூலம் கிடைக்கப்பெறலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வங்கி கணக்கு விவரங்கள், கடவுச் சொல் விவரங்கள், மற்றும் தனிப்பட்ட விவரங்களை கோரி வரும் மின்னஞ்சல்களுக்கு பதிலளிக்க வேண்டாம் எனவும், குறித்த வங்கிகளின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களில் வங்கி சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தெரிவித்த அவர், இணைய குற்றங்களை கண்டறிவதற்காக உருவாக்கப்பட்டுள்ள புலனாய்வு துறையினரின் சிறப்பு பிரிவிற்கு, சமூக வலைத்தளங்கள் தொடர்பில் 235 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் குறிப்பிட்டார்.

இந்த முறைப்பாடுகளில் இணைய வங்கி தொடர்பில் 9 முறைப்பாடுகளும், மின்னஞ்சல் தொடர்பாக 34 முறைப்பாடுகளும் அடங்குகின்றன என்றும் அஜித் ரோஹண சுட்டிக்காட்டினார். (ற)

> **இணைய குற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், பொது மக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும். இணைய பாவனைக்கென தனியான சிம் அட்டையினை பயன்படுத்துமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண.**

# மீட்கப்பட்ட ஹெலிகொப்டர் 1997இல் வீழ்த்தப்பட்டதாம்

கொழும்பு, மே 28

முல்லைத்தீவு, சாலை கடற்பரப்பிலிருந்து கடற்படையினரால் மீட்கப்பட்ட ஹெலி கொப்டரின் பாகங்கள், ரஷ்யாவினால் தயாரிக்கப்பட்ட எம்.ஐ 24 ரக தாக்குதல் ஹெலிகொப்டர் ஒன்றினுடையது என்று விமானப் படை உறுதி செய் துள்ளது.

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான இந்த ஹெலி கொப்டர், 1997ஆம் ஆண்டு மார்ச் மாதம், ரஷ்ய விமானிகள் இருவர் உட்பட 8 விமானிகளுடன் காணாமல் போனது என்றும் விமானப்படை கூறியது.

சாலை கடற்பரப்பிலிருந்து சுமார் ஒரு கடல்மைல் தூரத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஹெலிகொப்டரின் பாகங்களை ஆய்வு செய்வதற்காக விமானப்படைத் தளபதி கோலித்த குண திலக்கவினால் நியமிக்கப்பட்ட விசேட அதிகாரிகளினால் இந்த ஹெலிகொப்டர் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான எம்.ஐ 24 ரகத்தைச் சேர்ந்த இந்த விமானம் சி.எச்.614ஆம் இலக்கத்தைச் சேர்ந்ததாகும் என அவ்வதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். இந்த ஹெலிகொப்டர், தமிழீழ விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டிருக் கலாம் என்று நம்பப்படுவதாக விமானப்படை தெரிவிக்கின்றது.

இந்த ஹெலிகொப்டரில், விமானப்படையைச் சேர்ந்த விமானிகளான மேஜர் வோவா மில்லர் (ரஷ்யா), மேஜர் வை.ராமனொவ் (ரஷ்யா), ஏ.மலலசேகர (இலங்கை), எல்.ஏ.சி. அருணசாந்த (இலங்கை), எல். ஏ.சி.சமர கோன் (இலங்கை), பி.எச்.ஏ. சேனசிங்க (இலங்கை), கோப்ரல் நந்தசேன (இலங்கை) மற்றும் எல்.ஏ.சி.லியனகே ஆகியோரே இறுதியாகப் பயணித்துள்ளனர். உயிரிழந்தவர்களில் இருவரின் உடல்கள் மாத்திரமே அக்காலப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

பலாலி விமானப்படைத் தளத்திலிருந்து ஹிங்குரங்கொட விமானப்படைத் தளத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போதே இந்த ஹெலி கொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது என்று விமானப்படை மேலும் தெரிவித்துள்ளது.

*(முன்னர் வந்த செய்தி 5ஆம் பக்கத்தில்)* (ற)

> **இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான இந்த ஹெலி கொப்டர், 1997ஆம் ஆண்டு மார்ச் மாதம், ரஷ்ய விமானிகள் இருவர் உட்பட 8 விமானி களுடன் காணாமல் போனது குறிப்பிடத்தக்கது.**

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### நவிப்பிள்ளையின்

ஆம் ஆண்டுக்கான புதிய அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 2012 ஆம் வருட அமர்விலும், 2013 ஆம் வருட அமர்விலும், இலங்கை விவகாரம் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் பலாபலன்கள் குறித்தும் இலங்கையின் நிலைவரம் குறித்தும் சர்வதேச சமூகம் தொடர்ந்தும் அவதானிப்பை மேற்கொள்ளும் என்றும் புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் 2002 முதல் 2009 ஆம் ஆண்டுவரை நடைபெற்ற போரின்போது இழைக்கப்பட்ட பெரும் மனித உரிமைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் மீதான விசாரணையை மேற்கொள்ளுமாறு இவ்வருட மார்ச் அமர்வில் அமெரிக்கா தீர்மான மொன்றின் மூலம் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு ஆணை வழங்கியுள்ளது. இன்னும் இரு வாரங்களில் நவநீதம் பிள்ளையின் அலுவலகம் இந்த விசாரணையை ஆரம் பிக்கவுள்ளது என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலக அறிக்கையில், ஆணையாளர் நவநீதம்பிள்ளை பல விடயங்களில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டிய தன் அவசியத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அநேக விவகாரங்களில் இலங்கை அர்த்தபுஷ்டியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. பொறுப்புக் கூறல் கடப்பாடு, வடபகுதியில் அதிகளவில் இராணுவக் குவிப்பு, இடம்பெற்றுக்கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்கள், மத ரீதியான வன்முறைகளை முடுக்கிவிடுதல், சுயாதீன நீதித்துறைக்கு குந்தகமான நடவடிக்கை ஆகியவற்றை நவநீதம் பிள்ளை முன்வைத்துள்ளார்.

மனித உரிமைகள் சபையின் 2013 ஆம் வருட அமர்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்ட பல அம்சங்கள், 2014 மார்ச் அமர்வுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்டிருக்கவேண்டும். எனினும் எதுவும் நடக்கவில்லை என்றும் அவர் கோடிட்டுக் காட்டியுள்ளார். (ற-சி)

### '13' ஐ நடைமுறை

சினை தொடர்பில் விவாதிக்கப்பட்டது. இரு நாட்டு மீனவர்களுமே பயனடையக்கூடிய வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதில் இரு தலைவர்களும் இணக்கம் கண்டனர். மீனவர்களுக்கு இடையிலான பேச்சுக்களும், இணைந்த குழுவின் அதிகாரிகளுக்கு இடையிலான பேச்சுக்களும் தொடர்வதற்கு இரு தலைவர்களும் சம்மதம் தெரிவித்தனர்.

சார்க் பிராந்தியத்துக்குப் பொதுவாக நன்மையளிக்கக் கூடிய விடயங்கள் பற்றி சார்க் நாடுகள் கவனம் செலுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்ட இந்தியப் பிரதமர், அது எமக்கு உலகளாவிய ரீதியில் நன்மை பயக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் மோடியின் கருத்தை வரவேற்ற ஜனாதிபதி மஹிந்த, இந்தியாவின் தலைமைத் துவம் பிராந்திய நாடுகளின் செயற்பாடுகளுக்குப் பெரிதும் பயனளிக்கும் எனத் தெரிவித்ததோடு சார்க் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் இலங்கை இந்தியாவுடன் இணைந்து செயற்பட தயாராக இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புதுடில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் சுஜாதா சிங் தெரிவித்ததாவது: இரு நாட்டு உறவுகள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. அப்போது, தமிழர் பிரச்சினை குறித்தும் விவாதிக்கப்பட்டது. 13ஆவது திருத்தத்தையும் நடைமுறைப்படுத்துமாறும் அதற்கு மேலதிக அதிகாரங்களை வழங்குமாறும் பிரதமர் மோடி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தினார்.

மேலும் தமிழர் பகுதிகளில் மறுவாழ்வுப் பணிகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி ராஜபக்ஷவை மோடி கேட்டுக் கொண்டுள்ளார். அதே சமயம் இலங்கை உடன் அனைத்து துறைகளிலும் இந்தியாவின் ஒத்துழைப்பு தொடரும் என்றும் மோடி உறுதியளித்தார்.

இந்த சந்திப்பின்போது, பிரதமர் மோடியை இலங்கை வருமாறு ஜனாதிபதி ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார். அதை ஏற்று இலங்கை செல்ல பிரதமர் மோடி சம்மதம் தெரிவித்தார் - என்று சுஜாதா சிங் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (உ-5)

### யாழ்.மாவட்ட

நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்று அவர் அங்கு குறிப்பிட்டார்.

அதை ஏற்றுக்கொண்ட வடக்கு மாகாண கல்வி அமைச் சர், "எண்பது தொடக்கம் நூறு வரையானோர் மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள்தான். அவர்களை இனங்கண்டு கொள்வதற்காகவும், அது குறித்து நடவடிக்கை எடுப்பதற்காகவும் மருத்துவர்களை நாடியபோதும், அவர்களுக்கு மனநோய் உள்ளது எனும் கடிதத்தைத் தருவதற்கு மருத்துவர்கள் மறுத்துவிட்டனர். குறித்த ஆசிரியர்களை வேலையில் இருந்து நீக்குவது பெரும் பிரச்சினைகளை உருவாக்கக் கூடும். எனவே அவர்களுக்கான தனியாக பாடசாலைகளை உருவாக்குவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது"- என்று தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் இறுதி முடிவு ஏதும் எட்டப்படாமலேயே நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முடிவடைந்தது. (ற-21)

### முடிவேதுமின்றி

துள்ளன. நேற்றைய கலந்துரையாடல்களில் கல்வி தொடர்பான விடயங்கள் முக்கியத்தும் பெற்றிருந்த நிலையில், அபிவிருத்தி விடயங்கள் தொடர்பில் ஆராயப்படவில்லை.

அமர்வு ஆரம்பமாகியதும், இரணைமடு குடிதண்ணீர் திட்டம், சுகாதார அமைச்சுக்கு உட்பட்ட விடயங்கள் மற்றும் மின்சாரம் ஆகிய விடயங்களுடன் கல்வி தொடர்பான விடயங்கள் சுமார் இரண்டரை மணி நேரத்துக்கு நடைபெற்றது. அதனால் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு நேரம் போதாமையால் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

கலந்துரையாடலின் முடிவில், உயர்கல்வி, வர்த்தகம், தொழில்துறை, வீடமைப்பு, போக்குவரத்து, உள்ளூராட்சி சபைகள், நிர்வாகம், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பிலான விடயங்கள் அடுத்த கூட்டத்தில் ஆராயப்படும் ன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியதுடன், அடுத்த கூட்டத்துக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்து கூட்டத்தை ஒத்திவைத்தார். (ற-5)

### மின்னல்

யின் தாயாரான த. சுபாஜினி காயங்களுக்கு உள்ளானார். இந்தச் சம்பவத்தை கண்ணுற்ற சுபாஜினியின் கணவரான தமிழரசன் தன்னைத் தான் மாய்த்துக் கொள்ள முற்பட்டார் இதன்போது அவரும் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார். காயமடைந்த இருவரும் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சிறுமியின் சடலம் மருத்துவமனையில் ஒப்படைக்கப் பட்டது. (ஐ-55)

### மோடியுடைய

மஹிந்த ராஜபக்ஷ நேற்று புதுடில்லி - ஹைதராபாத் இல்லத்தில் இந்தியப் பிரதமர் மோடியைச் சந்தித்து இலங்கை நிலைமை தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். இந்த நிலையிலேயே இரா.சம்பந்தன் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். இதுகுறித்து அவர் தெரிவித்தாவது,

"இந்தியாவின் புதிய பிரதமராக வந்துள்ள நரேந்திர மோடிக்கு வாழ்த்துத் தெரிவித்தும், வடக்கு, கிழக்கு நிலைமை தொடர்பில் விளக்கியும் அவருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சில தினங்களுக்கு முன்னர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளேன்.

அந்தக் கடிதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் அவரைச் சந்திப்பதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் எனக் கேட்டுள்ளேன். இந்நிலையில், இந்தியப்பிரதமரின் அழைப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்" - என்று தெரிவித்தார். (ற-சி)

### இராஜதந்திரிகள்

சென்று பார்வையிடவுள்ளார். அதன் பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்குச் செல்லவுள்ளார்.

இதேவேளை இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் யாழ்.மாவட்டத்துக்கு இன்று காலை 9 மணிக்கு வரவுள்ளார். முதலில் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்திப்பதுடன் அதன் பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனைச் சந்திக்கவுள்ளார். தொடர்ந்து ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட இரண்டு வேலைத் திட்டங்களைப் பார்வையிடவுள்ளார். (ற-5)

### இராணுவத்தின்

முப்பியிருந்தார். "இராணுவத்தில் எமது இளைஞர், யுவதிகள் இணைகிறார்கள் இல்லை என்றவுடன், உங்களிடம் (அரச அதிபர்) வந்துள்ளனர். நீங்கள் இராணுவத்துக்கு ஆள் சேர்த்துக் கொடுக்கும் முகவர்களாக இருக்கப் போகிறீர்களா?" என்று அவர் அங்கு கேள்வியெழுப்பியிருந்தார்.

அதற்கு அரச அதிபர் பதிலளிக்க முற்பட்டபோது குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ், "இராணுவத்தால் கொடுக்கப்பட்ட செய்தி சொல்லப்பட்டிருக்கின்றது. அவ்வளவுதான்." என்றார்.

அதை ஏற்காத அமைச்சர் ஐங்கரநேசன், "மாவட்ட அரச அதிபருடைய பதில் என்னவாக இருக்கின்றது?" என்று விடாது கேள்வியெழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அரச அதிபர், "அவர்களுடைய நோக்கத்தை நாம் தெளிவுபடுத்தியிருக்கின்றோம். இதில் வேறு விளக்கம் இல்லை" என்றார்.

ஆனாலும் விடாத ஐங்கரநேசன், "யாருக்குத் தெளிவுபடுத்தினீர்கள்?" என்று அடுத்த கேள்வியைத் தொடுத்தார்.

அதற்குப் பதிலளித்த அரச அதிபர் "பிரதேச செயலர்களுக்குத்தான். அதாவது பிரதேச செயலர்களுக்கு இராணுவத்தினர் தெளிவுபடுத்தியுள்ளனர்" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து அதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வியெழுப்ப முற்பட்டபோது, அதில் அநாவசியக் கேள்விகள் வேண்டாம் என்று அது தொடர்பில் முற்றுப்புள்ளி வைக்க முயன்றார். ஆயினும் நாடாளுமன்ற உறுப்பினர் விடவில்லை. "இராணுவத்தினருக்கு ஆள்பிடித்துக் கொடுப்பது அரச அதிபரினதோ அல்லது பிரதேச செயலர்களினதோ வேலை இல்லை. அது பாதுகாப்பு அமைச்சின் வேலை. செய்யவேண்டாம்" - என்று பெரும் கூச்சலுக்கு மத்தியிலும் கூறி முடித்தார்.

அதன்பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா "இராணுவத்தினருக்கு ஆள்பிடிக்கும் வேலை பிரதேச செயலர்களுடையது இல்லைத்தான்" என்று கூறி முடித்ததுடன், அதன்பின்னர் இந்தவிடயம் தொடர்பில் பேசுவதற்கு அனுமதியளிக்கவில்லை. (ற-5-86)

### மலக்கழிவுகள்

"யாழ்.நகரில் சுண்ணாம்புக் கற்கள் ஊடாக இவ்வாறான மலக் கழிவுகள் எமது கிணறுகளில் கலக்கின்றன. நாம் மலம் கலந்த தண்ணீரையை பருகுகின்றோம். கிராமங்களிலாவது நல்ல நீரைப் பருகுகின்றார்களா என்றால் இல்லை. வயல்கள், தோட்டங்களுக்கு மருந்துகள் விசிறப்பட்டு அங்கும் தண்ணீர் கெட்டுப்போய் விட்டது. நிலத்தடி நீர் மாசுபட்டுத்தான் போகும். அதனால் நாம் மழைநீரை சேமிக்க வேண்டும்.

நீர் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஆஸ்திரேலியாவில் இருந்து ஆய்வாளர்களைக் கொண்டுவரத் தேவையில்லை. இங்கேயே அதற்குரிய வளம் இருக்கின்றது. பல்கலைக்கழகங்களும் இருக்கின்றன. ஆய்வாளர்களும் இருக்கின்றனர். ஆஸ்திரேலியாவில் மழைநீரில் இருந்து தண்ணீர் எடுக்கும் முறையை கொண்டுவந்தவர் மானிப்பாயைச் சேர்ந்த தமிழர்தான். அவர்தான் அங்கு பிரதமபொறியியலாளர். எனவே இங்குள்ள வளங்களைப் பயன்படுத்துங்கள்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-21)

# 2ஆம் கட்ட பெருவிளையாட்டுகள் 31 ஆம் திகதி முதல் வவுனியாவில்

வலி.வடக்கு, மே 28

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் இரண்டாம் கட்டப் பெரு விளையாட்டுப் போட்டிகள் வவுனியா மாவட்டத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன்.

எதிர்வரும் 31ஆம், முதலாம் திகதிகளில் ஆண்கள், பெண்களுக்கான கராத்தேப் போட்டிகள் வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

முதலாம் திகதி முதல் 3ஆம் திகதி வரை ஆண்கள், பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் வவுனியா நகரசபை மைதானம் மற்றும் ஓமந்தை மத்திய கல்லூரி மைதானம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளன.

4 ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளில் 15 வயது, 17 வயது, 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் வவுனியாவில் ஓமந்தை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன.

5 ஆம், 6 ஆம், 7 ஆம் திகதிகளில் 15 வயது, 17 வயது, 19 வய்துப் பிரிவு ஆண்கள் மற்றும் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் வவுனியா நகரசபை மைதானம், வவுனியா சிறுவர் பூங்கா மைதானம், வவுனியா முஸ்லீம் மகா வித்தியாலயம் மற்றும் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய மைதானம் ஆகியவற்றில்நடைபெறவுள்ளன.(த-86)

## தாச்சிப் போட்டி சமநிலையில்

யாழ்ப்பாணம், மே 28

யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் லீக் முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மடத்தடி வைகறை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டன.

இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா 6 புள்ளிகளைப் பெற்றமையால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.(த-23)



தீவக உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட 2014ஆம் ஆண்டுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று சம்பியன் ஆனாது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 28

யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் லீக் முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன் கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.(த-23)

★★★

யாழ்ப்பாணம், மே 28

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 9 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவைச்சுடர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த- 23)

★★★

யாழ்ப்பாணம், மே 28

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் மின்னொளிக் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான அரையிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## 19 வயதுக் கரப்பந்தில் வென்றது சோமஸ்கந்தா




வெற்றி பெற்ற அணியினர்

யாழ்ப்பாணம், மே 28

வடமாகாணப் பாடசாலைகளின் 19 வயது பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

3 செற்களைக்கொண்ட இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மன்னார் ரிசாத் பதியுதீன் மகா வித்தியாலய அணியை எதிர்த்து மன்னார் பரிகாரிகண்டல் அ.த.க. பாடசாலை அணி மோதிக்கொண்டது

3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில். மன்னார் ரிசாத் பதியுதீன் மகா வித்தியாலய அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கிகொண்டது. (த- 23 - 422 -433)

## யூனியன்- சென்.ஜோன்ஸ் ஆட்டம் சமநிலையில்

வலி.வடக்கு, மே 28

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியின் ஆட்டம் ஒன்று சம நிலையில் முடிவடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ கல்லாரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 43.2 பந்துப்பரிமாற்றங்களில்அனைத்து இலக்குகளையும இழந்து 159 ஓட்டங்களை பெற்றது.

றெமிங்ரன் 31 ஓட்டங்களையும், மதீசன் 30 ஓட்டங்களையும், விதுசன் 16 ஓட்டங்களையும்,றொகான் 15 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 38 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யூனியன் கல்லூரியைச் சேர்ந்த பிரகாஷ் 09 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 20 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் பமிங்ரன் 7.2 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்களுடன் 21 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், தேனுஜன் 09 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 25 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், லவன்ராஜ் 9 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 29 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், மதிசன் 16 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 48.2 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது.

தேனுஜன் 25 ஓட்டங்களையும், மதிசன் 22 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 77 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த செந்தூரன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 5 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 5 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், ஜெயசுரன் 9 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 10 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், மதீசன் 8 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 23 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஹம்சிகன், ஹேமஜிதன்முறையே 6, 26 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு இலக்கையும கைப்பற்றினார்கள். (த-86)

# கிளிநொச்சி மகா வித்தி. வெற்றி



வெற்றி பெற்ற அணியினர்

கிளிநொச்சி, மே 28

கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே ஆண்டு தோறும் நடைபெறும் நட்பு ரீதியான கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி ம.வி 7 இலக்குகளால் வெற்றி பெற்றது. கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் 15 வயதுப் பிரிவினர் கலந்து கொண்டனர். 25 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 18.1 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பாக நிருசன் அதிரடியாக 48 ஓட்டங்களைப் பெற்றார் பந்து வீச்சில் கிளிநொச்சி ம.வி சார்பாக மிதுசன், கீர்த்திகன், நிருத்திகன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் யதுசன், குருகுலன் தலா ஒவ்வொரு இலக்கினையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 105 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு ஆடிய கிளிநொச்சி ம.வி அணி 16 பந்து பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மட்டும் இழந்து 7 இலக்குகளால் வெற்றி பெற்றது.

சனுசன் 25 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது துவாரகன், மிதுசன் ஆகியோர் முறையே 33, 16 என ஓட்டங்களைப் பெற்றனர்.


# மோடியின் கட்டுப்பாட்டில் இந்தியக் கிரிக்கெட் சபை?

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை, இந்திய புதிய பிரதமர் நரேந்திர மோடியின் கடுப்பாட்டுக் குள் வர வாய்ப்புக்கள் இருப்பதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பதவிப் பிர மாண நிகழ்வுக்கு அமித் ஷா என்பவருக்கு அதி முக்கியத்துவம் வழங்கி அவர் அதிதியாக அழைக் கப்பட்டு இருந்தார். அரசியல் ரீதி யாக மட்டுமன்றி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் உதவி தலைவராக அவர் வர வாய்ப்புக் கள் இருப்பதாகவும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது. நரேந்திர மோடி, குஜராத் கிரிக்கெட் சம்மேளன தலைவராக இருந்த வேளையில் ஷா உபதலைவராக இருந்தவர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக் கது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட் டுச் சபையின் பொதுக் கூட்டங்க ளுக்கு குஜராத் கிரிக்கெட் சம்மேள னத்தின் சார்பாக ஷாவே பிரதிநிதி யாக கலந்து கொள்பவர் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

இந்திய விளையாட்டு வீரர்கள் ராணுவ வீரர்கள் போன்று பயிற்சிகளின் போது நடத்தப்படவேண்டும் எனவும் அவர்களுக்கான வசதிகள் அதிகள வில் வழங்கப்படவேண்டும் என வும், வசதிகள் உடனடியாக அதிகரிக் கப்படவேண்டும் எனவும் நரேந்திர மோடி கூறியிருந்தார். இதன்படி அவர் விளையாட்டை மேம்படுத்த முனைப்பாக இருக்கின்றார் என்பது தெளிவாகின்றது.

நீதிமன்றத்தினால் தடை செய்யப்பட் டுள்ள ஸ்ரீநிவாசன் மீண்டும் தலை வராக வர வாய்ப்புகள் இல்லை. செப்ரெம்பர் மாதம் அவரின் பதவிக் காலம் நிறைவடைகின்றது. இதே வேளை இவரால் தடை செய்யப்பட்ட லலித் மோடி, பாரதீய ஜனதா கட்சியுடன் இணைந்து செயற்படும் ஒருவர். அண்மையில் ராஜஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராகப் பதவியேற்றார். இருப்பினும் ராஜஸ் தான் கிரிக்கெட் சபையை, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தடை செய்துள்ளது. தற்போதைய வழக்கு விசாரணைகளுக்கு முக்கிய கார ணமான பீகார் கிரிக்கெட் சம்மேள னத் தலைவர் ஆதித்தியா வர்மா நரேந்திர மோடியின் வெற்றிக்கு வாழ்த்துக்களைக் கூறியிருந்தார்.

நரேந்திர மோடிக்கு ஆதரவானவர் களின் பலம் கூடியிருப்பதும், இந்தியாவின் முக்கிய அமைப்பு களில் ஒன்றாகத் திகழ்வதுமான இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையை நரேந்திர மோடி தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முனைவார் என்பதும், அண்மைக் கால சிக்கல்களை முடிவுக்கு கொண்டு வர முயற்சி எடுப்பார் என்ற அடிப்படையிலும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையில் மாற்றங்கள் வர வாய்ப்புகள் உள்ளன. (கு)



நரேந்திர மோடி

# உசைன் போல்ட் இன்றியே ஜமெய்க்கா உலக சாதனை

பஹாமாஸின் நசௌ விளையாட்டரங்கில் வார இறுதியில் நடைபெற்ற உலக தொடர் ஓட்டப் போட்டிகளில் 4 X 200 மீற்றர் தொடர் ஓட்டத்தில் ஜமெய்க்கா அணியினர் புதிய உலக சாதனை நிலைநாட்டினர்.

இந்தப் போட்டியை ஒரு நிமிடம் 18 செக்கன்கள் 63 விநாடிகளில் ஓடி முடித்தே ஜமெய்க்கா அணியினர் புதிய உலக சாதனையை நிலைநாட்டினர். உலக சாதனை நிலைநாட்டிய ஜமெய்க்கா அணியில் நிக்கெல் ஆஷ்மீத், வொரன் வெயர், ஜேர்மெய்ன் ப்றவுண், யோஹான் ப்ளேக் ஆகியோர் இடம்பெற்றனர்.

இதேவேளை கென்யா இரண்டு உலக சாதனைகளை நிலைநாட்டியது.

ஆண்களுக்கான 4 X 1500 மீற்றர் தொடர் ஓட்டப் போட்டியை 14 நிமிடங்கள் 22.22 செக்கன்களில் நிறைவு செய்து கென்யா புதிய உலக சாதனையை நிலைநாட்டியது. இவ்வணியில் கொலின் செபோய், சிலாஸ் கிப்லகட், ஜேம்ஸ் கிப்லகட் மகுட், ஆஸ்பென் கிப்ரொப் ஆகியோர் இடம்பெற்றனர்.

இதேவேளை பெண்களுக்கான 4 X 1500 தொடர் ஓட்டத்தை 16 நிமிடங்கள் 33.58 செக்கன்களில் நிறைவு செய்து புதிய உலக சாதனை நிலைநாட்டிய கென்ய அணியில் மெர்சி சேரோனா பெய்த், செப்கெட்டிச் கிக்யே கொன், ஐரின் ஜெலகட் ஹெலென், ஒன்சாண்டொ ஒபிரி ஆகியோர் அங்கம் வகித்தனர்.

ஆண், பெண் இருபாலாருக்கும் 4 X 100 மீற்றர், 4 X 200 மீற்றர், 4 X 400 மீற்றர், 4 X 800 மீற்றர், 4 X 1500 மீற்றர் ஆகிய எட்டு தொடர் ஓட்டப் போட்டிகளில் 40 நாடுகளைச் சேர்ந்த 500 க்கும் மேற்பட்ட மெய்வல்லுநர்கள் பங்கு பற்றியதுடன் மொத்தமாக 1.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பணப்பரிசாக வழங்கப்பட்டது. (கு)






# 2 ஆவது சுற்றில் ஷரபோவா

பிரெஞ்ச் ஓபன் ரென்னிஸ் போட்டித் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்றில் விளையாட, நட்சத்திர வீராங்கனை மரியா ஷர போவா தகுதி பெற்றார்.

முதல் சுற்றில் சக வீராங் கனை செனியா பெர்வாக்கு டன் மோதிய ஷரபோவா 6-1, 6-2 என்ற நேர் செற்களில் மிக எளிதாக வென்றார். மற்றொரு முதல் சுற்றில் டொமினிகா சிபுல்கோவா (ஸ்லோவகியா) 7-5, 6-0 என்ற நேர் செட்களில் உள் ளூர் வீராங்கனை வர்ஜினி ரஸானோவை வீழ்த்தினார். முன்னணி வீராங்கனைகள் யூஜெனி பவுச்சார்ட் (கனடா), தாமிரா பாஸ்செக் (ஆஸ்திரியா), பிளாவியா பென்னட்டா (இத் தாலி), சேபைன் லிசிக்கி (ஜேர்மனி) ஆகியோரும் 2ஆவது சுற்றுக்கு முன் னேறி உள்ளனர். ஆண் கள் ஒற்றையர் பிரிவில் ஜப் பான் வீரர் கெய் நிஷிகோரி (9ஆவது இடம்) 6-7 (4-7), 1-6, 2-6 என்ற நேர் செற் களில் ஸ்லோவகியாவின் மார்டின் கிளிஸானிடம் (59ஆவது இடம்) அதிர்ச்சி தோல்வியடைந்து ஏமாற் றத்துடன் வெளியேறி னார். (கு)

# உகெவோன் கூப்பரின் பந்துவீச்சில் சந்தேகம்

ராஜஸ்தான் அணியின் பந்து வீச்சாளர் கெவோன் கூப்பர் பந்து வீசும் முறை குறித்து புகார் செய்யப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். போட்டியில் மும்பையில் நேற்று முன்தினம் நடந்த லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் ராஜஸ்தானை வீழ்த்தி அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது. இந்தப் போட்டியில் (மேற்கிந்திய தீவு கள்) ராஜஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் கெவோன் கூப்பர், 38 ஓட்டங்கள் கொடுத்து 2 இலக்குகள் வீழ்த்தினார்.

இந்நிலையில் இவரின் பந்து வீச்சு முறை விதிமுறைக்குப் புறம்பாக இருந்ததாக ஆடுகள நடுவர்கள் புகார் தெரிவித்துள்ளனர். இந்த காரணத்தினால் கெவோன் கூப்பர் பந்து வீச்சு குறித்து இந்திய கிரிக்கெட் சபையின் பந்து வீச்சு குழு ஆய்வு செய்யும் என்று தெரிகிறது. (கு)

# இந்தியா- பாகிஸ்தான் தொடர் மிக அவசியம்



வசீம் அக்ரம்

இந்தியா, பாகிஸ்தான் இடையே கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட வேண்டும் என கொல்கத்தா அணியின் பயிற்சியாளராக உள்ள வசிம் அக்ரம் வலியுறுத்தியுள் ளார்.

சர்வதேச கிரிக்கெட் தொடரில் இந் தியா, பாகிஸ்தான் போட்டி என்றால் அந்தப் போட்டிக்கு தனிப்பட்ட வரவேற்பு உள்ளது. ஆனால் மும்பை தாக்குதலுக்கு பிறகு இவ் விரு அணிகள் மோதும் போட்டி கள் நடத்தப்படவில்லை.

இந்நிலையில் இவ்விரு நாடுக ளுக்கும் இடையே போட்டிகள் அவசியம் வேண்டும் என வலியு றுத்திய பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வசிம் அக்ரம் மேலும் கூறுகை யில், அரசியல் காரணங்களுக் காக, இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் கிரிக் கெட் தொடர் நடத்தப்படாதது வருத் தம் அளிக்கிறது.

மேலும் நான் எப்போதும் விளை யாட்டையும், அரசியலையும் ஒன்றாகப் பார்க்க மாட்டேன். இவ் விரு அணிகளுக்கு இடையில் கிரிக்கெட் தொடர் விரைவில் நடத் தப்படும் என நம்புகிறேன்.

அதுமட்டுமல்லாது ஐ.பி.எல் தொடரில் விளையாட பாகிஸ் தான் வீரர்கள் தேர்வு செய்யப் படாதது ஏமாற்றம் அளிக்கிறது. இவர்களுக்கு வாய்ப்பு கொடுக் கும் பட்சத்தில், ஒவ்வொரு அணி களும் பலம் பெறும்.

இது தவிர, பாகிஸ்தானிலும் ஐ.பி.எல்., போட்டி பிரபலமடை யும். எனவே அடுத்து வரும் தொடர்களில் பாகிஸ்தான் வீரர் கள் விளையாடுவார்கள் என எதிர்பார்க்கிறேன் என்று கூறி யுள்ளார். (கு)

## மழையால் நேற்றைய ஆட்டம் ரத்து

கொல்கத்தாவில் பெய்து வரும் மழையால் நேற்று அங்கு நடக்கவிருந்த போட்டி இன்று நடைபெறும் என்று ஐ.பி.எல். அமைப்பு அறிவித்துள்ளது

நேற்றைய முதல் தகுதிச்சுற்றில் கொல்கத்தா- பஞ்சாப் அணிகள் மோத இருந்தன. ஆனால் அங்கு மழை பெய்ததால் போட்டியை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

அதிகாரிகள் ஆய்வு செய்கையில் மைதானம் மழையால் விளையாடத் தகுதியற்றதாக இருந்ததால் நேற்றைய போட்டி இன்று 4 மணிக்கு மாற்றப்பட்டுள்ளது. (த)


புதிய முறையிலான

**தேசிய ஆங்கில டிப்ளோமா**



அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் ஆங்கிலத்தை முழுமையாக பேசக் கற்கும் வகையில் ஷாம்சனினால் உருவாக்கப்பட்ட 20 புத்தகங்களைக்கொண்ட இப் பயிற்சியில் இப்போது வயது வேறுபாடின்றி எவரும் இணையமுடியும்!

வீட்டிலிருந்தே 20 புத்தகங்களையும் கற்று ஒவ்வொன்றிலுமுள்ள 250 பயிற்சிகளையும் செய்து எம்மிடம் ஒப்படைத்தல் வேண்டும் பயிற்சிநெறி முடிவில் உங்களாலும் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்.

பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், ஆங்கிலம் பேசவிரும்புவோர், வீட்டுப்பெண்கள் இணையமுடியும்.

பயிற்சிநெறி முடிவில் Diploma in English certificate வழங்கப்படும்

இலவசம் 20 புத்தகங்கள்

SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். ☎ 021 320 33 13 077 621 4567



**உடனடி வேலை வாய்ப்பு**

முன்னணி Collection கம்பனியான Solution Associates (Pvt) Ltd இல் யாழ்ப்பாணம் மற்றும் பாலம்பிட்டி / பெரியதம்பனை ஆகிய பிரதேசங்களில் Field recovery Officers வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் உடனடியாக சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தயவுசெய்து கீழ் குறிப்பிடப்படும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்களது CV யை அனுப்பவும்.

Solution Associates(Pvt) Ltd
Ethulkotte, Kotte
E-mail: damara-sapl@sltnet lk &
call Madusha on 072-2460097




## ஐ.பி.எல் இறுதிப்போட்டி நடுவராக குமார் தர்மசேன

ஐ.பி.எல். இறுதிப்போட்டிக்கு இலங்கையின் முன்னாள் வீரர் குமார் தர்மசேன மற்றும் ஆஸ்திரேலியாவின் புரூஸ் ஒக்சென்போர்ட் நடுவராக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐ.பி.எல். தொடரின் லீக் போட்டிகள் அனைத்தும் முடிந்துவிட்டன. இறுதிப்போட்டிக்கான தகுதி சுற்று ஆட்டங்கள் இன்று முதல் தொடங்குகின்றன.

இதன் முதல் தகுதிச் சுற்றில் கொல்கத்தா- பஞ்சாப் அணிகள் , இரண்டாவது தகுதிச் சுற்றில் சென்னை- மும்பை அணிகள் மோதுகின்றன.

இதைத் தொடர்ந்து ஐ.பி.எல். தொடரின் இறுதிப்போட்டி பெங்களூரில் எதிர்வரும் முதலாம் திகதி நடக்கிறது. இந்த இறுதிப் போட்டியானது குமார் தர்மசேன, புரூஸ் ஒக்சென்போர்ட் ஆகிய நடுவர்களின் கீழ் நடக்கவுள்ளது. (த)


மாதம் ஒரு லட்சத்துக்கு மேல் வருமானம் ஈட்டக் கூடிய

**பயிற்சி நெறி**

**HND in PHARMACY**

வயதெல்லை கிடையாது.
பகுதிநேரமாகப் படிக்கலாம்.
வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பு.

LAVA HOSPITALS (48358) (7.6.3)
120, Temple Road, Jaffna.
(Tel : 077 316 4617/021 222 4333)


## சச்சினின் உதைபந்து அணி கேரளா பிளாஸ்டர்ஸ்

இந்தியன் சுப்பர் லீக் உதைபந்து அணிகளில் சச்சின் டெண்டுல்கருக்கு சொந்தமான அணியின் பெயர் கேரளா பிளாஸ்டர்ஸ் என்று கேரளா முதல்வர் உம்மன் சாண்டி வெளியிட்டுள்ளார். கிரிக்கெட்டில் ஐ.பி.எல். போலவே உதைபந்தில் இந்தியன் சுப்பர் லீக் உதைபந்து போட்டிகள் நடத்த திட்டமிட்டு, கேரளா அணியை இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் சச்சின் வாங்கி இருந்தார். இந்நிலையில் திருவனந்தபுரத்தில் நேற்று நடைபெற்ற விழாவில் சச்சின் டெண்டுல்கரும், முதல்வர் உம்மன் சாண்டியும் அணியின் பெயரை வெளியிட்ட னர்.

இது குறித்து சச்சின் டெண்டுல்கர் கூறுகையில், என்னை மாஸ்டர் பிளாஸ்டர் என்று அழைப்பார்கள் அந்தக் காரணத்தால் உதைபந்து அணிக்கும் கேரளா பிளாஸ் டர்ஸ் என்று பெயர் வைக்க முடிவெடுத்தோம். மேலும் கிரிக்கெட் தவிர பிற ஆட்டங்களையும் நான் விரும்பிப் பார்ப்பதுண்டு. இந்திய கிரிக்கெட் அணியிலும், மும்பை இந்தியன்ஸ் அணியிலும் உதைபந்து விளையாடுவது என்பது எங்களது நீண்ட கால பயிற்சி முறையாகும்.

கேரளாவிலிருந்து இந்திய உதைபந்து அணிக்கு விளையாடியவர்கள் ஒருகாலத்தில் அதிகம் ஆனால் இன்று அந்த நிலைமை இல்லை. இந்தியன் சுப்பர் லீக் உதைபந்து தொடர் தொடங்கப்பட்டதன் நோக்கமே இந்தியாவில் உதைபந்தின் புகழைப் பரப்புவது தான் என்று கூறியுள்ளார். (த)


**Had (கூரை) விற்பனைக்கு உண்டு**

100 அடி நீளம், 40 அடி அகலம், 4.0 அமானா சீட் பாகிஸ்தான் GI பைப் மரக்காலை, கராச், ஸ்ரோர் போன்றவற்றுக்கு உகந்த Had (கூரை) விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 0777400800
0717400800



**- ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna

கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS.

பிரான்ஸ் செல்வோர் விரையுங்கள்...உடன் அழையுங்கள்...

021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.







இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) [illegible]ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் [illegible] ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மனிதனை அறிவாளியாகச் செய்ய முடியாத அறிவின் பெரும்பகுதி அவனை ஆணவம் பிடித்தவனாகவும் பயனற்றவனாகவும் செய்துவிடுகிறது.
-அடிஸன்

புதன் பொய்கை A

உதயன் மே 28 2014 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு



# நா காக்க

ராஜராஜன்

மனிதர்களின் உறுப்புக்களில் கண்களுக்கு எப்போதுமே முதலிடம் உண்டு. கண்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து உயர்ந்த இடத்தில் வைத்து அவை போற்றப்படுகின்றன. ஆனால் கண்களைப் போன்றதொரு முக்கிய இடம் மனிதர்களின் வாயினுள் அமைந்துள்ள நாவுக்கும் உண்டு என்பதைப் பலர் ஏனோ அறிந்திருக்கவில்லை. வெறுமனே உணவின் ருசியை அளவீடு செய்யும் ஓர் உறுப்பாகவே பலர் இதனை எண்ணுகின்றனர். உணவை இலகுவாக உண்பதற்கும், ருசியை அறிந்து கொள்வதற்கும் இந்த உறுப்பு பேருதவி புரிகின்றபோதிலும், முக்கியமானதொரு செயலுக்கு உறுதுணையாக இருந்து வருகின்றது. நாம் வார்த்தைகளை வெளியிடுவதில் இதன் பங்கு அளப்பரியது. நாக்கு இல்லையேல் வார்த்தைகள் இல்லை என்பது தான் உண்மையாகும்.

இதனால்தான் நாம் வார்த்தைகளை வெளியிடும் போது அதன் முழுப்பொறுப்பும் நாவினையே சார்ந்து நிற்கின்றது. இதன் காரணமாகவே தீயினால் சுட்ட வடு மாறிவிடும். ஆனால் நாவினால் சுட்ட வடு மாறவே மாறாது எனப் பெரியோர்கள் கூறிச் சென்றுள்ளனர். இதன் மூலமாக எமது வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகளின் பெறுமதி எமக்குத் தெரிகின்றது.

எம்மில் சிலர் முன்பின் சிந்திக்காது வார்த்தைகளைக் கொட்டி விடுவார்கள். ஆனால் இதன் தாக்கம் பின்னர் தான் இவர்களுக்குத் தெரியவரும். மற்றவர்களைப் பார்த்து ஏளனமாகச் சிரிப்பதும், நையாண்டி செய்வதும், பழித்து உரைப்பதும் அவர்களின் மனங்களில் மாறாத வடுக்களை உருவாக்கிவிடும். ஒருவனை எமது கடுமையான எதிரியாக மாற்றி விடுவதற்கு நாம் அவனுக்கு எதிராகப் பயன்படுத்தும்ஒருவார்த்தையேபோதுமானது. சிலர் யார் என்ன கூறினாலும் அதனை ஒரு பொருட்டாகக் கொள்வதில்லை. ஆனால் பலர் இவ்வாறு இருப்பதில்லை. தமக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட வார்த்தைப் பிரயோகங்களை எப்போதுமே நினைவில் வைத்திருப்பார்கள். பழிவாங்கும் தருணத்துக்காகக் காத்திருப்பார்கள்.

மகாபாரதத்திலே பாண்டவர்கள் புதிதாக அமைத்த மாளிகைக்கு கௌரவர்களில் மூத்தவனாகிய துரியோதனன் செல்கின்றான். அந்த மாளிகையின் நிலப் பகுதி விலையுயர்ந்த பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்டிருந்தது. இதனை முதலில் கண்டவர்கள் அங்கு நீர் நிறைந்து காணப்படுவதாக எண்ணி ஏமாந்தனர். துரியோதனனும் அவ்வாறே எண்ணித் தனது ஆடைகள் நீரில் நனைந்து போய்விடுமோ என்ற அச்ச உணர்வால் தூண்டப்பட்டு தான் அணிந்திருந்த வேட்டியைக் கைகளால் மேலே தூக்கியவாறு நடந்து செல்கின்றான். இதனைக் கண்டதும் அங்கு நின்ற திரௌபதி வாய் விட்டுப் பலமாகச் சிரித்தாள். அவளது சிரிப்பு துரியோதனனின் அடி மனதில் ஆழமான வெறுப்பையும், கோபத்தையும் ஏற்படுத்தி விட்டது. பின்னாளில் திரௌபதி துகிலுரியப்பட்டதும், பாண்டவர் வனவாசம் சென்றதும் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் தான் இடம்பெற்றது எனக் கூறப்படுவதுண்டு.

ஆகவே நாம் எதிர்காலத்தில் இடம்பெறப் போகும் பின் விளைவுகளையும் சிந்தித்த பின்னரே எத்தகைய வார்த்தைப் பிரயோகத்திலும் ஈடுபட வேண்டும்.

அதிகமாகக் கதைக்கும் ஆணையும், அடிக்கடி சிரிக்கும் பெண்ணையும் நம்பவே கூடாது என்று கூறுவார்கள். இதில் எந்தளவுக்கு உண்மை இருக்கின்றதோ தெரியவில்லை. ஆனால் ஏதோ ஒரு காரணமும் இல்லாமல் நம் முன்னோர் அவ்விதம் கூறியிருக்கமாட் டார்கள். எது எப்படி இருந்த போதிலும் நாவடக்கம் என்பது மனிதர்களுக்கு மிகவும் அவசியமானது.

எமது நாட்டைப் பொறுத்த வரையில் முன்பின் யோசிக்காது வார்த்தைகளை வெளியிடும் அரசியல்வாதிகள் பலரைக் கண்கின்றோம். ஐ.நா.மனித உரிமைகள் ஆணையர் நவநீதம்பிள்ளையைத் தம்முடன் தொடர்புபடுத்தி அமைச்சர் மேர்வின் சில்வா உதிர்த்த வார்த்தைகள் கடும் கண்டனங்களுக்கு உள்ளாகின. அமைச்சர் பொறுப்பிலிருந்து கொண்டு அவர் இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபட்டமை எமது நாட்டின் நற்பெயருக்கு ஒரு பெரும் களங்கமாகவே அமைந்துவிட்டது. ஆனால் இன்னமும் அவர் அமைச்சர் பதவியில் அமர்ந்து கொண்டு உலா வருகின்றார். எமது நாட்டின் கீழான நிலையை எடுத்துக் காட்டுவதற்கு இதை விட வேறொன்றும் இருக்க முடியாது. அமைச்சர் மேர்வின் மட்டுமல்ல வேறு பலரும் தமது மனம் போனவாறு வார்த்தைகளை உதிர்த்து வருகின்றனர். ஜனாதிபதி மஹிந்தரின் வழியில் இந்தியாவின் புதிய பிரதமராகிய மோடியின் தேர்தல் வெற்றிகள் அமைந்துள்ளதாகக் கூறுவோரும் எமது நாட்டில்தான் உள்ளனர்.

எதுவிதமான முன்யோசனையும் இன்றி அப்போதைய தமிழ் அரசியல்வாதிகள் உதிர்த்த வீரவசனங்கள் இளைஞர்களை உசுப்பேற்றி இறுதியில் ஆயுதப்போரில் முடிந்தது. இதனால் லட்சக் கணக்கானவர்கள் உயிர்துறக்கவும் வழிவகுத்தது. நாம் பலமுறை சிந்தித்த பின்னரே வார்த்தைகளை வெளியே விடவேண்டும். தவறினால் மோசமான விளைவுகளையே எதிர்கொள்ள நேரிடும்.


குறிப்பாக மற்றவர்களின் மனங்களை நோகடிப்பதற்கு எமக்கு எவ்வித உரிமையும் இல்லை. பிரச்சினைகள் ஏதாவது இருந்தால் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும். அதை விடுத்து எமது மனம் போனவாறு மற்றவர்களை ஏசுவதும், மனதைப் புண்படுத்துவதும் ஏற்றுக்கொள்ள முடியாதவை.

இடம்பெற்ற வடமாகாண சபைத் தேர்தலின் போது தமிழ் அரசியல் வாதிகளால் மக்களுக்குப் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கினால் ஆளுநரை உடனடியாக மாற்றிவிடுவோம். மாகாண சபையின் அதிகாரங்கள் யாவும் மக்களால் தெரிவு செய்யப்படும் சபையிடமே இருக்கும் எனப் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டன, மக்களும் இதனை முழுமையாக நம்பினார்கள். ஆர்வத்துடன் வாக்களித்தனர். வெற்றியும் கிடைத்தது. ஆனால் இப்போது என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை மக்கள் நன்கறிவர்.

ஆகவே நாம் வார்த்தைகளை வெளிவிடுவதற்கு முன்னர் எப்போதுமே கவனமாக இருத்தல் வேண்டும். ஏனென்றால் வெளியே கொட்டிய வார்த்தைகளை எம்மால் ஒரு போதுமே திரும்பவும் பொறுக்கியெடுக்க முடியாது.

ஆகவே முடிந்த அளவில் தேவையில்லாது வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபடுவதை நாம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அதிலும் மற்றவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தும் வகையிலும், கோபத்தை ஏற்படுத்தும் வகையிலும் எமது வார்த்தைகள் அமைந்துவிடக் கூடாது. எமக்குத் தீமை செய்பவர்களாக இருந்தாலும் அவர்களுடன் உரையாடும்போது மரியாதைக்குரிய வார்த்தைகளையே நாம் பயன்படுத்த வேண்டும். பிறரின் மனவேதனையில் சுகம் காணும் கெட்ட பழக்கம் எம்மிடம் தலைகாட்டுவதற்கு நாம் அனுமதிக்கவே கூடாது.

இயற்கை எமக்கு வழங்கிய உறுப்புக்களை உரிய வகையில் பயன்படுத்துவது எமது முக்கிய கடமையாகும். அதிலும் நாவைப் காப்பது என்பது மிகவும் அவசியமானது.



# சாப்பிடும் முன்பே பழம் சாப்பிட்டால் உடலுக்கு நல்லது

சாப்பாட்டுக்குப் பின்னர் பழம் சாப்பிடும் பழக்கம் நம்மில் பலபேரிடம் இருக்கிறது. இது சரியா? சாப்பிட்ட பின் பழம் சாப்பிடுவது என்பது ஒரு சரியான செயல் அல்ல. சாப்பிடும் முன்பே பழம் சாப்பிடவேண்டும். காரணம் வெறும் வயிற்றில் பழம் சாப்பிடும்போது நமது உடலில் சேர்ந்திருக்கும் நச்சுப்பொருள்களை வெளிக்கொண்டு வருகிறது இந்தப் பழம். அதனால் உடல் எடை குறைவதோடு. உடலுக்கு புத்துணர்ச்சியும், தெம்பும் கிடைக்க வழி வகை செய்கிறது.

சாப்பிட்ட பின்னர் பழம் சாப்பிடும்போது முதலில் எளிதாக ஜீரணமாவது இந்தப் பழம்தான். அதனால் உணவுகள் முழுவதும் செரிக்காத நிலையில் அமிலமாகவும், செரித்த பழம் வயிற்றிலுள்ள ஜீரணமாக பயன்படும் அமிலங்களுடன் கலந்து வயிற்றைக் கலக்க ஆரம்பிக்கும். எனவே சாப்பாட்டுக்குப் பின்னர் பழம் சாப்பிடாமல் முன்பு சாப்பிடும்போது அதனுடைய பயன் அதிகம் எம்மைச் சேருகிறது.

அதேபோல பழத்தை அப்படியே சாப்பிடுவதால் முழுமையான நார்ச்சத்தும் எமது உடலுக்குக் கிடைக்கும். சிறு துரும்பும் பல் குத்த உதவுவதுபோல இந்த சின்ன விடயங்களிலும் நாம் கவனம் எடுக்கும்போது நமது உடலின் ஆரோக்கியம் காக்கப்படுகிறது. நீண்ட ஆயுள் காலத்தையும் நாமே நிர்ணயிக்கிறோம் என்பதை மறக்க வேண்டாம்.

பழங்கள் நமது உடல்நலத்தில் மிகப்பெரும் பங்கு வகிக்கின்றன. நோய்வாய்ப்படும் காலங்களில் பழமே மிகவும் பிரதான உணவாக இருக்கிறது. மருத்துவர்கள் இந்தக் காலங்களில் பரிந்துரை செய்வது பழங்களைத் தான்.



# விண்வெளியில் காய்கறித் தோட்டம்

விண்வெளி மையத்தில் காய்கறிகளைப் பயிரிட நாசா விஞ்ஞானிகள் முயற்சித்து வருகின்றனர்.

காய்கறிச் செடிகளை விண்வெளி ஆய்வு மையத்தில் வளர்ப்பதற்காகச் சூரிய வெளிச்சத்தைப் போன்று அறை ஒன்றில் மின் விளக்குகளால் வெளிச்சம், தட்ப வெப்பம் ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்பின்னர் அங்கு சில குறுகிய கால காய்கறிச் செடிகளை வைத்து, அவற்றை வளர்க்கும் பணியை விஞ்ஞானிகள் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறு செய்வதனால் சத்தான சான் விட்சுக்கு தேவையான காய்கறிகள் விண் வெளியிலேயே கிடைக்கும் என்று விஞ் ஞானிகள் நகைச்சுவையாகக் கூறியுள்ளனர்.







# மருந்தாகும் மருதாணி

மருதாணியில் மருத்துவக் குணங்கள் நிறைந்துள்ளன. மருதாணி இலையில் கிருமிநாசினி உள்ளது. கண்ணுக்குத் தெரியாத பல கிருமிகளை அழிக்கக்கூடிய சக்தி உடையது இது.

நகச் சுத்து வராமல் தடுக்கும்.

கை, கால், விரல் நகங்களில் அரைத்துப் பூசி அழகூட்டுவார்கள்.

மருதாணி வேர்ப்பட்டையை அரைத்து காலில் ஆணி இருப்பவர்கள் காலில் பூசி வந்தால் ஆணிக்கால் குணமாகும்.

ஆறாத வாய்ப்புண், அம்மைப்புண் ஆகியவற்றுக்கு இதன் இலையை அரைத்து நீரில் கரைத்து வடித்து வாய் கொப்பளிக்கலாம். அரைத்து அம்மைப் புண்களுக்கு பூசினால் குணமாகும்.




ஆறாத வாய்ப்புண், அம்மைப்புண் ஆகியவற்றுக்கு மருதாணி இலையை அரைத்து நீரில் கரைத்து வடித்து வாய் கொப்பளிக்கலாம்.

# எருமைகளின் உடலில் ஓவியம்

எருமைகளின் உடலில் ஓவியம் வரையும் போட்டியொன்று சீனாவின் யுனான் மாகாணத்தில் கடந்த வாரம் நடைபெற்றது. 8 நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள், ஓவியம் வரையப்பட்ட மாடுகளை இந்தப் போட்டியில் காட்சிப்படுத்தினர். இந்தப் போட்டியில் முதலிடம் பெற்றவருக்கு ஒரு லட்சம் சீன யுவான் பணப்பரிசு வழங்கப்பட்டது.



# பணி இடத்தில் - சபல புத்தி உடைய ஆண்களைச் சமாளிப்பது எப்படி?



பணி இடத்தில் அனைவரும் பெண்களிடம் கண்ணியமாக நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. சில சபலபுத்தி கொண்டவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். அவர்களிடம் இருந்து தப்பிக்கும் கலையை பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டும். சக ஆண் ஊழியர்கள் தொடக்கத்தில் நல்ல மாதிரி பட்டால் கூட அளவுக்கு அதிகமாக அவர்களிடம் பேச வேண்டாம். யாரைப் பற்றியுமே சரியான முடிவுக்கு வர சிறிது காலம் தேவை. அதுவரை பொறுத்திருந்து, பிறகு நட்புப் பாராட்டுவது நல்லது. உங்களுக்கு உங்கள் வேலை மிகவும் தேவையானதாக இருக்கலாம். அந்த வருமானத்தை நம்பித்தான் உங்கள் குடும்பமும், வருங்காலமும் இருக்கிறது என்கிற நிலைகூட இருக்கலாம். ஆனால் இதையெல்லாம் உங்கள் மேலதிகாரியிடம் சொல்லாதீர்கள். நாம் கொஞ்சம் அத்துமீறினாலும், இந்த வேலை இவளுக்கு மிக முக்கியம் என்பதால் ஒத்துப்போகக் கூடும் என்கிற எண்ணம் அவர்கள் மனதில் பதியக்கூடும்.

சொந்தச் சோகங்களை அதிகமாக வெளிப்படுத்தினால் நான் இருக்கிறேன் உனக்கு. கவலைப்படாதே என்கிற போர்வையில் மேலதிகாரி எல்லை மீறப்பார்க்கலாம். உடை விடயத்தில் சுயசிந்தனை இருப்பதில் தவறில்லை. என்றாலும் பொதுவாக ஆடை குறித்த ஆண்களின் எண்ணம் கொஞ்சம் பிற்போக்குத்தனமானதுதான். அதனால் ஆடை விடயத்தில் கவனம் தேவை. அதே சமயம் உடையைவிட முக்கியம் உடல்மொழி. துணிச்சலான பெண்களிடம் வாலாட்டுவதைவிட பயந்து நடுங்கும் பெண்களிடம் எல்லைமீறப் பார்ப்பது சபலக்காரர்களுக்கு எளிது.


பலரும் காரில் செல்லும்போது ஒன்றை மறந்து விடுவார்கள். ஒட்டுநர் ஒருவர் இருக்கிறார் என்பதை மறந்து விட்டு வீட்டின் அந்தரங்கங்களை எல்லாம் பேசிக் கொள்வார்கள். இதேபோல பணி இடத்திலும் ஒரு தவறு நடக்கலாம். தொலைபேசியில் அந்தரங்க விடயங்களைப் பேசும்போது பிறர் கேட்க வாய்ப்பு உண்டு என்பதை மறக்க வேண்டாம்.

எந்த நியாயமான காரணமும் இல்லாமல் மேலதிகாரி உங்களுக்குத் தனிச் சலுகை எதையாவது அளித்தால், அதை உறுதியுடன் மறுத்துவிடுங்கள். எனக்குப் பிறந்த நாள் என்று இனிப்பை தந்தால் மறுப்பது நாகரிகமாக இருக்காது என்கிறீர்களா? வாங்கிக் கொள்ளுங்கள். உடனடியாக உங்கள் துறையிலிருக்கும் பிறரையும் கூப்பிட்டு, அந்த மேலதிகாரி முன்பாகவே, பகிர்ந்து கொள்ளுங்கள்.

சக ஆண் ஊழியர்கள் கிண்டல் செய்யும் வகையில் ஏதாவது கூறினால், உடனே உங்கள் எதிர்ப்பைப் பதிவுசெய்துவிடுங்கள். அதைவிட முக்கியம், நீங்களும் அதுபோன்ற கிண்டல்களைப் பகிர்ந்து கொள்ளாமல் இருப்பது. இவ்வளவு தாராளமாக இருப்பவள், பிறவற்றிலும் தாராளமாக இருப்பாள் என்ற எண்ணம் எழலாம்.

சக பெண் ஊழியர்களிடம் நட்பை வளர்த்துக் கொள்ளுங்கள். சபல ஆண் பணியாளர்களை எதிர்க்க இது உதவும். உங்கள் முழு நம்பிக்கையைப் பெற்ற சக ஊழியர்களும் உங்களுக்கு உதவ முன்வருவர். தனித்தீவாக இருக்காதீர்கள்.


உங்கள் வேலையில் நீங்கள் மிகச் சிறப்பானவராக இருந்து விட்டால், எந்த மேலதிகாரியும் உங்களை அலட்சியப்படுத்திவிடவோ, தவறான கண்ணோட்டத்தில் அணுகவோ முயற்சிக்க மாட்டார்கள். ஏடாகூடமாக நடந்து கொண்டால், ஒரு மிக நல்ல பெண் ஊழியரை இழந்து விடுவோம் என்ற எண்ணமேகூட சில தவறான நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தக்கூடும்.




## உலகின் ஒரேயொரு ரோபோ இசைக்குழு

முற்றிலும் ரோபோக்களைக் கொண்ட இசைக் குழுவொன்று ஜேர்மனியில் நிறுவப்பட்டுள்ளது. கொம்பிரஸர்ஹெட் என பெயரிடப்பட்டுள்ள இந்த இசைக்குழுவில், 5 அடி உயரமான 3 ரோபோக்கள் அங்கம் வகிக்கின்றன. ட்ரம்ஸ், கிட்டார், பாஸ், இசைக்கருவிகளை இசைக்கின்றன. மொஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச அன்ட்ரோய்ட் கண்காட்சியின்போது இந்த ரோபோக்களின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

உலகில் ரோபோக்களை மாத்திரம் அங்கத்தவர்களாகக் கொண்ட ஒரேயொரு இசைக் குழு இதுவாகும். கழிவு உலோகங்கள் மூலம் இந்த ரோபோக்கள் நிர்மாணிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த இசைக்குழுவின் பாடல் யூ ரியூப் இணையத்தளத்தில் 63 லட்சத்துக்கும் அதிகமான தடவை பார்வையிடப்பட்டுள்ளது.



# இணையத்தில் 'பாக்போர்ண்' பயன்பாடு குறித்து எத்தனை பேருக்குத் தெரியும்?






இணையத்தின் முதுகெலும்பு என்று அழைக்கப்படும் 'Backbone' தகவல் பறிமாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இப்போது உள்ள காலகட்டங்கள் அனைத்தும் இணையத்தை மையமாகக் கொண்டு கடந்து வருகின்றன. இதில் பயன்படுத்தப்படும் தகவல் பறிமாற்றத்தை பற்றி எப்போதாவது நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா?

மில்லியன் மக்கள் தொகை கொண்ட இந்திய வாக்காளர் தொகை, அமெரிக்காவின் மக்கள் தொகையை விட மூன்று மடங்கு பெரியது. இந்த வியக்கும் எண்ணை மிஞ்சும் வித்தைதான் ஒரு நொடிக்கு உலகம் முழுவதும் பறிமாற்றப்படும் தகவல்கள். நம்ப முடியாவிட்டாலும் இது தான் உண்மை.

அதாவது 5 ஆண்டுகளுக்கு முன் நொடிக்கு 30 டெரா பைட்டுகள் என்ற இந்த அளவு, கடந்த மாதம் 300 டெரா பைட்டுகளாக அதிகரித்துள்ளன. புரியும்படி சொன்னால் ஒரு டெரா பைட் [illegible]து கிட்டத்தட்ட 100 திரைப்படங்களுக்கு நடரான அளவு. இதன்படி பார்த்தால் 30,000 திரைப்படங்கள் பார்ப்பதற்கான தகவல் பரிமாற்றம் ஒவ்வொரு நொடியும் நடந்தபடி உள்ளது.

இந்த தகவல் பரிமாற்றம் 'backbone' எனப்படும் இணையத்தின் உள்கட்டமைப் பில் உள்ளது. இந்த இணையத்தின் பின்னெலும்பு பல கடல்களையும், மலைகளையும் தாண்டி, பல நாடுகளில் உள்ள இணைய சேவை நிறுவனங்களை இணைக்கிறது.

இந்த நிறுவனங்கள் றூற்றர் (router) மூலமும், பல்வேறு இணைப்பு சாதனங்கள் வழியாகவும் சேவையை வாடிக்கையாளர்களுக்கு கொண்டு சேர்க்கிறது.

இந்த வலுவான பின்னெலும்பை உருவாக்கி வாடிக்கையாளர்களைக் கவர ஃபைபர் ஒப்டிக் கேபிள் மூலம் ஃபேஸ்புக் நிறுவனம் ஐரோப்பாவிலும், கடல் வழியாக இந்தியா உட்பட ஆசிய நாடுகளிலும் தனது நெட்வேர்க்கை கட்டமைக்கத் திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது.

அதேபோல் இந்த நிறுவனங்களில் குவிந்து கிடக்கும் பிரைவசி மற்றும் தனிப்பட்ட தகவல்கள் பற்றிய விழிப்புணர்வு மட்டுமல்லாமல், பாதுகாப்பாக இத்தகைய தகவல்களை மற்றவர்களிடம் பரிமாறும் பல தொழில்நுட்பம் வந்து விட்டன. இருப்பினும் இவை இணையத்தில் இயங்க உட்கட்டமைப்பும் பின்னெலும்பும் தேவைப்படுகின்றன.

இதற்காக புதுமையான மற்றும் புரட்சிகரமான முயற்சி ஒன்று எடுக்கப்பட்டு வருகிறது. அதன் பெயர் (mesh) வலைப் பின்னல் நெட்வேர்க்.

NIEI (national internet exchange of india)- என்ற இந்த அமைப்பானது இந்தியாவின் இணைய வ்சதிக்கு முதுகெலும்பாய் உள்ளது. எமக்குத் தேவைப்படும் இணையம் மற்றும் இணையம் சார்ந்த வசதிகளை ISP (Internet service provider) மூலமாக இந்த அமைப்பு எம்மிடம் கொண்டு வந்து சேர்க்கிறது.



# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த

# இயல், இசை, நாடக விழா

"கலாபூஷணம்"
இராசையா ஸ்ரீதரன்.








நீராவியடி இலங்கை வேந்தன் இசைக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற இயல், இசை, நாடக விழா ஒரு சிறப்பான பெரு விழாவாகும். சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்த இந்த நல்விழா யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். முத்தமிழும் பரிணமித்த ஒரு முத்தான விழாவாகும். இதனை எமக்கு வழங்கிய கலைஞர் இலங்கை வேந்தன் பெரியதொரு சாதனையாளர் என்றுதான் சொல்ல வேண்டும்.

யாழ்ப்பாணத்திலும் பல்வேறு துறை சார்ந்த கலைஞர்கள் இருக்கின்றார்கள் என்பதை எடுத்துக் காட்டிய இந்தக் கலை விழா யாழ்.ரசிகப் பெருமக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியதோடு ஒரு நல்ல மனத்திருப்தியையும் அளித்திருந்தது.

ஐந்து தினங்களுக்கு நடைபெற்ற இந்த இயல், இசை, நாடக விழா ஒவ்வொரு நாளும் வெவ்வேறு வகையில் பலவித சிறப்பம்சங்களைக் கொண்டிருந்தது எனில் மிகையாகாது. இயல், இசை, நாடகம் மூலம் பல்வேறு வகையில் இன்ப விருந்தளித்த இந்த இனிய விழா யாழ்.மக்களுக்குக் கலைவிருந்தாக அமைந்து கண்ணுக்கினிய காட்சிகளாகவும் செவிக்கினிய விருந்தும் போன்று ஆனந்தத்தை அள்ளிக்கொடுத்தது.

விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகள் லலீசன் தலைமையில் மிகச் சிறப்பாக ஆரம்பமாகின. நாச்சிமார் கோயிலடி இராஜேஸ்வரி குழுவினர் வழங்கிய மங்கல இசை தேன் போன்று இனித்து வந்திருந்த அனைவரது உள்ளங்களையும் கொள்ளை கொண்டிருந்தோடு எல்லோரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி வானில் சிறகடித்துப் பறப்பது போன்ற ஓர் உணர்வையும் தந்தது. சைவ வித்தியா விருத்திச் சங்க மாணவிகளின் வரவேற்பு நடனம், செல்வி. பானுஜாவின் இசையரங்கம், மதியழகனின் வில்லிசை, ஏழிசை மாணவிகளின் நாட்டியார்ப்பணம் என்று பலவும் கலகலப்பாக இருந்தன. இறுதி நிகழ்வாக நடைபெற்ற நாட்டார் வழக்கியல் கழகத்தினரின் "பூதத்தம்பி" இசை நாடகம் மிகச் சிறப்பாக அரங்கேறி ரசிகர்களின் பெருத்த கர கோஷத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் நாளன்று நாச்சிமார் கோயிலடி சபேசன் குழுவினருடைய நாதஸ்வர கானம், நக்கீரனின் புல்லாங்குழல், புஷ்பாலயநடனசபா மாணவியரின் அபிநயசதங்கை அனைத்துமே மிகச் சிறப்பாக நடைபெற்றன.

பேராசிரியர் வேல் நம்பி நடுவராக அமைந்த பட்டிமன்றம் நல்ல கருத்தாழம் மிக்க சொல்லாடலாக இருந்ததோடு நாட்டு மக்களின் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்துவனவாகவும் அமைந்திருந்தது. நவீனத்துவம் துணை போனதா? இல்லையா? என்பதை மிக நன்றாக அலசி ஆராய்ந்தார்கள். ஒரு "சபாஷ்" போடத்தக்க நல்ல இயல் நிகழ்ச்சி இது.

இறுதி நிகழ்ச்சியாக அமைந்த வீரபாண்டிய கட்டப் பொம்மன் நாடகம், தென்மோடி நாட்டுக்கூத்து ரசிகர்களை எங்கோ தொலை தூரத்துக்கு அழைத்துச் சென்றது போன்றிருந்தது. ஒரே சப்தமாக இருந்தது: உரையாடல்கள். நாடகம் பார்ப்பவர்களுக்கு புரிந்துகொள்ள முடியாதனவாய் அமைந்திருந்தன. பார்த்துக் கொண்டிருந்தோ மேதவிர நாடகத்தோடு ஒன்றிக்கவில்லை. நாடகம் சுமாராக இருந்தது. ஆனால் கட்டப் பொம்மனை நேரில் பார்த்தது போன்ற ஓர் இனிய உணர்வைத் தந்தது. இவ்வளவு சிறப்புற நடந்த நிகழ்வில் இது ஒரு குறையாகக் காணப்பட்டது. மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் நாச்சிமார் கோயிலடி பிரபா குழுவினரின் மங்கல இசையுடன் ஆரம்பமாயின. பின்பு தவநாதன் றொபேட் வழங்கிய இசை மிக நன்றாக அமைந்திருந்தது.

பரத கலாகேந்திர மாணவிகளின் நாட்டியாஞ்சலி என்றுமே இல்லாத் வகையில் மிக நன்றாக அமைந்து கண்ணுக்கு விருந்தளித்தது. அடுத்து நடைபெற்ற வி.அனிருத்தனின் "கிண்கிணிநாதம்" பிரமாதம். ரசிகர்கள் ஆடாமல் அசையாமல் இருந்து ரசித்துக்கொண்டிருந்தார்கள். இறுதி நிகழ்ச்சியாக நடைபெற்ற கலைஞர் தைரியநாதன் வழங்கிய மயான காண்டம். ரசிகர்களுக்கு அரிச்சந்திரனை நேரிலே பார்த்த மாதிரி இருந்தது.

அவரது நடிப்பு மிக நன்றாக அமைந்திருந்தது. அருமையான ஒரு நாடகம் பார்த்த மனத் திருப்தியை அளித்தது.

நான்காம் நாள் நிகழ்ச்சிகள் நாச்சிமார்கோயிலடி சுமன் குழுவினரின் நாதஸ்வர இசையுடன் ஆரம்பமாகின. மங்கலகரமான மங்கள இசை காதுகளை நிறைத்தது. அதையடுத்து இடம் பெற்ற சைவச் சிறுவர் இல்ல மாணவியரின் தெலுங்கு நடனம் நல்ல ஒளி அமைப்பில் பிரகாசமாக அமைந்து ரசிகப் பெருமக்களின் கண்ணுக்கு விருந்தாக இருந்தது.

"சாரங்கம்" இசை மன்ற வாசஸ்பதி ரஜீந்திரனின் பாட்டு அரங்கத்திலிருந்தவர்களை சங்கீத மழையில் நனைய வைத்தது. "சாகித்திய வீணாலய" திருமதி விதுஷா கோபி கிருஷ்ணாவின் விரலிசை மிக நன்றாக அமைந்திருந்தது. உரும்பிராய் கலைக்கோயில் மாணவிகள் வழங்கிய நாட்டிய நிகழ்வு ரசிகர்களின் உள்ளங் கவர்ந்து நன்றாக இருந்தது. இறுதியாக நடைபெற்ற காத்தவராயன் கூத்து வந்திருந்தவர்களுக்கு மிக மிகழ்ச்சியைக் கொடுத்தது. இதில் சின்னானுக்கு நடித்த கலைஞர் தனது பாத்திரத்தைத் திறம்படச் செய்து கரகோஷம் பெற்றுக் கொண்டார்.

இந்த விழாவின் ஐந்தாம் நாள் நிகழ்ச்சிகள் பிச்சையப்பா ரஜிந்திரன் குழுவினரின் மங்கல இசையுடன் மங்களகரமாக ஆரம்பமாயின. நாதமழையில் நனைந்த ரசிகர்கள் மிகவும் சந்தோஷமாக இருந்து ரசித்து ருசித்துச் சுவைத்தனர். சைவச் சிறுவர் இல்ல மாணவிகள் வழங்கிய கூடிவிளையாடு பாப்பா மிகவும் புதுமையாக இருந்தது.

கலைஞர் கண்ணதாசனின் ஏற்பாட்டில் நிகழ்ந்த தாளவாத்தியக் கச்சேரி மிகப் பிரமாதம். கொன்னக்கோல் நல்லபடி அமைந்து ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றிருந்தது. நீண்ட நாள்களுக்குப் பின்பு இப்படி ஒரு நிகழ்ச்சி பார்த்தோம்; ரசித்தோம்; ஒரே கரகோஷத்துடன் ஆரவாரம்செய்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். கொக்குவில் கலாபவன மாணவர்களின் "நர்த்தன நிவேதனம்" பிரமாதம். ரசிகர்கள் கண்கொட்டாமல் மேடையையே பார்த்தபடி அமர்ந்திருந்தனர். கடைசி நிகழ்ச்சியாக இடம்பெற்ற "குவேனி" இசை நாடகம் எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் சிறப்பாக இருந்தது.

எம்மைப் பொறுத்தவரை இந்த இயல், இசை நாடக விழா மிகச் சிறந்த ஒரு கலைப் படைப்பு. நீண்ட காலத்தின் பின்பு யாழ்ப்பாணத்திலும் பல கலைஞர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு இந்த விழா ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருந்தது. எமது இடத்திலும் சிறந்த கலைஞர்கள் பலர் இருக்கின்றனர். அவர்களும் கலை யர்ப்பணம் செய்கின்றார்கள் என்னும் ஓர் உண்மை தெளிவாகப் புலப்பட்டது. இந்த விழாவை ஏற்பாடு செய்த இலங்கை வேந் தன் உண் மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர். இவருக்கு யாழ்.மக்களும் நன்றி கூறுகின்றார்கள்.





## சிந்திக்க.....

- எவரேனும் திட்டிவிட்டால் உடனே சோகமாகி விடுவதும், சகல வேலைகளையும் அப்படி அப்படியே போட்டுவிட்டுச் சோம்பி விடுவதும், முடிந்தால் தனித்து அழுவதும், இப்படி அநியாயமாகத் திட்டி விட்டார்களே என்று பொருமுவதும் எம்மில் பலரது இயல்பாய் இருந்து வருகிறது. ஒருவர் திட்டி விட்டால் அதைப் பற்றிக் கொஞ்ச நேரம் சிந்தித்து விட்டு அப்புறம் மறந்து விட்டு அடுத்த வேலையைப் பார்க்கக் கற்றுக் கொள்வது அவசியம்.
- ஒருவர் திட்டினால் நாம் தவறாக நடந்து கொண்டோமா என எம்மை நாமே மனச்சாட்சியின் துணையுடன் கேட்டுக் கொள்ள வேண்டும். ஆம் என்றால் அவர் திட்டியது சரிதான் என எம்மை நாமே சமாதானம் செய்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் அது உண்மை இல்லாத போது நாம் ஏன் அதைப் பற்றிக் கவலைப் பட வேண்டும் என்று சமாதானம் செய்து கொள்ள வேண்டும்.
- முன்பின் தெரியாத ஒருவர் திட்டினால் எங்களது அருமை தெரியாதவர் என அதைப் புறக்கணிக்க வேண்டும். மிக வேண்டியவர் திட்டினால் அதன் பின்னே மறைந்திருக்கும் அக்கறையை பெரிது படுத்திப் பார்க்க வேண்டும். தவிர திட்டிய பாணியையும், திட்டப் பயன்படுத்திய வார்த்தைகளையும் பெரிதுபடுத்திக் கொண்டி ருக்கக் கூடாது.

# ஏமாற்றாதே, ஏமாறாதே

கபாலிபுரம் என்ற மாநகரில் கபிலன் என்ற ஓவியன் இருந்தான். ஓவியம் வரைவதில் மிகுந்த திறமை உடையவன். யாரைப் பார்த்தாலும் அவர்களை அப்படியே ஓவியம் வரைந்து விடுவான். ஓவியத்திற்கும் அந்த ஆளுக்கும் சிறு வேறுபாடு கண்டுபிடிக்க முடியாது. அவ்வளவு பொருத்தமாக ஓவியம் வரைவான்.

பணக்காரர்களை ஓவியமாக வரைந்து கொடுப்பான்.. அவர்களும் அந்த ஓவியத்தை நல்ல விலை கொடுத்து வாங்குவர். அதைத் தங்கள் வீட்டில் அழகாக மாட்டி வைப்பர்.

அந்த ஊரில் ராஜன் என்ற செல்வன் இருந்தான். யாருக்கும் எதையும் தராத கருமி அவன். அவனுடைய பிறந்த நாள் விழா வந்தது. நிறைய உறவினர்கள் விழாவுக்கு வந்திருந்தனர்.

ராஜனின் இயல்பை அறியாத கபிலன் அந்த விழாவிற்குச் சென்றான். ராஜனை வணங்கிய அவன், ஐயா! நான் சிறந்த ஓவியன். உங்களை அப்படியே ஓவியமாக வரைந்து தருகிறேன். உங்களையே நேரில் பார்ப்பது போல இருக்கும். அதை வரவேற்பு அறையில் அழகாக மாட்டி வைக்கலாம். அந்த ஓவியத்துக்கு எவ்வளவு பணம் தருவீர்கள்? என்று கேட்டான்.

இப்போது இங்குள்ள உறவினர்கள் என்னைப் பெருமையாக நினைக்க வேண்டும். பிறகு பணம் தராமல் இவனை ஏமாற்றலாம் என்று நினைத்தான் ராஜன்.

'நீ வரையும் ஓவியம் என்னைப் போலவே இருக்க வேண்டும். அப்படி இருந்தால் ஆயிரம் பணம் தருகிறேன். இல்லாவிட்டால் பணம் எதுவும் தரமாட்டேன்' என்றான்.'உங்களைப்போலவே ஓவியம் வரைந்து ஒரு வாரத்தில் தருகிறேன். குறை ஏதும் இருந்தால் பணம் தர வேண்டாம்' என்றான் ஓவியன். ராஜனைப் போலவே ஓவியம் வரைந்து எடுத்து வந்தான். அந்த ஓவியத்தை மேலும் கீழும் பார்த் தான் ராஜன்.

இந்த ஓவியம் என்னைப் போலவா இருக்கிறது? நீயே பார். இவ் வளவு நரையா என் தலையில் உள்ளது? என்னைக் கிழவனாக்கி விட்டாயே... நான் இப்போது இருப்பது போல இளமையாக ஓவியத்தை வரைந்து கொண்டு வா, என்றான்.

அந்த ஓவியத்தை எடுத்துச் சென்றான் கபிலன். அதில் சில மாற்றங்கள் செய்தான். அந்த ஓவியத்தை மீண்டும் ராஜனிடம் கொண்டு வந்தான்.

என்னைத் தானே ஓவியம் வரையச் சொன்னேன். நீ எவனோ ஓர் இளைஞனை வரைந்து உள்ளாயே... இளமையும் முதுமையும் கலந்தது போல உன்னால் வரைய முடியாதா? என்று கேட்டான். அந்த ஓவியத்தில் மேலும் சில மாற்றங்களைச் செய்தான் கபிலன். இந்த ஓவிய மும் என்னைப் போல இல்லை. வேறு ஓவியம் வரைந்து கொண்டு வா, என்றான் ராஜன். எப்படி வரைந்தாலும் இவன் ஓவி யத்தை வாங்கப் போவது இல்லை. ஏதே னும் குறை சொல்லித் திருப்பி அனுப்பப் போகிறான். என்ன செய்வது? என்று சிந்தித்தான் கபிலன்.

பீர்பாலிடம் வந்து நடந்ததை சொன்னான், 'அந்தச் செல்வன் ஓவியம் வாங்காமல் என்னை ஏமாற்றுகிறான். என் உழைப்பிற்கு நீங்கள்தான் ஊதியம் வாங்கித் தர வேண்டும்' என்று வேண்டினான். ராஜனை வரவழைத்தார் பீர்பால்.

ஏன் இந்த ஓவியனை ஏமாற்ற நினைக்கிறீர். பலமுறை திருத்தம் செய்தும் ஓவியத்தை வாங்க மறுக்கிறீராமே? என்று கேட்டார். 'அமைச்சரே! நான் யாரையும் ஏமாற்றவில்லை. என்னைப் போல ஓவியம் வரைந்து தா. ஆயிரம் பணம் தருகிறேன் என்று இவனிடம் சொன்னேன். இவன். வரைந்த ஓவியம் என்னைப் போல இல்லை. அதனால்தான் பணம் தரவில்லை. என்னைப் போலவே ஓவியம் வரைந்து தரச் சொல்லுங்கள். ஆயிரம் ரூபா பணத்துக்குப் பதில் இரண்டாயிரமே தருகிறேன், என்றான் ராஜன்.

ஓவியம் என்றாலே சிறு சிறு குறைகள் இருக்கத்தானே செய்யும். இது உங்களுக்குத் தெரியாதா? என்று கேட்டார் பீர்பால்.

அதெல்லாம் எனக்குத் தெரியாது. என்னைப் போலவே ஓவியம் வரைந்து தரச் சொல்லுங்கள். இரண்டு பங்கு பணம் தருகிறேன். குறை இருந்தால் ஒரு பணமும் தரமாட்டேன், என்று அடாவடியாகப் பேசினான் அவன்.

ஒரு வாரம் சென்று வாருங்கள். உங் களைப் போலவே ஓவியம் இங்கு இருக்கும். அதில் குறை இருந்தால் பணம் தர வேண்டாம், என்றார் பீர்பால்.

உங்களைப் போலவே வரையப்பட்ட ஓவியம் இது. திரைச் சீலையால் மூடப்பட்டுள்ளது. சீலையை விலக்கிப் பாருங்கள். சிறு குறையும் உங்களால் கண்டு பிடிக்க முடி யாது, என்றார். எப்படியும் வரைந்து இருக்கட்டும். குறை கண்டுபிடித்து விடலாம் என்று திரையை விலக்கினான் அவன். அங்கே அவனைப் போலவே ஓவியம் இருந்தது. ஆனால், அந்த ஓவியம் அசைந்தது; கண்களை இமைத்தது. அது ஓவியம் அல்ல. எதிரே உள்ளவர் வடி வத்தை அப்படியே காட்டும் நிலைக்கண்ணாடி.

அந்த ஓவியத்திலும் எப்படியும் குறை கண்டு பிடித்து பணம் தராமல் தப்பிக்கலாம் என்று புறப்பட்டான் ராஜன். நீ ஓவியம் ஏதும் வரைய வேண்டாம். அடுத்த வாரம் இங்கு வா. பணத்துடன் செல்லலாம், என்றார். ஒரு வாரம் சென்றது. பீர்பாலின் மாளிகைக்கு ஓவியன் முதலில் வந்தான். பிறகு ராஜன் வந்தான்.

உங்களைப் போலவே வரையப்பட்ட ஓவியம் இது. திரைச் சீலையால் மூடப்பட்டுள்ளது. சீலையை விலக்கிப் பாருங்கள். சிறு குறையும் உங்களால் கண்டு பிடிக்க முடியாது. என்றார் பீர்பால் எப்படியும் வரைந்து இருக் கட்டும். குறை கண்டுபிடித்து விடலாம் என்று திரையை விலக்கினான் அவன்.



அங்கே அவனைப் போலவே ஓவியம் இருந்தது. ஆனால், அந்த ஓவியம் அசைந்தது; கண்களை இமைத்தது. அது ஓவியம் அல்ல. எதிரே உள்ளவர் வடி வத்தை அப் படியே காட்டும் நிலைக்கண்ணாடி. அதில் தனது வடிவம் தெரிகிறது என்பது அவனுக் குப் புரிந்தது. அமைச்சரே! இது ஓவியம் அல்ல. முகம் பார்க்கும் கண்ணாடி. என்றான் அவன்.

கண்ணாடியில்தான் எமது வடிவம் அப்படியே தெரியும். குறை எதுவும் காணமுடியாது. ஓவியம் என்றால் குறைகள் இருக்கத்தான் செய்யும். இந்தக் கண்ணாடியை எடுத்துச் செல்லுங்கள். ஓவியனுக்கு இரண்டாயிரம் பணம் தாருங்கள், என்றார் பீர்பால். அமைச்சரே! இது நியாயம் அல்ல! என்றான் அவன். நியாயத்தைப் பற்றி நீங்கள் பேசாதீர்கள். குறையே இல்லாமல் யாராலும் ஓவியம் வரைய முடியாது. .இதை அறிந்த நீங்கள் என்ன செய்தீர்கள்? இந்த ஓவியங்களை எத்தனை முறை வரையச் சொன்னீர்கள்? எமது வடிவம் கண்ணாடியில்தான் குறை இன்றித் தெரியும். இரண்டாயிரம் பணம் தந்து இதை வாங்கிச் செல்லுங்கள். இல்லையேல் ஏமாற்ற முயன்றதற்குக் கடுமையான தண்டனை கிடைக்கும், என்றார் பீர்பால்.

ஆயிரம் பணம் கொடுத்து அந்த ஓவியத்தையே வாங்கி இருக்கலாம்.

வீட்டில் அழகாக மாட்டி வைத்து இருக்கலாம். எல்லாரும் பார்த்து மகிழ்ந்து இருப்பர். பத்துப் பணம் பெறாத கண்ணாடி இது. இதற்கு இரண்டா யிரம் பணம் தர வேண்டி வந்ததே என்று தன்னையே நொந்து கொண்டான் அவன். ஓவியனிடம் இரண்டாயிரம் பணம் தந்தான். அந்தக் கண்ணாடியை எடுத்துக் கொண்டு வருத்தத்துடன் சென்றான் அந்தப் பணக்காரன்.

## பொது அறிவு

- பூகம்பத்தை அளவிடப்பயன்படுவது - றிச்ரர் அளவு கோல்
- கூட்டல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் - பஸ்கல்
- மின்காந்தக் கதிர்களைக் கண்டறிந்தவர் - ஹீனரிச் ஹேரட்ஸ்
- எக்ஸ் கதிர்களைக் கண்டறிந்தவர் - வில்கெம் ரொண்ட் ஜென்
- அகச் சிவப்புக் கதிர் வீச்சைக் கண்டறிந்தவர் - வில்லியம் ஹேர்சல்
- "டொல்பி ஸ்டீரியா" ஒலி அமைப்பைக் கண்டறிந்தவர் - டொல்பி
- வேதிப் பொருள்களின் அரசன் - கந்தக அமிலம்
- துரித வெள்ளி - இரசம்
- புகையில் உள்ள நச்சுத் தன்மையான பொருள் - நிக்கொட்டின்
- செயற்கை மழையைக் கண்டறிந்தவர் - எபலின்லாமு

ச.ஐஸ்வர்யா, தரம்-8கே,
ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்.




ஆர்ட்டிக் வட்டத்தில் "லேப் லேண்ட்" என்று ஒரு பகுதி இருக்கிறது. இது வடநோர்வே, ஸ்வீடன், பின்லாந்து வரை பரவி இருக்கிறது.


இங்கு 73 நாள்கள் மே மாதம் மத்தியிலிருந்து ஜூலை மாதம் முடியும் வரை 24 மணி நேரமும் இந்த "லேட் லேண்ட்" பகுதியில் இரவில் சூரியன் ஒளி எரிந்து கொண்டிருக்கும். இது ஓர் அற்புதக் காட்சியாகும்.

ஸ்ரீ.சுகிர்தன், தரம்-10,
கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

## மத்திய கால உலக அதிசயங்கள்

- றோமிலுள்ள கொலேசியம்
- அலெக்ஸ் சாந்திரியாவின் குகைகள்
- சீனப் பெருஞ்சுவர்
- கற்களாலான வட்டங்கள்
- போர்சீலியன் கோபுரம்
- பைசாநகர கோபுரம்
- கொன்சாந்தி நோபிளிலுள்ள ஹசியா சோபியா.

கு.தர்சன், தரம்-10டி.
கிளிநொச்சி இந்துக் கல்லூரி.



# மனிதன் என்னும் விலங்கு



சாள்ஸ் டார்வின் ஓர் இயற்கை விஞ்ஞானி. ஆய்வு செய்வதற்காக எச்.எம்.எஸ். பிகேல் என்ற கப்பலில் பிரிட்டனை விட்டுச் சென்றார். கிழக்கிந்தியத் தீவுகளில் இருக்கும்போது அவர் மூன்று அபூர்வமான பூச்சிகளைக் காண நேரிட்டது. அவற்றில் இரண்டை இரு கைகளிலும் பிடித்துக் கொண்டார். மூன்றாவதைப் பிடிக்க வேண்டும்.

ஒரு யோசனை தோன்றியது. ஒரு பூச்சியை வாயால் கௌவிக் கொண்டு, மற்றொன்றையும் பிடித்தார். அவருக்கு உடல் உபாதை ஏற்பட்டது. கவலைப்படவில்லை. பிடித்தவற்றை பத்திரமாக ஆய்வுக்கூடத்துக்கு எடுத்துச் சென்றார். இதேபோன்று அவர் உலகம் முழுவதிலும் சுற்றி ஏராளமான விலங்குகள், தாவரங்கள் ஆகியவற்றைச் சேகரித்தார்.

அவை அனைத்தையும் பிரிட்டனில் உள்ள ஆய்வுகூடத்தில் சேர்த்து, அவற்றை வகைப்படுத்த வேண்டும். ஆனால் அவர் உயிரியல் படித்ததில்லை. 'அவர் ஒரு மதபோதகருக்கான கல்வியையே பெற்றிருந்தார்.

இருப்பினும், தாவரவியல், விலங்கியல் ஆகியவற்றைக் கற்று, கிடைத்த விவரங்களை ஒழுங்கு செய்தார். பலரது ஆலோசனைகளைக் கேட்டார்.

நீண்டகால உழைப்புக்குப் பின்னர் அவருடைய ஆய்வு முடிவுகளை நூல்களாக எழுதி வெளியிட்டார். அவர் எழுதிய நூல்கள் குறைவே. அதில் முக்கியமானவை 'உயிரினங்களின் தோற்றம் என்பதும்' மனிதனின் தோற்றம்' என்பதும் ஆகும். இந்த நூல்கள் உலக சிந்தனை வரலாற்றை மாற்றி அமைத்த நூல்கள் ஆகும்.

முதலில் வீட்டு விலங்குகளில் ஏற்படும் மாறுதல்கள் பற்றி டார்வின் ஆராய்ந்தார். இவை செயற்கையான தேர்வு மூலம் பல மாறுதல்களை அடைகின்றன.

உதாரணமாக காட்டு நாய்களிடம் இல்லாத பண்புகள் வீட்டு நாய்களிடம் உள்ளன. அவற்றை மனிதன் செயற்கையாகத் தெரிவு செய்ததன் மூலம் ஏற்பட்டவை என்று அவர் விளக்கினார்.

அதேபோன்று இயற்கையில் தெரிவு இடம் பெறுகிறது. சூழ்நிலை மாறும்போது அதன் தாக்கம் காரணமாக விலங்குகளும், தாவரங்களும் மாறுகின்றன. மாற முடியாதவை அழிகின்றன. மாறக் கூடியவை சூழ்நிலைக்கு ஏற்ப அனுசரித்து தங்கள் இனத்தைத் தொடர்ந்து பெருக்குகின்றன.

இதில் தகுதியுள்ளவை தாக்குப்பிடிக்கின்றன. தகுதியற்றவை படிப்படியாக அழிகின்றன. இன்றைக்குக்கூட, சூழ்நிலை மாறுதலுக்குத் தாக்குப்பிடிக்க முடியாத எத்தனையோ உயிரினங்கள் அழிவதை நாம் காண்கிறோம். இது டார்வினது விளக்கம். உயிரினங்களின் தோற்றத்தை அவர் இயற்கைத் தெரிவு என்ற கொள்கை அடிப்படையில் விளக்கினார்.

இந்த முறையைப் பின்பற்றி மனிதனது தோற்றத்தை அவர் விளக்கினார். மனிதனும் மற்ற விலங்குகளைப் போன்றவைதான். விலங்கு உலகில் ஏற்பட்ட மாறுதல் காரணமாகத் தோன்றியவன் தான் மனிதன் என்று அவர் கூறினார். சாதாரணமாகக் கூறினால் குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்று கூறுவார்கள். குரங்கு இனத்தைச் சேர்ந்த ஏதோ ஒரு வகைக் குரங்கு பல்வேறு மாறுதல்களுக்கு உள்ளாகி கடைசியில் மனித வடிவம் பெற்றது என்று அவர் கூறுகிறார்.

சூழ்நிலை மாறுபாடு, அது உடலில் ஏற்படுத்தும் மாறுதல், தேவையான பண்புகள் நிலை பெறுதல், தேவை மற்றவை மறைதல் அல்லது அழிதல், தேவையானவை மரபணுக்களில் இடம்பெறுதல் போன்ற உயிரியல் செயல் முறை மூலம் இது இடம் பெறுகிறது என்று அவர் கூறினார்.

டார்வின் வெளியிட்ட கொள்கையை உலகம் அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை. எல்லா விஞ்ஞானக் கொள்கைகளையும் எதிர்த்ததுபோல அவரது கொள்கையையும் அறிஞர் உலகம் எதிர்த்தது. குறிப்பாக மதவாதிகள் எதிர்த்தனர். அவர்களைப் பொறுத்தமட்டிலும் மனிதனைப் படைத்தவர் கடவுள். சகல ஜீவராசிகளையும் படைத்தவர் கடவுள். இக் கொள்கையை ஏற்றுக் கொண்டால் நம்பிக்கை சார்ந்த அவர்களது கொள்கைக்குத் தோல்வி ஏற்படும். எனவே டார்வினுக்கு நெருக்கடிகளைக் கொடுத்தனர்.

ஆனால் டார்வினைப் பல விஞ்ஞானிகள் ஆதரித்தனர். அவர்களில் ஏர்னஸ்ட் ஹெக்கல் என்பவர் ஒருவர்.

டார்வினின் கொள்கையைப் பரப்புவதற்கு அவர் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார். டார்வின் கொள்கை வெற்றி பெற்றது இன்றைக்கு அது விரிவாக்கப்பட்டுள்ளது.

# பார்வையற்றவர்களின் காவலனாக விளங்கிய அமரர் மருத்துவர் நடராஜா

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று"

என்கின்ற வள்ளுவரின் வாக்குக்கமைய இவ் வையகத்தில் வாழ்ந்த மகான் அமரர் மருத்துவர் கந்தப்பு நடராஜா.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சுழிபுரம் - மூளாய் கிராமத்தில் மருத்துவராக - சமூகப் பற்றாளனாக - ஆன்மிக வாதியாக - ஏழைகளின் தோழனாக வாழ்ந்த அந்தப் பெரியார் கடந்த 28.04.2014 இல் தமது 85 ஆவது அகவையில் இறையடி சேர்ந்தார்.

இவர் மாத்தளை, அனுராதபுரம், கம்பளை, கல்முனை, சங்கானை ஆகிய இடங்களிலுள்ள அரச மருத்துவமனைகளில் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றியுள்ளார்.

மேலும் அவரது வாழ்நாளில் பார்வையற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்பது அவரது உள்ளார்ந்த சிந்தனையாக இருந்து வந்தது.

அந்தச் சிந்தனைக்கு மெருகூட்டி அதற்கான கருத்திட்டங்களை முன்மொழிந்து செயலாற்றி பலரது நல்வாழ்வுக்கு வித்திட்ட செம்மல் என்றால் அவர் மருத்துவர் நடராஜா தான்.

மேலும் எப்போதும் ஏழை - எளியவர்களுக்கு எவ்விதத்திலும் உதவிட வேண்டும் என்ற எண்ணமும் - சிந்தனையையும் கொண்டதனால் அவர் ஏழைகளின் தோழன் எனவும் வர்ணிக்கப்பட்டவர்.

மேலும் அவரது பிள்ளைகளும் அவரைப் போன்று மருத்துவர்களாகவும் நிர்வாகிகளாகவும் விளங்குகின்றனர். ஏனையவர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

அமரர் நடராஜா வாழ்ந்த முறைமை இன்றைய இள்ம் சந்ததியினருக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகும். தனது தொழில்சார் பணிகளை எவ்வளவு நேசித்தாரோ அதே அளவுக்கு தனது குடும்பத்தாரிடமும் மிகவும் அன்புள்ளவராக இருந்தமை சிறப்பம்சமாகும்.

செ.ரமேஷ்

## நீத்தார் நயப்புரை

# சைவ சமயத்தின் காவலர்




சிவநெறிச் செல்வர், சிவத்தமிழ் வித்தகர், புராணபடன வித்தகர், பௌராணிக சிரோன்மணி, ஆறாவது குரவர், கலா பூஷணம், சிவமயச் செம்மல், சிவாகம தீர்க்க தரிசி, வானொலிக் கலைஞர் என பலவாறு போற்றி வணங்கப்பட்ட ஒப்புரவாளர் ஏழாலை சிவசண்முகவடிவேல் ஐயா அவர்களின் அமரத்துவம், சைவ சமயத்துக்கும், சிவத் தமிழ் உலகத்துக்கும் சொல்லொணாத் துயரத்தை வரவழைத்துள்ளது. ஆன்மிகத்தை நலிய விடாது, மெலியவோ நோகவோ விடாது, ஆணித்தரமாக உரத்துச் சொன்ன அட்சய வாதியாகவும், இப்படித்தான் இருக்க வேண்டுமென வாழ்ந்து காட்டிய ஆன்மிக வாதியாகவும் அன்னார் திகழ்ந்துள்ளார். சிவாம்ச விழுமியங்களான, வேட்டி, சால்வை, உருத்திராக்கம், திருநீறு, சந்தனம், சிவாயநம, அரோகரா நமபார்வதி- பதயே சரணம் என எல்லாமே அவன் செயலாக, பிரம்மச்சாரிய வாழ்வினையே தர்மமாகப் பேணிய பெருந்தகையாவார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், குமாரசாமிப் புலவர், அருட்கவி விநாசித்தம்பி வரிசையில் சிவத்திரு சிவசண்முகவடிவேல் அவர்களது சிவத்தொண்டுகள் வரலாற்றில் இடம்பெறக் கூடியவையாகும். கதாப்பிரசங்கம், புராணபடனம், திருமுறை ஓதுதல், பஜனை பாடுதல், நவசந்திப் பண்பாடுதல், திருவாசகமுற்றோதல், திருமந்திர பாராயணம், சிவபூஜை செய்தல், சமய தீட்சை அனுட்டானங்களைப் பேணுதல், சிவபுராண, கந்தபுராண வழியொழுகுதல், தான தர்மங்களில் பங்கு கொண்டு அறமாகி வாழ்ந்து காட்டுதல் போன்ற இன்னோரன்ன சிவானுப சாராம்ச விழுமியமே இலக்காகத் தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்ட திருவருட் செல்வராவார்.

மேலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், சைவசமயத்தையும் சரி, ஏனைய மதங்களையும் சரி பதம்கெட வைத்த இருமுகத்தோற்றம் இவரிடம் இருந்ததில்லை. எதையும் வெளிப்படையாகவே பேசி விசுவாசிக்கின்ற பண்பாடு இவரது தனித்தன்மையாக இருந்தது. உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுகின்ற பக்குவமற்ற நிலையில் இவர் என்றுமே அகப்பட்டதில்லை. ஆதலால் இவரது உடைமையெல்லாமே சிவப்பிரம்மமாகியது. வாகனங்களோ, இடாம்பீகமோ, கட்டான நடை,உடை, பாவனைகளோ, பதவிகளோ, பட்டங்களோ, [illegible]ராசையோ என்று ஏதுவுமில்லாமல் மிக மிக எளிமையாக, மிக மிக [illegible]ர்த்தியாக, 'சிவ சிவ' என்று தான் வாழும் சமூகத்தையே ஒப்புரவ[illegible]கிய சிவாகம சுகானுபவர் சிவசண்முகவடிவேல் ஐயா அவர்கள[illegible]ர்.

எமது சமூகத்தில் வாழும் பலர் ப[illegible]விகளோடு, உன்னதமான வசதிகளோடும், மேடைகளோடு சமயத்[illegible] வளர்த்து விடலாம் என்று கருதுகிறார்கள். இவரோ ஆத்மஜோதி மு[illegible]தையா அவர்களோடு இணைந்து வலி. வடக்கிலுள்ள 224 சைவ[illegible]யக் கோயில்[illegible]வித [illegible] பார்க்காமல், அந்தந்[illegible] மக்களோ[illegible] கலந்து சைவ சமயத்துக்கு உயிர் [illegible]டுத்தார்கள். என்பதாக அவரது சமய வாழ்வு எம்[illegible]ம் அழைக்கி[illegible] காவலராக பாடத்திட்டத்தில் இவர[illegible] வரலாறு இ[illegible] காலத்தின் கட்டாயமாகும்.

கே.எஸ். [illegible]வஞானராஜா



# டைனோசர்களுடன் மனிதர்கள் வாழ்ந்தனரா? அமெரிக்க அருங்காட்சியக உரிமையாளர் தகவல்




அமெரிக்காவில் உள்ள க்ரியேஷன் அருங்காட்சியகத்தில் உள்ள டைனோசர் சுவடு ஒன்றைச் சுட்டிக் காட்டி அந்த அருங்காட்சியக உரிமையாளரும் ஆஸ்திரேலியருமான கென் ஹாம் என்ற ஆய்வாளர், டைனோசர்கள் வாழ்ந்த காலத்தில் மனிதர்களும் வசித்ததற்கான சான்று இது என்று அறிவித்துள்ளார்.

இன்றுள்ள விஞ்ஞானிகளின் கருத்துப்படி பூமியில் வாழ்ந்த கடைசி டைனோசர் 60 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்தது என நம்பப் படுகின்றது.

இக்காலத்தில் மனித இனம் தோன்றவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் குறித்த கிரியேஷன் அருங்காட்சியகத்தில் உள்ள அல்லோசயூரஸ் (Allosaurus) வகை டைனோசரின் சுவடு வெறும் 4300 வருடங்களுக்கு முன்னர் உலகம் முழுதும் ஏற்பட்ட வெள்ளத்தில் இறந்த டைனோசருடையது என்பதும் இக்காலத்தில் மனிதர்கள் வாழ்ந்தனர் என்பதும் அந்த அருங்காட்சியக உரிமையாளரின் கருத்தாகும்.

இக்கருத்தை நிபுணர்கள் ஆய்வு அடிப்படையற்றது என மறுத்து வருகின்றனர்.

இந்நிலையில் ஹாம், குறித்த சுவடு சில ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் டைனோசர்களுடன் மனிதர் வாழ்ந்தனர் என்பதற்கு முக்கிய சான்றாகும் எனவும் இதுகுறித்து பைபிளில் கூடத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் கூறுகின்றார்.

அமெரிக்காவில் உள்ள அருங்காட்சியகமான (Creation Museum) கிறியேசன் மியூசியத்தை ஸ்தாபித்த அதன் உரிமையாளரான கென் ஹாம் 9 மீற்றர் நீளமான குறித்த Allosaurus இன் எலும்புக் கூட்டுச் சுவட்டுக்கு Ebenezer எனப் பெயரிட்டுள்ளார். இந்த அருங்காட்சியகத்தைத் தற்போது உரிமை கொண்டாடும் கிறிஸ்தவ அமைச்சு இது குறித்துக் கூறுகையில், இங்குள்ள 50 வீதமான எலும்புச் சுவடுகள் 10 வருடங்களுக்கு முன்னர் கொலராடோவில் கண்டுபிடிக்கப்பட்டவை எனத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கென் ஹாம், 'பரிணாமவியலாளர்கள் டைனோசர்களை உலகம் முழுவதும் பிரசித்தமாக்க அவை சிறுவர்களைக் கவருவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதையே அவற்றின் உண்மை வரலாற்றை அறிவதை விட முக்கியமாக செய்து வருகின்றனர்! ஆனால் எமது மியூசியம் ஒன்றே டைனோசர்களின் சுவடுகளைக் கொண்டு பைபிளில் கூறப்பட்டுள்ளபடியான அவற்றின் உண்மை வரலாற்றை அறிய முயற்சி செய்து வருகின்றது!' என்று சாடியுள்ளார்.

MK

# ஆராய்ச்சிக்காக விண்வெளிக்கு செல்கின்றன எலிகள்



சர்வதேச விண்வெளி ஆய்வகத்துக்கு எலிகளை அனுப்பி ஆய்வு செய்ய நாஸா திட்டமிட்டுள்ளது.

அதி நவீன தொழில்நுட்பக் கூண்டுகளுடன் சர்வதேச விண்வெளி மையத்துக்கு எலிகளை அனுப்ப அமெரிக்கா, ரஷ்யா உட்பட 12 நாடுகள் இணைந்து சர்வதேச விண்வெளி ஆய்வு கூடம் ஒன்றை அமைத்து வருகின்றன. அங்கு பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

குறிப்பாக பாலூட்டி உயிரினங்களுக்காக மன நல ஆய்வும் நடத்தபடு கிறது. இதற்காக எலிகள் மற்றும் சுண்டெலிகளை அமெரிக்காவின் நாஸா மையம் அனுப்புகிறது. எனவே விசேடமான 'ஸ்பேஸ் எக்ஸ் டிராகன்' என்ற சரக்கு ஏற்றி செல்லும் விண்கலம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

மேலும் எலிகளை அனுப்ப விசேட கூண்டுகளும் கொண்ட இந்த விண்கலத்தை நாஸா ஏம்ஸ் ஆராய்ச்சி மையத்தின் தி மொபெட் மீல்ட்' மைய நிபுணர்கள் வடிவமைத்துள்ளனர்.

இந்தக் கூண்டுகள் எலிகள் உயிர் வாழத் தேவையான தண்ணீர் உணவு, வெளிச்சம், சுத்தமான காற்று மேலும் அவை சுதந்திரமாய ஓடி விளையாட வசதியான விதத்தில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் விண்வெளியிலும் பாலூட்டி உயிரினங்களின் மீதான மைக்ரோ புவி ஈர்ப்பு சக்தியின் விளைவுகள் குறித்து தெரிந்து கொள்ள முடிவதுடன் விண்வெளியில் தங்கியிருக்கும் வீரர்களின் உடல் நலத்தைக் காக்கும் வகையில் மருந்துகள் மற்றும் சுகாதார மேம்பாடு போன்றவை மேற்கொள்ளப்பட உள்ளன.

# அழிவின் பாதையில் கொன்யாக் மக்கள்

## எழுதப்படாத சரித்திரம்

இந்தியாவில் வாழ்ந்து வரும் கொன்யாக் மக்களின் அரிய புகைப்படங்கள் வெளியாகி உள்ளன.

இந்தியாவின் நாகாலாந்து என்ற பகுதியில் வாழ்ந்து வரும் கொன்யாக் பழங்குடி மக்களின் அரிய புகைப்படங்களை புகைப்படக்காரர் ஜீன் க்ரிஸ்டீன் வெளியிட்டுள்ளார்.

வேட்டைக்காரர்களாக வாழ்ந்து வந்த கொன்யாக் மக்கள் தங்கள் முகங்களில் பச்சை குத்திக் கொண்டும், விலங்குகளின் தோல்கள், மயிர்கள், கொம்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்தியும் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வாழ்ந்து வரும் கொன்யாக் மக்கள் இன்னும் 10 அல்லது 15 வருடங்களில் மண்ணில் புதைந்து விடுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் முதியவர்கள் ஆனதால் தற்போது இவர்களின் இனமும் கலாசாரமும் அழியப்போகின்றன என்பது சிறிது வருந்தக்கூடிய விடயமாகும்.

கொன்யாக் மக்களின் வாழ்க்கை வரலாறு ஒரு பெரிய-எழுதப்படாத சரித்திரம். மேலும் அவர்கள் ஒரு சவாலான நடப்பு ஆண்டையும், அழியப்போகும் வருங்காலத்தையும் எதிர்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



# தொடர்ச்சியாக 500 தினங்களுக்கு பூமியைச் சுற்றி வந்த எக்ஸ் - 37-பி விமானம்




## வெளிவராத மர்மம்?

எக்ஸ் -37-பி எனப்படுவது அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட ஆளில்லா ரோபோட்டிக் விமானம் ஆகும்.

இந்த விமானம் தொடர்ச்சியாக 500 நாள்களுக்கு பூமியின் சுற்று வட்டப் பாதையில் வலம் வந்துள்ளது. இதற்கான காரணம் இதுவரை மிக மர்மமாக உள்ளது. இவ்விமானம் பற்றி அறியப் பட்ட தகவல்கள் கீழே!

கலிபோர்னியாவில் போயிங் விமான நிலையத்தால் கட்டப்பட்ட எக்ஸ் -37-பி ஆர்பிட்டல் விண்வெளி வாகனமான இது, அமெரிக்க விமானப் படைக்காக பரீட்சார்த்தமாகத் தயாரிக்கப்பட்டது. என்டேவர் விண் ஓடத்தின் காற்பகுதி அளவு கொண்டுள்ள இவ்விமானம், புவிச்சுற்று வட்டப் பாதையில் இருந்து வளி மண்டலத்துக்குள் நுழையும்போது தீப்பிடிக்காமல் இருப்பதற்கான வெப்பத்தைத் தாங்கும் உலோகத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது இவ்விமானம் மணிக்கு 28 044 கிலோமீற்றர் வேகத்தில் தரையில் இருந்து 350 கி.மீ. உயரத்தில் புவியைச் சுற்றி வருகின்றது. இதனால் தரை இறங்க முடியும். ஆனால் எப்போது என்பதுதான் மர்மமாக உள்ளது.

2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதியன்று ஓர் ரொக்கெட் மூலம் விண்ணில் முதலில் செலுத்தப் பட்டு 2010 டிசெம்பர் 3 ஆம் திகதி சிறிய சேதத்துடன் புவியில் தரை இறங்கியது. இரண்டாவது தடவையாக கேப் கனவெரல் ஏவுதளத்தில் இருந்து 2012 .05.11 இல் ஏவப்பட்ட அந்த விமானம் 500 நாள்களைக் கடந்து இன்னமும் தரை இறங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது உளவு நடவடிக்கைக்காகவா அல்லது வேறு தேவைகளுக்காகவா விண்ணில் சுற்றி வருகின்றது என்பது இன்னமும் தெளிவாகவில்லை!

ஆளில்லா இவ்விமானம் கல்லியம் சோலர் படல்களில் இருந்து லித்தியம் அயம் பற்றரிக்கு மின்னைப் பெற்றுத் தனது சக்தித் தேவைக்குப் பயன்படுத்துகின்றது.

# கணினிகளை இயங்க வைக்கும் 'எலக்ட்ரோனிக் இரத்தம்' அமெரிக்காவில் தயாராகுகிறது.

உயிரினங்கள் இரத்த ஓட்டத்தில் இயங்குவதுபோல கணினிகளை இயங்க வைக்கவென 'எலக்ட்ரோனிக் இரத்தம்' தயாராகி வருகிறது. கணினிகளின் யுகமான தற்காலத்தில் கணிப்பொறிகளின் பயன்பாடு மிகுதியாக உள்ளது.

எனவே உருவில் சிறியதும், செயற்றிறன் கூடியதுமான கணினிகளின் தேவை அதிகரித்து வருகிறது. மிகச் சிறந்த அதிவேக கணினிகளான சிறந்த கணினிகள் மலைக்க வைக்கும் திறன் கொண்டவை என்றாலும் அதிலும் சில பிரச்சினைகளும் உள்ளன. சிறந்த கணினிகள் மிக அதிக இடத்தை அடைத்துக் கொள்ளும். அதிகமான மின்சாரத்தைப் பயன்படுத்தும். மேலும் விரைவில் அதன் பாகங்கள் சூடாகி செயற்றிறன் குறையும்.

> எலக்ட்ரோனிக் பிளட் திரவத்தை ஆற்றல் வழங்குவதற்காக பயன்படுத்தினால் மிக அதிக மின்சாரத்தை மிச்சம் பிடிக்கலாம்.

அதன் வெப்பத்தைத் தணிக்க மாற்று வழிகளைக் கையாளவும் நிறைய மின்சாரம் தேவைப்படும்.

கணினிகள் அதிகம் சூடாகாமல் தடுக்கவும், அதிகப்படியான மின்சாரத்தை வீணாக்காமல் கணினிகளை இயக்கவும் புதுமையான வழியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் கணினி உலகின் முன்னணி நிறுவனமான ஐ.பி.எம். நிறுவனத்தினர். அவர்கள் 'எலக்ட்ரோனிக் பிளட்' எனப்படும் வழுவழுப்பான திரவத்தை உருவாக்கி வருகிறார்கள். உடலில் இரத்தம் அவ்வப் போது சுத்திகரிக்கப்பட்டு மூளை மற்றும் உடலுறுப்புகளுக்குத் தேவையான ஆற்றலை வழங்குவது போல இந்த எலக்ட்ரோனிக் இரத்தம் கணினிகளுக்குத் தேவையான ஆற்றலை வழங்குகிறது. மேலும் அதன் புரோசஸர்கள் எளிதில் சூடாகாமலும் தடுக்கின்றன.

'எலக்ட்ரோனிக் பிளட்' தயாரிப்புக் குழுவிலுள்ள விஞ்ஞானி புருனோ மைக்கேல் இதுபற்றி கூறுகிறார்.

அமெரிக்காவில் டேட்டா சென்ரர்கள் மட்டும் பயன்படுத்தும் மின்சாரம் நாட்டின் மொத்த மின் பயன்பாட்டில் 2 சதவீதமாகும். உலக அளவில் அதிக மின்சாரம் நுகரும் நாடுகளில் அமெரிக்கா 5 ஆவது இடம் வகிக்கிறது.

> அமெரிக்காவில் டேட்டா சென்ரர்கள் மட்டும் பயன்படுத்தும் மின்சாரம் நாட்டின் மொத்த மின் பயன்பாட்டில் 2 சதவீதமாகும். உலக அளவில் அதிக மின்சாரம் நுகரும் நாடுகளில் அமெரிக்கா 5 ஆவது இடம் வகிக்கிறது.

கணினிகளில் சிறந்த கணினிகள் மிக அதிக மின்சாரத்தை உறிஞ்சக்கூடியவை. உதாரணமாக பீட்டாபிளாப் என்ற சிறந்த கணினி காற்பந்து மைதானத்தில் பாதி அளவு உருவம் கொண்டது. இது விநாடிக்கு ஜீகு வாட்ரிலியன் பைட்ஜீ வேகம் கொண்டது. (அதாவது ஒரு வினாடி நேரத் தில் கோடிக் கோடி பைட் தகவல்களை பரிமாற்றம் செய்யக்கூடியது).

அதிக மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள் ளும் இந்தக் கணினியின் 'சிப்'கள் விரைவிலேயே சூடாகிவிடும். ஆனால் எலக்ட் ரோனிக் பிளட் திரவத்தை ஆற்றல் வழங்குவதற்காக பயன்படுத்தினால் மிக அதிக மின்சாரத்தை மிச்சம் பிடிக்கலாம். அத்துடன் சிப்களை குளிர்ச்சியாக வைப்பதற்கும் இந்தத் திரவம் பயன்படும். இதனால் எதிர்காலத்தில் சிறந்த கணினிகள் கூட மேசைக் கணினியின் உருவத்தை அடையும். அந்த அதிசயம் இருபது ஆண்டுகளுக்குள் நிறைவேறும் என்கிறார் அவர்.

# அங்கோலாவில் ஆழ்கடல் புதைகுழி



அங்கோலாவின் கடற்கரைக்கு அப்பால் உள்ள ஆழ்கடல் பகுதியில் சந்தர்ப்பவசமாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஆழ்கடல் புதைகுழி ஒன்று, கடந்த காலங்களில் இறந்த பெரிய கடல் பிராணிகளுக்கு ஏற்பட்ட முடிவைப் பற்றி ஆராயத் தங்களுக்கு உதவும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

எண்ணெய் மற்றும் எரிவாயுத் தொழில் நிறுவனங்களால் ஆழ்கடல் நிலப்பரப்பில் எடுக்கப்பட்ட காணொலிக் காட்சிகள் அந்தப் பகுதியில் திமிங்கிலச் சுறா ஒன்றும், மூன்று டெவில் ரே மீன்களும் பல்வேறு நிலைகளில் அழுகிய நிலையில் காணப்படுவதைக் காட்டுகின்றன.

இந்த உடல்கள் ஒவ்வொன்றையும் தலா 50 மீன்கள் சுற்றி வளைக்கின்றன. ஆனால் சூழ்ந்திருக்கும் இந்த மீன்கள் எல்லாமே விஞ்ஞானிகள் எதிர்பார்த்த மீன்கள் அல்ல.

இந்த இறந்த உயிரினங்கள் ஒவ்வொன்றும் அதற்கே உரித்தான தனியான , சிக்கலான உயிரினச்சூழல் அமைப்பை உருவாக்குவதாகக் காட்டுவதாக பி.பி.சியின் அறிவியல் செய்தியாளர் கூறுகிறார்.